www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 10/00
දිනමුරසු වාරමලර්
நவ்.05-11,1995

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 92

# புதிய அரசுக்கு புலிகளின் முதல் எச்சரிக்கை


எக்ஸ்ரே ரிப்போர்ட்





## மீனா வீசிய வலை

## நடிகைகளின் வாக்குமூலம்



# குழந்தை ஒன்று தலை இரண்டு

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## தேவை தெளிவு

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
வரவு செலவு திட்டத்தின்மீது
பாராளுமன்றத்தில்
ஆற்றப்பட்டுவரும் உரைகளில்
ஆரோக்கியமான தன்மைகள்
காணப்படுவது மகிழ்ச்சியானது.

"இனப்பிரச்சனையா?
அது எங்கே இருக்கிறது?
ஈழத்தை தவிர
எல்லாவற்றையும் கொடுத்துவிட்டோமே"
என்றெல்லாம்-
இறுமாப்போடு ஒலித்த குரல்கள்
அடங்கிப்போயிருக்கின்றன.

ஆளும் கட்சித் தரப்பும்
எதிர்க்கட்சிகளும்
அரசியல் தீர்வின் அவசியத்தை
மறுக்காமல் பேசுவது
சிறப்பான மாற்றமாகும்.

ஆனாலும்-இது மட்டும்
போதுமானதல்ல என்பதே
கவனிக்கத்தக்க விடயம்.

தீர்வை வைக்கத் தயார்
என்ற பேச்சுக்கள் கேட்கின்றன.
தீர்வுத் திட்டத்தை
முன்வைக்கும் முயற்சிகள் மட்டும்
முகம் காட்டாமல் இருக்கின்றன.

எந்தக் கட்சி
ஆட்சியில் இருந்தாலும்
அந்தக் கட்சியின் தோளில் மட்டுமே
சிக்கலான பிரச்சனைகளைப்
போட்டுவிட்டு தப்பித்துக்கொள்ளும்
தந்திரத்தை எதிர்க்கட்சிகள்
பின்பற்றுவது என்பது
இன்னமும் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கு இணைந்திருக்கும்
விவகாரத்தில்-புலிகள் உட்பட
சகல தமிழ்க் கட்சிகளும்
தமது கருத்தைக் கூறியுள்ளன.

ஆளும் கட்சியும் சரி
பிரதான எதிர்க்கட்சியும் சரி
இதுவரை அந்த விவகாரத்தில்கூட
தமது கருத்தைக் கூறவில்லை.

நிரந்தரத் தீர்விற்கான
அடிப்படை விடயத்தைக்கூட
பேசுவதற்கு- தமது கருத்துக் கூறுவதற்கு
பிரதான கட்சிகளே
தயங்குவது, தீர்வு எட்டப்படுதலை
சந்தேகத்துக்குரியதாக்கி வருகிறது.

வெளிநாட்டு விஜயங்கள் மூலம்
இனப்பிரச்சனை தீர்வில்
அக்கறை இருப்பதை
அந்த நாடுகளுக்கு அரசு
உணர்த்தலாம்- உதவி பெறலாம்.
ஆனால்-தீர்வை உருவாக்கும்
பொறுப்பு இந்த நாட்டின்
அரசியல் சக்திகளது கரங்களிலேதான்
இருக்கிறது.
துணிச்சலும், நேர்மையும்
இருந்தால் சாதிப்பது சிரமமல்ல.

வெளிநாட்டவர்களுக்கு-
பிரச்சனையை விளங்கப்படுத்துவது
இருக்கட்டும்-முதலில்
இனப் பிரச்சனையின் ஆணிவேரை
நம்நாட்டு அரசியல் சக்திகள்
அறிந்துகொள்வது முக்கியம்.

குட்டிமணியும்-ஜெகனும்
கொல்லப்பட்ட பின்னர்தான்
தமிழ் இளைஞர்கள் ஆயுதமேந்தினார்கள்
என்று சொல்கிறார்
ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர்.

இலங்கையை பௌத்த- சிங்கள நாடாக
பிரகடனம் செய்த
1971ம் ஆண்டு அரசியலமைப்பை
தமிழ் பேசுவோர் அங்கீகரித்தனர்
என்று சொல்கிறார் காணியமைச்சர்.

70க்கு பின்னர்தான்
இனப்பிரச்சனை ஏற்பட்டது
என்று சொல்கிறது
பிரதான எதிர்க்கட்சி.

பொறுப்புக்களை ஒருவர்மீது ஒருவர்
சுமத்தித் தப்பிக்கொள்ளும் அவசரத்தில்
உரிமைப் போரின் வரலாற்றை-
இனப்பிரச்சனையின் தோற்றத்தை
சுருக்கியும்-திரித்தும்
புரிதல் இல்லாமல் தவறாகவும்
பாராளுமன்றத்திலே
உரை ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்கள்
ஒற்றையாட்சி அரசியலமைப்புக்கள்
எதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை.
எதிர்த்தே வந்திருக்கிறார்கள்.

இந்த அடிப்படை உண்மையை
தென்னிலங்கைத் தலைவர்கள்
புரிந்துகொண்டால்
சிறந்த தீர்வுக்கு வருவதில்
அதிக சிரமம் இருக்காது.

எந்த பிரச்சனைக்கு தீர்வு
காண வேண்டுமானாலும்
முதலில் அந்தப் பிரச்சனை பற்றிய
தெளிவு முக்கியம்.
இனப்பிரச்சனை விடயத்திலும்
அது அவசியம்.

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கண்ணீர் சிந்தாத விழிகள் இல்லை!

இந்த கவலையும், கண்ணீரும் நிரந்தரமானதா? அதுவும் இல்லை. வாழ்விலே பிரச்சனைகள், ஏமாற்றங்கள், இழப்புக்கள் சகஜம்-இதற்காக நாம் கவலைப்படுவதால் ஏதும் நன்மை ஏற்படப் போகிறதா?

அருமைப் பிள்ளைகளை இழந்து கண்ணீர் விடும் பெற்றோர்கள், பெற்றோரை இழந்து கண்ணீர் விடும் பிள்ளைகள், வேலைத்தலங்களில் பிரச்சனைகளால் கண்ணீர்விடும் உள்ளங்கள், பொய்க் குற்றச்சாட்டுக்களால் கண்ணீர் சிந்தும் கண்கள், எங்கும் கவலையும் கண்ணீரும் மலிந்து கிடக்கும் காலம்.

இப்படியெல்லாம் கஷ்டப்படுவதைவிட மரித்துப்போனால் நலமாயிருக்கும் என்று கூறிடும் உள்ளங்கள் தான் எத்தனை? தனிமை எனை வாட்டுகிறதே! கடன் தொல்லைகளால் அவதியுறுகின்றேனே? எதிர்காலமே கேள்விக்குறியாக தெரிகிறதே! குடும்பத் தலைவனை இழந்துவிட்டோமே! இனி என்ன செய்வோம்? என்றெல்லாம் அங்கலாய்ப்போர்தான் எத்தனை பேர்...?

ஆனால் நாம் கவலைப்படவேண்டியதில்லை.

சங் 55:22ல் கூறியுள்ளதன்படி எம்முடைய மனப்பாரத்தை கர்த்தர்மேல் வைப்போம்: அவர் எம்மை ஆதரிப்பார். கண்ணீரோடே விதைப்பவர்கள், கெம்பீரத்தோடே அறுப்பார்கள் என்றும் சங்கீதம் கூறுகிறது. எனவே நாம் கவலைப்படவோ, கண்ணீர் சிந்தவோ வேண்டிய அவசியமில்லை. எம் கண்ணீரைத் துடைக்க ஒரு கரம் உண்டு. அது யாருடைய கரம்? ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கரம். யோவான் 16:20ல் "உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்" என்று கூறியவர், கவலைகள் கண்ணீர் போக்கி சந்தோஷம் நல்க வல்லவராயுள்ளார்.

எம் மனப்பாரங்களை அவரிடம் விட்டு தெய்வ சந்தோஷத்தை பெற்றுக்கொள்வோம்.

ஜே.புளோரன்ஸ்-கெங்கல்ல.

## ஆன்மீகம்



## சிந்தைக்கினிய சீர் மொழிகள்

தன்னிடம் ஒன்றுமில்லை. தன்னால் ஆவது ஒன்றுமில்லையென தன்னைத் தாழ்த்திக்கொள்பவன் ஞானி. தன்னால் முடியாதது ஒன்றுமில்லை. தானே உயர்வானவன் என்று எண்ணுபவன் கர்வி.

தாழ்மை ஒருவனை உயர்த்துகிறது. அறிவுள்ளவன் தேர்ந்தெடுப்பது தாழ்மையைத்தான். கனி நிறைந்த மரக்கிளையும், கதிர் நிறைந்த நெற்பயிரும் மண்மீது தானே தலைசாய்க்கின்றன.

அறிஞர் அலி(ரழி)

உள்ளச்சமில்லாத தொழுகை, பேணுதல் இல்லாத நோன்பு, சிந்தனையற்ற கல்வி, ஒழுக்கமில்லாத செயல், தர்மம் செய்யாத செல்வம், உபகாரம் செய்யாத உறவு, அளவற்ற சுகபோகம், தூய்மையில்லாத பிரார்த்தனை-இவைகளால் எந்தப் பிரயோசனமும் கிட்டாது நன்மையும் கிடையாது.

அறிஞர் அலி(ரழி)

மனிதா! இறை நேசர்களான அவ்லியாக்களைக் குறைகூற முற்படாதே. ஏனெனில் தூய்மையான அந்த மகான்களை கண்ணியம் செய்யாதவன் இறைவனின் கோபத்துக்கு ஆளாகிவிடுகிறான். மேலும் இறை நேசர்களை மறுப்பவர்களுக்கு ஈமான் இல்லாத இழிவான மரணம் ஏற்படும் என ஆன்றோர்கள் கூறியுள்ளனர்.

ஆரிபுல் ஹுதா(ரஹ்)

திஹாரிய ஹாரித் (அருஸ்)

## கவிதைப்போட்டி இல-89

### பரிசுக்குரிய கவிதை

### நோயின் புதல்வர்கள்!

நாங்கள்
மனிதக் குழந்தைகளல்ல;
நோயின் புதல்வர்கள்!
போர் வெறி தணியாத
பூமியில்
நீங்களும் எங்களைப்போல
நிர்வாணமாக
நிற்கத்தான் போகிறீர்கள்

கு.திருமால்-அமிர்தகழி

### மனிதனையே புசிக்கிறதே!

வேரோடே மரம் தறித்தார்.
காடழிந்து போனதிங்கே!
படைக்கலங்கள் ஆர்ப்பரிப்பால்
நாடழிந்து போனதிங்கே!!
இயற்கை அழிந்திங்கு
செயற் கலங்கள் ஓலமிட
மண்ணே வரண்டிங்கு
மனிதனையே புசிக்கிறதே!(ா)?

க.சுசீலா- மட்டக்களப்பு.

### ஏமாளி

இலங்கையில் வேண்டாம்
இன்னுமொரு
சோமாலியா!

இவ்வுலகில் நாங்கள்
இன்னமும்தான்
ஏமாளியா?

ஏ.எச்.ராஸீன் மொகமட்
ஏத்தாலை.



### போசாக்கு குறைவு

யுத்த பூமியில்
ஆயுதங்களுக்கெல்லாம்
போதிய போசாக்கு
கிடைக்கும்போது
எங்கள் வயிற்றுக்கோ?...

எம்.ஜேசுதர்ஷினி
அக்கரைப்பற்று-8.

## கவிதைப் போட்டி இல-92



**கவனியுங்கள்!**

ஒரே சூலில் பிறந்த 15 குழந்தைகள். ஏற்கனவே முரசில் வந்த செய்திதான். இப்போது கவிதைப் போட்டிக்கு வந்திருக்கிறது. எண்ணத்தில் உதிக்கும் கவிதையை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள்- அசத்துங்கள். 11.3.95க்கு முன்பாக நீங்கள் அனுப்பவேண்டிய

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 92
தினமுரசு வாரமலர்
த.பெ.இல—1772,
கொழும்பு.

### 'அம்மண வீரர்'

சோமாலிய
சோக களத்தில்
சோற்றுச் சமர் புரியும்
தோற்றுப்போன அம்மண வீரர்!

பிரேமராணி பேரின்பராஜ்
கொழும்பு-13.

### அக(வ)திகள்

அநியாய யுத்தத்தால்
அகதிமுகாமில்
அடைக்கலம் புகுந்து
அக(வ)திகள் ஆகி
அவதியுறும் நாங்கள்
ஆதி மனிதர்களாம்.!!

ஏகாம்பரம் கயல் ஆரையம்பதி-2

### கலாசாரம்

வீடின்றி உறங்குவோம்
உணவின்றி பசியாறுவோம்
உடையின்றி அலங்கரிப்போம்
போரின்றி பொழுதும் மறையாது
இதுதான் எங்கள் கலாசாரம்

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில்-2.

"ஆடையின்றிப் பிறந்து எம்
ஆசைகளையும் புதைத்து-போர்
வாடையால் வந்த பரிதவிப்பு
வந்திடுமா வசந்த சுதந்திரம்!

அமிர்த-சந்திரபாலன்
திருகோணமலை.

### வாழ்வதா சாவதா

போர் தொடுக்கும் நாட்டிலே
யார் கொடுப்பார் ஒரு முழத்துண்டு
அம்மணத்தில் எம் உடம்பின்
அடிவயிறும் காய்ந்து போச்சு
பால் வடியும் இந்த பாசுரங்கள்
பட்டினியில் வாழ்வதா சாவதா?

தெ.லோஜனா-கொழும்பு-15.

### யுத்தம்

ஒரு யுத்தம் சிரிக்கின்றதால்-இவர்களின்
மொத்தமும் அவிழ்கின்றது
நித்தம் ஒரு கனவு-இவர்களின்
நினைவில் மாய்கிறது!

மாத்தளை தமிழ்ச்செல்வன்.

### கொடிது!

கொடிது
கொடிது-
இளமையில்,
அகதியாதல்
கொடிது.

எம்.என்.எம். நஃாஜி
அக்குறணை-3.

### நிர்வாண உண்மை

சோகமான
சொந்த வாழ்க்கை
யுத்தம் எரித்த தேசத்தின்
சாம்பலான உயிர்களில்
எஞ்சிய பிஞ்சுகள்.

ஷர்மி-கண்டி.

### போர் தந்த பரிசு

போர் தந்த பரிசு-எங்கும்
பார்மேலே பவனிவர.
பஞ்சத்தின் கொடுமை- இங்கு
பளிச்சென்று தெரிகிறது.

எஸ்.பீ.டீன்-கற்பிட்டி.

### ஆசைகள்

கூடி விளையாட ஆசை
பள்ளி செல்ல ஆசை
பாடம் படிக்க ஆசை
நீர் குடிக்க ஆசை
நிறைய சாப்பிட ஆசை
உடை உடுத்த ஆசை
உலக மக்களை காண ஆசை
அம்மா என்றழைக்க ஆசை

நா.சஞ்சீவன்.

### அணிவகுப்பு

அங்கே ஆயுதச் சந்தையில்
அரசியல் தலைவர்கள்
அணிவகுப்பு!
இங்கே அனாதைச் சிறுவர்கள்
அரை வயிற்று சோற்றுக்கு
அணி வகுப்பு!

எஸ்.வாசு-அக்கரைப்பற்று-08.

### துயரக் கோலங்களோ?

துப்பாக்கித் தாலாட்டில்
தூங்கும் குடாநாட்டில்
துர்ப்பாக்கிய சிறுவர்களின்
துயரக் கோலங்களோ?

பொகவந்தலாவ
எஸ்.கோடீஸ்வரன்.

### வெறுமை

உள்ளமும் வெறுமை-எங்கள்
உடல்களும் வெறுமை.
வானமும் வெறுமை-எங்கள்
வாழ்க்கையே வெறுமை.

ஜி.முத்து-வெல்லம்பிட்டிய.

### யுத்தம்

விட்டுவைத்தவர்களை
வறுமை
தொட்டுக்கொண்டதோ?

இ.சுசிதர்சினி
அக்கரைப்பற்று-7.

### இறைவனை தேடுகின்றோம்

மனிதரில்
இறைவனைத் தேட
மண்ணுலகில்
வந்து உதித்த
பாவிகள் நாம்!

பவான்-இலண்டன்.

## வாசகர் சாலை

### சுட்டிக்காட்டுகிறார்

அன்பின் தினமுரசே!

ஹப்புத்தளையூர் லெனாட் குமார் போன்றவர்கள் பிரசுரித்த கதைகளை இசகு பிசகில்லாமல் மீண்டும் எழுதி உனக்கே கண்கட்டி வித்தை காட்டுகிறார்கள். சற்றே ஆராய்ந்து பார். வடக்கு, கிழக்கு செய்திகளை உடனுக்குடன் புதிய படங்களுடன் தரும் உனக்கு என் நன்றிகள். உன் சேவை தொடர என் வாழ்த்துக்கள்.

ஆர்.குமார், நாவலப்பிடிய.

□□

அன்பு முரசே!

அரசியல் விடயங்களை உடனுக்குடனும், பக்க சார்பற்றும் வழங்குவதில் உனக்கு நிகர் நீதான். உன்னில் மிளிரும் அனைத்து ஆக்கங்களும் பிரமாதம். உன் சேவை பல்லாண்டு வாழ எனது பலகோடி வாழ்த்துக்கள். வாழ்க! வளர்க!!

றிஸானா றசீட்-கல்ஹின்னை.

எஸ்.ஸ்ரீஹரி- இரத்தினபுரி.

□□

என் இதயம் கவர் இனிய முரசே!

நீ வாரா வாரம் அள்ளி வரும் அனைத்து அம்சங்களும் என் மனதைக் கவர்கிறது. எனவே தான் உடன் உனது சந்தாதாரரானேன். அதுசரி, "மகளிர் மட்டும்" பரிசுப் போட்டி ஒரு தொகுதியை முடிந்து விட்டு மீண்டும் ஒரு வாய்ப்பு என்று மகளிருக்கே ஒதுக்கி இருக்கிறாயே, ஏன்? ஆண்களுக்கு மட்டும் இந்த வாய்ப்பு கிடைக்காதா? பாவம்! ஏன் இப்படி ஆண்களைப் புறக்கணிக்கலாமா?

றிஸ்வானா நஸார்-சாய்ந்தமருது-16.

□□

வாரா வாரம் தாய் நாவலின் சூடு ஏறிக்கொண்டிருக்கிறது. இப்படியொரு நாவல் தொடரை தரும் முரசின் துணிச்சலுக்கு சபாஷ்!

வே.ஏபிரஹாம்-வவுனியா.

### வருந்துகிறார்

என்னால் ஏற்பட்ட ஒரு சிறுபிழை காரணமாக 19.02.95 அன்றைய தினமுரசில் இடம் பெற்ற கல்யாண கனவுகள்" என்ற எனது சிறுகதை ஏற்கெனவே வேறோர் தேசிய வார இதழில் இடம்பெற்றுவிட்டது.

இனிமேல் என்னால் இப்படியான பிழைகள் கட்டாயம் நிகழாது. தயவு செய்து இதற்கான உங்களின் மனப்பூர்வமான மன்னிப்பை எதிர் பார்க்கிறேன்.

ஹப்புத்தளையூர் எப்.லெனட்குமார்.

□□

அன்பின் முரசே!

தமிழ் பேசும் அனைத்து உள்ளங்களின் கைகளில் தவழ்ந்து விடுவாய். சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் பக்கச் சார்பின்றி உண்மைத் தன்மையை வெளிப்படுத்தி விடுவாய். அதனால் உன்மேல் எத்தனை பேர் கோபம். ஆனாலும் அதைப் பொருட்படுத்தாது நீ வளர்ந்து முழுமதி போல்வர என் வாழ்த்துக்கள்.

□□

அன்பின் முரசே!


நீ சுமந்து வரும் அத்தனை ஆக்கங்களும் மிகவும் பிரமாதம். குறிப்பாக தாய் தொடர்கதை, ரசிகனின் இலக்கிய நயம். போன்றவை உன்னை மேலும் அழகூட்டுகின்றது.

ஷாந்தி தங்கவேல்-டிக்கோயா.

"மகாசூலம்" தொடர்கதை மூலம், "மகா பயங்கரம்" தருகிறார் மர்ம(?!..)க் கதாசிரியர். வாராவாரம் விறுவிறுப்பைக் கூட்டிக் கொண்டு.....செல்லும் தொடர்கதை அருமை!

ஓட்டமாவடி- அறபாத் எழுதி யிருந்த சிறுகதைக்கு; கதைக்கு ஒவ்வாத 'பொட்டு' வைத்த பெண் படத்தை; போட்டுவிட்ட 'தவறுதலை?!' கதைப்பகுதிப் பொறுப்பாளர் கண்காணிக்காமல் விட்டு விட்டதேனோ?!.

கோட்டைமுனை-"முத்து மணி"- பதுளை.



### அம்மாவின் கையாக

தங்கள் பத்திரிகையை வாரம் தவறாமல் படிப்பவன் நான். தமிழ்ப் பத்திரிகைகளை காணத் துடிக்கும் எமக்கு 'தினமுரசு' ஒரு வரப்பிரசாதம். உண்மை, நியாயம், ரசனை, பொது அறிவு இத்தனையும் பத்திரிகையின் பக்கங்களில் பார்க்கும்போது உண்மையில் மனம் சந்தோஷப்படுகிறது. வேலைத்தலத்தில் ஆற்றிய மொழி! உப்பில்லா உணவாக! தினமுரசைக் கண்டதில் இருந்து வாரத்தில் ஒருமுறையாவது அம்மாவின் கையால் சாப்பிட்ட மனத்திருப்தி! தினமுரசின் பெருமை திக்கெட்டும் எட்ட என் நல்லாசிகள்

MR.K.RAMESAN
28,QUEENSBURY ROAD
KINGSBURY
LONDON NW9 8LT U.K

உனது ஊகங்கள் பல நிஜமாகிவிடுவது எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது.

ராஜதந்திரியின் -கதிர்காமரின் அமெரிக்க விஜயம் பற்றிய அலசல் பக்கம் சாராத விமர்சனமாக அமைந்தது. பாராட்டுக்கள். அ.ஜோதீஸ்வரி-கொழும்பு.-5

ஒவ்வொரு வாரமும் உன்னிலிருந்து ஊற்றெடுக்கும் ஊற்றுக்கள் எமக்கு வெவ்வேறு சுவைகளைத் தருகின்றன. உனது அபாரத் திறமைக்கு எனது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்!

எம்.சி.எம். பஹ்மி-
கெகுனுகொல்ல.

□□

வண்ண முரசே! என்றும் வண்டு தேன் குடிக்க நாடிச் செல்வது மலரையே! அதே போன்று வாசகர் நாம் முரசு கொட்டும் தேனை வாரம் ஒரு முறை அள்ளிப்பருகி ஆனந்த மடைகின்றோம். நீ மென்மேலும் சிறப்புடன் திகழ என் வாழ்த்துக்கள்.

பர்ஸானா ராஸிக்
அக்குறணை.

# ஜனாதிபதியின் செயலர் மீது பாய்ச்சல்! கடும் ஆட்சேபத்தோடு பிரபா கடிதம்!!

## அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளவும் புலிகள் நிபந்தனை

**பாதைத் திறப்பு, பொருளாதார தடை நீக்கம் குறித்து அரசும் அதன் பிரசார சாதனங்களும் தவறான தகவல்களை வெளியிட்டுவருவதாக பிரபாகரன் கூறியுள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு பிரபா எழுதியுள்ள கடிதம் கடும் சொற்பிரயோகங்களை கொண்டுள்ளது.**

26.02.95 அன்று புலிகளது தலைவர் பிரபாகரன் அனுப்பியுள்ள கடிதத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

### தாமதம் ஏன்?

"16.02.95 திகதியிடப்பட்ட உங்கள் கடிதம் கிடைத்தது. நன்றி.

உங்களது செயலர் திரு.பாலபட்டபெந்தி அவர்களுக்கு 13.02.95 அன்று ஒரு முக்கிய கடிதம் அனுப்பிவைத்தோம். அதற்கான பதிலை எதிர்பார்த்திருந்த காரணத்தால் உங்களுக்கு பதில் எழுதத் தாமதமாகியது. 25.02.95 அன்று பாலபட்டபெந்தி தமிழ்ச் செல்வனுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். மிகவும் சுருக்கமான அந்தக் கடிதத்தில் நாம் எழுப்பிய பாரதூரமான விடயங்கள் எதற்கும் பதில் தரவில்லை.

மோதல் தவிர்ப்பு உடன்பாடு சம்பந்தமான நடைமுறைகள், கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல், பேச்சுக்களை தொடருதல் போன்ற பிரச்சனைகள் எதற்கும் திரு.பாலபட்டபெந்தி பதிலளிக்கவில்லை.

இந்தப் பிரச்சினைகள் யாவற்றையும் ஓரம்கட்டிவிட்டு வடக்கில் வாழும் தமிழ் மக்களின் அன்றாட அவலங்களைப் போக்கும் வகையில் அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துவிட்டதாக அவர் மிகைப்படுத்திக் கூறியுள்ளார்.

யாழ் குடாநாட்டிற்கும் வட மாநிலத்திற்கும் மத்தியில் பாதை ஒன்றை திறப்பது சம்பந்தமாக புலிகள் உறுதியான நிலைப்பாடொன்றைக் கொண்டுள்ளார்கள் என்பதை அரசாங்கம் நன்கறியும்.

இந்த முக்கிய விடயத்தில் எமது நிலைப்பாட்டை உதாசீனம் செய்துவிட்டு பூநகரி, ஆனையிறவுப் பாதைகள் மக்களுக்காக திறந்துவிடப்பட்டுள்ளதாக, ஒரு தலைப் பட்சமான முறையில் அறிவிக்கப் பட்டுள்ளது.

அந்த அறிவிப்பானது பொய்யான பிரசார இயக்கமொன்றை உருவாக்க உதவலாமே தவிர சமாதான சூழலை முன்வைக்க உதவப்போவதில்லை.

இதையிட்டு நாம் மிகவும் ஏமாற்ற மடைந்துள்ளோம்.

### ஒருதலைப்பட்ச அறிவிப்பு

இந்த ஒரு தலைப்பட்சமான அறிவிப்பு ஒரு விடயத்தை தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

அதாவது பரந்து பட்ட தமிழ் மக்களின் அவசரத் தேவைகளுக்கு மேலானதாக, எமது மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் இராணுவத்தின் போர்த்தந்திரோபாய நலன்களுக்கு அரசாங்கம் முதன்மை கொடுக்கின்றது.

பொருளாதார தடைகள் முற்றாக நீக்கப்படவில்லை என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

பெற்றோல், டீசல், வாகன உதிரிப் பாகங்கள், உரவகைகள், பற்றரிகள் போன்ற எமது மக்களின் சமூக பொருளாதார வாழ்வுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் இராணுவ நடவடிக்கைக்குரிய பொருட்கள் என்று முத்திரை குத்தப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளன.

தடைநீக்கப்பட்டதாகக் கூறப்படும் பொருட்களைக்கூட வவுனியாவில் இராணுவத்தினர் தடைசெய்வதால் அவை மக்களை வந்தடைவதில்லை.

நிலமை இப்படியிருக்க சகல அத்தியாவசியப் பொருட்கள் மீதும் தடைகள் நீக்கப்பட்டு விட்டதாக திரு.பாலபட்டபெந்தி அவர்கள் எமக்கு அறியத்தருகிறார்.

### தவறான பிரசாரம்

இது உண்மைக்கு மாறான பொய் பிரசாரமாகும். இவற்றால் எமது மக்களின் துன்பத்தை குறைத்துவிட முடியாது. சமாதான நலனும் பேணப்படாது.

தற்காலிக மோதல் தவிர்ப்பு நிலையை ஒரு முழுமையான போர் நிறுத்தமாக மாற்றும் விடயத்தில் அரசாங்கம் அசமந்தப் போக்கை கடைபிடிக்கிறது.

அரசாங்கத்தின் அக்கறையீனம் காரணமாக வெளிநாட்டு பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக்குழுக்களை உருவாக்குவதில் பெரும் தாமதம் ஏற்பட்டு வருகிறது.

இந்த பாரதூரமான விடயங்களை தீர்த்து வைக்க அரசாங்கம் தவறுமானால் சமாதான சூழ்நிலைக்கு இது பெரும் பங்கம் விளைவித்துவிடும். எரிபொருள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் மீதான தடை நீக்கப்படுவது, யாழ்ப்பாணத்திற்கான பாதை திறக்கப்படுவது, போர் நிறுத்த நிலையைப் பலப்படுத்துவது ஆகிய நடவடிக்கைகள் வடக்கில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்நிர்மாண அபிவிருத்தி திட்டங்களுக்கு அத்தியாவசியமானவையாகும்.

### அதிகாரம் கொண்ட அமைப்பு

இவ்விடயங்களில் விடுதலைப் புலிகளோடு அரசாங்கம் பேச்சு மூலம் இணக்கப்பாடு காணவேண்டும். இணக்கப்பாடு ஏற்பட்டால்தான் புனர்நிர்மாண திட்டங்களை செயற்படுத்துவது சாத்தியமாகும்.

புனர்நிர்மாண வேலைகளை திட்டமிட்டு நடத்த தகுந்த அதிகாரம் கொண்ட அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதில் அரச பிரதிநிதிகளும், புலிகளது பிரதிநிதிகளும் அங்கம் வகிக்க வேண்டும்."

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு புலிகளின் தலைவர் பிரபாகரனின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இனிய உங்களுக்கு
புனித ரம்ழான் வாழ்த்துக்கள்
இதயம் நிரம்பிடும்
மகிழ்ச்சி
என்றும் நிரந்தரமாய்
நீடித்து நிலைக்கட்டும்!




## ராஜீவ் கொலை வழக்கில் முக்கிய திருப்பம்
## புலிகள் என்று நிரூபிக்க போதிய ஆதாரங்கள்!



பெண் புலிகளோடு கொடியோடு நிற்பவர் தனு. (பட உதவி- இந்தியா டுடே)

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் இந்திய விசேஷ புலனாய்வுப் பிரிவினர் திரட்டியுள்ள ஆதாரங்கள் மலைக்க வைக்கின்றன.

வீடியோ படச்சுருள்கள் மற்றும் ஆவணங்கள் புலிகளே குற்றவாளிகள் என்று சுட்டிக்காட்டுகின்றன.

சிவராசன் மற்றும் தனு போன்றவர்கள் யாரென்றே தமக்குத் தெரியாது என்று புலிகள் முன்னர் மறுத்திருந்தனர்.

பொட்டம்மான் என்று ஒருவர் தமது இயக்கத்தில் இல்லை என்றும் முன்னர் புலிகள் மறுத்திருந்தனர். எனினும் தற்போது பொட்டம்மன் யாழ்ப்பாணத்தில் பொதுக் கூட்டங்களிலும் கலந்து கொள்கிறார்.

'பொட்டு' என்ற பெயரில் புலிகளது பத்திரிகைகளில் உளவுப்பிரிவைச் சேர்ந்த புலிகள் பற்றி கட்டுரைகள் எழுதிவருகிறார்.

எனவே-பொட்டு அம்மான் புலிகளைச் சேர்ந்தவர் என்று நிரூபிப்பதில் இந்திய விஷேட புலனாய்வுப் பிரிவு அதிக கவனம் செலுத்தவில்லை.

தற்கொலைத் தாக்குதலில் மனிதக் குண்டாக செயற்பட்ட தனு, மற்றும் தேடுதல் வேட்டையில் தற்கொலையான சிவராசன் போன்றோர் புலிகள் அமைப்பை சேர்ந்தவர்கள் என்பதை நிரூபிப்பது கடினம் என்றே கருதப்பட்டது.

அவ்வாறு நிரூபிக்க முடியாவிட்டால் வழக்கு விசாரணையில் சிறப்பு புலனாய்வு பிரிவினர் திணறவேண்டியிருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்து.

ஆனால், சமீபத்தில் வெளியாகியுள்ள தகவல்கள் புலிகளது மறுப்புக்களை பிசுபிசுக்கச் செய்துள்ளன.

தமிழ்நாட்டில் புலிகளது மறைவிடங்கலில் தேடுதல் நடத்தியபோது கிடைத்த வீடியோப் படங்களை சிறப்பு புலனாய்வுப் பிரிவினர் ஆராய்ந்தனர்.

சிறப்பு புலனாய்வு பிரிவினருக்கு அதிஷ்டம் காத்திருந்தது. தமிழ் நாட்டில் புலிகளது பயிற்சி முகாம் ஒன்றில் தனு புலிக்கொடி ஏந்தியபடி பெண்புலிகள் வரிசையில் முன்னணியில் நிற்கும் காட்சி வீடியோவில் இருந்தது.

அது மட்டுமல்லாமல் சிவராசன் இடுப்பில் பிஸ்டலோடு திலீபனின் இரண்டாவது நினைவு தினத்தில் உரையாற்றும் காட்சியும் வீடியோவில் மாட்டியது.

இந்த தடயங்களும் ராஜீவ் கொலையில் புலிகளை ஆதாரபூர்வமாக சிக்கவைத்துள்ளன என்று கூறப்படுகிறது.

'இந்தியா டுடே' சஞ்சிகையின் கருத்துப்படி புலிகளது வாதங்களை உடைக்கக்கூடிய ஆதாரங்களை சிறப்பு புலனாய்வு பிரிவு திரட்டியுள்ளது.

தற்கொலை செய்துகொள்வதற்கு முன்னர் பிரபாகரனை வாழ்த்தியும், ஆண்ட புலிக்கொடி மீண்டும் ஆளவேண்டும் என்றும் சிவராசன் எழுதிய கவிதையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் வழக்கு விசாரணையை முடிவுக்கு கொண்டுவந்து தீர்ப்பை பெறுவதில் சிறப்பு புலனாய்வுத்துறை சுறுசுறுப்பாக இருக்கிறது.

தீர்ப்பு புலிகளுக்கு பாதகமாக அமைந்தால் அதன் விளைவுகள் இலங்கை இனப்பிரச்சினை, பேச்சுவார்த்தை போன்றவற்றில் தாக்கங்களை ஏற்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.

## "அந்நிய உதவி பெறவே அபிவிருத்திட்ட பிரசாரம்" அரசின் நேர்மையில் சந்தேகம் வருகிறதாம்!

பூநகரிப்பாதையை திறந்துள்ளதாக அரசு அறிவித்த மறுநாள் யாழ்ப்பாணத்தில் புலிகளின் குரல் வானொலி அதிர்ச்சி வெளியிட்டிருந்தது.

25.02.95 அன்று யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்கள் மாநாடு ஒன்றை புலிகள் நடத்தினார்கள்.

ஜனாதிபதியின் செயலாளர் திரு.பாலபட்டபெந்தி தமக்கு அனுப்பிய கடிதம் குறித்து தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் விளக்கமளித்தார்.

மூன்றாம் கட்ட பேச்சுவார்த்தையில் ஆராயப்பட்ட விடயங்களை புறக்கணித்துவிட்டு சிறீலங்கா அரசு தன்னிச்சையான முடிவுகளை அறிவித்து வருகின்றது. இது எமக்கு ஏமாற்றமளிக்கின்றது.

4ம் கட்ட பேச்சுவார்த்தையை நாம் எதிர்பார்த்திருந்த வேளையில் அது பற்றி எதுவும் குறிப்பிடாமல் சிறீலங்கா ஜனாதிபதியின் செயலாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.

சிறீலங்கா அரசின் நேர்மை, உண்மை, பரஸ்பர நம்பிக்கை என்பன கேள்விக்கிடமாகியுள்ளன.

சிறீலங்கா அரசாங்கம் மேற்கொள்ளப் போவதாகக் கூறிய வடக்கு- கிழக்கு அபிவிருத்தி, முதலில் வடக்கு மாகாணத்திற்கு என்றும், அதன்பின்னர் யாழ்ப்பாண குடாநாட்டிற்கு என்றும், தற்போது யாழ் மாநகர சபைக்கான திருத்தவேலை என்றும் குறுகியுள்ளது.

யாழ்ப்பாண நூல்நிலையம் அமைத்தல், யாழ் போதனா வைத்திய சாலை திருத்த வேலைகள், வீதி திருத்தம் போன்ற சிறிய திட்டங்களை மேற்கொள்ள அரசு நினைக்கிறது.

இதன்மூலம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தி மேற்கொள்ளப் படுகிறது என்று உலக அரங்கில் பிரசாரம் செய்ய அரசு முனைகிறது.

ஒரு சில மின்பிறப்பாக்கிகளை (ஜெனரேட்டர்) அனுப்பிவிட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாக பிரசாரம் செய்ய திட்டமிடுகிறது.

இவ்வாறான பிரசாரங்கள் மூலம் அண்மையில் நடைபெறவுள்ள சிறீலங்காவுக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் தனக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தி தேவையான உதவிகளை பெற சிறீலங்கா அரசாங்கம் முனைகின்றது.

முன்னைய சிறீலங்கா அரசும் அபிவிருத்திக்கான நிதி உதவிகளை வெளிநாடுகளிடமிருந்து பெற்று தனது படைகளைப் பலப்படுத்தியதை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்."

இவ்வாறு தமிழ்ச்செல்வன் செய்தியாளர்கள் மாநாட்டில் உரையாற்றினார்.

## கிழக்கு மாகாணத்தில் இராணுவ ஆத்திர மூட்டல்கள்
### போராளிகள் துன்புறுத்தப்படுவதாக கூறுகிறார்கள் புலிகள்

கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்பு படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நல்லுறவு நிலவுவதாக பாதுகாப்பு அமைச்சர் சென்றவாரம் தெரிவித்திருந்தார்.

யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய புலிகளது முக்கியஸ்தர் தமிழ்ச்செல்வன் அதற்கு முரண்பாடான கருத்தை வெளியிட்டுள்ளார்.

"போர் இடை நிறுத்தத்திற்கு முரணாக கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் ஆத்திரமூட்டும் செயல்களில் ஈடுபடுகின்றனர்.

அங்கு போராளிகள் மீது துன்புறுத்தல்கள், கேலி செய்தல்கள் என்பன இடம் பெறுகின்றன. மக்கள் தொடர்ந்தும் கைது செய்யப்படுகின்றனர்.

உணவுப் பொருட்கள் கொண்டு செல்ல கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன." என்று தமிழ்ச்செல்வன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் புலிகளுக்கு அனுப்பிய கடிதத்தை வைத்து சிறீலங்கா வெகுஜன தொடர்பு சாதனங்கள் பெரியளவில் பிரசாரம் செய்கின்றன என்றும் அவர் குறை கூறினார்.

## பிரபாவின் ஒப்புதலுடன் 'தமிழீழ உணவுச் சட்டம்'

வடக்கில் தனியான தன்னாட்சி நிர்வாகம் நடத்தும் புலிகள் அமைப்பினர் சட்டங்களை இயற்றியும் நடைமுறைப்படுத்துகிறார்கள்.

இந்த வகையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டம் தமிழீழ உணவுச் சட்டம்.

இது தொடர்பாக புலிகள் விடுத்துள்ள செய்தியை அப்படியே தருகிறோம்.

"1995ம் ஆண்டு 1ம் எண் தமிழீழ உணவுச் சட்டம் தமிழீழ தேசிய தலைவரின் ஒப்புதலுடன் சட்டமாக்கப்பட்டுள்ளது.

இச்சட்டம் பெப்ரவரி 1ம் திகதி முதல் செல்லுபடியாகும். தமிழீழ சுகாதார சேவை பொறுப்பாளர் இச் சட்டத்தின் நோக்கங்களுக்காக முதன்மை உணவு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ முதன்மை உணவு அலுவலரிடமிருந்து இவ்வாண்டுக்கான அனுமதிப் பத்திரம் ஒன்றை பெற்று வைத்திருந்தாலன்றி உணவு வகைகளைத் தயாரிப்பதோ, பேணிக் காத்தலோ, விற்பனை செய்தலோ ஆகாது.

அனுமதிப்பத்திரம் பெறாது உணவுப் பொருள் வியாபாரம் செய்வோர் மீது மே முதலாம் திகதிக்கு பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும்."

இவ்வாறு அச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## சுழிபுரம் கடலில் படையினர் சூடு!

24.02.95 அன்று இரவு யாழ்ப்பாணம் சுழிபுரம் கடலில் மீனவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாக தகவல்கள் கூறுகின்றன.

மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது கடற்படையினர் தாக்கியதில் இரண்டு மீனவர்கள் படுகாயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராசையா கணேசமூர்த்தி (36) சூசைப்பிள்ளை மகாலிங்கம் (46) ஆகியோரே படுகாயமடைந்த மீனவர்களாவர்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

**கொச்சிக்காப் போடியார் மடல்!**

# மட்டக்களப்பில யூனிபோம் போடும் வாத்திமார்

# அரசாங்கம் போடாத சட்டம் அரங்கேற்றம்!



**அய்யாத்துரை அண்ணேய்!**

துவக்குக் கிவக்குகளையெல்லாம் ஒரு கன்னயில எறிஞ்சி போட்டு, பொடியனுகள் கதைச்சித்துக் கிடக்கிறதப் பார்த்தா என்னய என்னயாலயே நம்ப முடியாமக்கிடக்கு.

எப்பிடிப் பொடியனுகள் சுட்டுத்து மாஞ்சி போனாலும் தமிழுக்காக உசிரக் குடுத்த எண்டுதானே கத! சும்மா சொல்லக் கூடாது, இந்த முறை வந்திருக்கிற 'கதபேச்சி' நல்லா முடியும் எண்டு நம்மட நல்லாரிர கனகரு சொல்லித்துப் போறாரு.

அண்ண! போனமுற நடந்த மாதிரி நம்மட புள்ளயள சுட்டுக்கிட்டுத் தள்ளாம இருந்தாலே போதுமெண்டு-நம்மட சுடலச் சுப்பரிர மூத்தவன் முசுமுண்டாப் போடி கதைச்சித்துப் போறான்.

சனமும்-திரும்பிற கன்னைக்கெல்லாம் பொடியனுகள காணுறதானாம். எண்டாலும் கதைச்சிப்புளங்க கசிட்டமாக் கிடக்காம். ஏனென்டா கதைச்சி கிதைச்சிட்டு நிண்ட ஆக்கள 'நோட்' பண்ணி வைச்சிப் போட்டு, கூட்டி எண்ண எலும்பும் வைக்க மாட்டானுகள் அதிரடியானுகள் எண்டு நம்மட ஆக்கள் குசுகுசுக்கானுகள் காதுக் குள்ள.

சனத்தையும் ஆரு நம்பிற? காதுல கீதில கேட்டுத் தெண்டா 'சொட்டாக' போய் ஊதிப் போடுங்கள் எண்டும் பயமாயிருக்காம்.

வெகுகாலம் இந்த காடுவனமெல்லாம் கிடந்து கயிட்டப்பட்ட நம்மட பொடியனுகள், ஊருக்குள்ள வந்து சாதி சந்தானத்த, தாயப்புள்ளையள, தகப்பன தம்பிய பாத்தித்துப் போறாங்க. பாத்தித்து வாறதுக்கு கொஞ்சகாலம் தான் குடுத்திருக்காம் எண்டும் ஒரு கத உலாவுது.

அண்ண, பொடியனுகளுக்கு, பொடியனுகள காட்ட ஏலாம இருந்த இலுவா? இப்ப நம்பிவியளா அண்ண, இந்த போடி சொல்லிறத? அரசாங்கத்தால வந்த காரியந்தானே? காடெண்டும், கன்னயெண்டும் முள்ளெண்டும், புதரெண்டும் கிடந்து கணகாட்டுப்பட்ட நம்மட பொடியனுகள் ஊருக்குள்ள புளங்கிறதப் பாத்தா இனி இல்லெண்ட சந்தோஷம் எனக்கு. 'பகைமை ஒழிப்பு' எண்டா இது எலுவோ சரி?

> "நீ யாழ்ப்பாணத்தில இருந்து கிழங்கு புடுங்கயா? வந்த எண்டு பிறிஞ்சிப்பல், வாத்திற்ற கேட்டதாம்."
>
> "டி,இக்கும் பழைய பிறிஞ்சிப்பல்-எம்.பிக்கும் ஏழாம் பொருத்தமாம்" எண்டு பொடியனுகள் கதைச்ச கத எண்ட காதிலயும் விழுந்திது. கதையக் கேட்டு நான் விறைச்சிப் போனன்."
>
> "தமிழுக்கு என்னவெண்டாலும் கிடைச்சித்தேண்டா நம்மட புள்ளயள் போய் அழிஞ்சத்தில பறவாயில்ல எண்டுத்து உடலாம்."
>
> "டவுண் பள்ளியளுக்குள்ள பொம்புள வாத்திமாரு யூனிபோம் சீல உடுத்தோனு மாம். யூனிபோம் வருத்தம் பள்ளி பள்ளியா புடிக்கிதாம்."
>
> "அரசாங்கம் செய்யாத சட்டமெல்லாம் இந்த மட்டக்களப்பிலதான் இரிக்கி."

என்னெண்டாலும் நம்மட பொடியனுகளைப் பாத்தா-தாங்கிக்க ஏலாம கண்ணில இருந்து பொல பொல எண்டு கொட்டுது தண்ணி. பெத்தவங்களுக்குத்தானே அண்ண புள்ளட பெறுமானம் தெரியும்! ஏதோ போமித்துகள். இனி நம்மளால ஒண்டும் செய்ய ஏலா. தமிழுக்கு என்னவெண்டாலும் கிடைச்சித்தெண்டா நம்மட புள்ளயள் போய் அழிஞ்சத்தில பறவாயில்ல எண்டுத்து உடலாம்.

□□

அண்ண! மட்டக்களப்பு டவுணிலயும், வியாபாரிமாருக்கு நல்ல யாபாரம். சனமெண்டா திருவிழா போல இருந்துது டவுண். அவ்வளவு சனம். சாவகாசமா நடக்க ஏலாமப் போயித்து. பயமில்லாம நாலு தெருவும் ஒரு தெருவா திரிஞ்சி சனம் சாமான் வாங்கித்து போனதுகள். பொடியனுகளும் கடைகளுக்குள்ள பூந்து காசுகுடுத்து பொங்கலுக்கு உடுப்பு வாங்கித்து போனதாம் எண்டு-உடுப்பு வித்த முதலாளி உதுமான் கண்டு சொன்னாரு.

□□

அய்யாத்துர அண்ண! இந்த யூனி போத்த கண்டா எனக்கு சரியான கலக்கடி. ஓடி ஒழிச்சாலும்-பச்சையோட பச்சையாகக் கிடந்து புடிச்சி நசிச்ச காலத்த என்னால மறக்க ஏலா. நம்மட-தங்கவேலாப் போடியும் நேத்து டேசன் றோட்டில கண்டாப்ப கதைக்கப் புடிச்சித்தாரு. மனிசன் கதைக்கப் புடிச்சா ஆள்களர்ர எண்டா பொறுப்பு. இல்லாத பொல்லாதத எல்லாம் அள்ளிப் போட்டுக் கதைக்கிறதில ஆள அடிக்க வேற ஆரும் இல்ல.

டவுண் பள்ளியளுக்குள்ள 'யூனிபோம்' வருத்தம் துவங்கித்தாம். ஆருக்கெண்டு நினைக்கயளோ தெரியாது! வாத்திமாருக்குத்தான். புள்ளயள்தான் யூனிபோம் போட்டுப் போறதாம் எண்டு அந்தக் காலத்தில இருந்து இந்தக் காலம்வரையும் நாம கண்ட புதினம். இப்ப என்னடா எண்டா- வாத்திமாரு யூனிபோம் போட வேணும் எண்டு இந்த பிறன்சிப்பல்மாரு நெருக்கானுகளாம் எண்டு தங்கவேலாப் போடி கதையத் துடங்கினா நிப்பாட்ட ஏலாமப் போயித்து.

"எண்ட பொஞ்சாதிய யூனிபோம்போட உடமாட்டன்" எண்டு ஒரு வாத்தி சொன்னதுக்கு-"நீ யாழ்ப்பாணத்தில இருந்து கிழங்கு புடுங்க வந்ததா?" எண்டு பிறிஞ்சிப்பல் கேட்டதாம் எண்டு தங்கப்பொன்னு சொல்லி, குளறித்தா. மாரால வடிச்சி எறிஞ்ச தண்ணி எண்டா உன்னிச்சக்குளம் நிரம்பி வழியுமாம் எண்டு சொல்லித்துப் போறாவு. நாம எல்லாரும் தமிழனுகள் எண்டு கதைச்சித்து கிடக்க இந்த பிறின்சிப்பல் மட்டும் யாழ்ப்பாணத்த நல்லா கூர் குறிப்பா பாத்துக் கதைச்சதுதான் எனக்கு சரியான கசிட்டம் மனசிக்கு.

பள்ளியும் ரெண்டு நேரம், யூனிபோமும் போடோணும், இந்த அரசாங்கம் செய்யாத சட்டமெல்லாம் இந்த மட்டக்களப்பிலதான் இரிக்கிதெண்டு காசிப்போடி கனக்க மனவருத்தப்பட்டாரு. நாம என்னத்தக் கதச்சும் எறியிறவண்ட கையில பொல்லு இல்ல எண்டு கனகிர மகன் காிச்சான் சொல்லித்துப் போறான்.

## "சம்பந்தன் போக்கில் நியாயமில்லை"

## என் பதவி விலக வேண்டும் தங்கத்துரை?

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் திருவாளர் அ.தங்கதுரை அவர்கள். திருகோணமலை மாவட்ட மக்களின் அபிமான விருப்பு வாக்குகளான 22,409 ஐப் பெற்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட இவரை இவருடன் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னத்தின் கீழ் போட்டியிட்டவரும், அவரைவிடக் குறைவான விருப்பு வாக்குகளான 19,525ஐப் பெற்ற திருவாளர் இரா.சம்பந்தன் அவர்களும் அவருடன் சேர்ந்த சிறு குழுவினரும் இவரின் பதவியை நியாய மற்றமுறையில் அபகரித்துக்கொள்ள நினைப்பது நியாயமா? மக்களின் தீர்ப்பே மகேசனின் தீர்ப்பு.

திருகோணமலை மாவட்டத் தமிழ்ப் பேசும் மக்களே நீங்களே பதில் சொல்லுங்கள்?

இவ்வாறு திரு.தங்கத்துரை பா.உ. அவர்களது ஆதரவாளர்களால் வெளியிடப் பட்டுள்ள பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஒரு தவறு திருத்தப்பட்டது!

### தமிழ்த்தின போட்டியில் தெளிவான வரையறைகள்!

**(திருமலை நிருபர்)**

இந்த வருடம் தமிழ்த்தினப் போட்டி சம்பந்தமான சுற்று நிருபத்தில் புராண/ இலக்கிய நாடகம் சம்பந்தமாக தெளிவான வரையறைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

தெளிவான வரையறைகள் இல்லாத காரணத்தினால், கடந்த ஆண்டு திருமலைப் பாடசாலைகளுக்கிடையிலான புராண/ இலக்கிய நாடகப் போட்டியில் வரலாற்று நாடகம் ஒன்று முதற்பரிசுக்குத் தெரிவானதும், அத்தெரிவு பிழையானதென்று முரசு சுட்டிக் காட்டியதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

எனினும் முரசு அவசரப்பட்டு தவறான முடிவுக்கு வந்தது என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் முரசு நிருபர் மேல் சீறியதும் மறுப்பு ஏவியதும் கடுமையான வாதப்பிரதி வாதங்கள், கல்விப் பகுதியோருடனான கடிதப் போக்குவரத்துகள் என்பவற்றின் பின்னர் நடுவரும் போட்டி ஏற்பாட்டா ளர்களும் தங்கள் தவறை ஏற்றுக் கொண்ட தையும் முரசு வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

இத்தகைய தடுமாற்றங்கள் ஏற்படாதிருக்கும் பொருட்டு 1996 தமிழ்த்தினப் போட்டிகளில் நாடக வரையறை தெளிவாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.

புராண/இலக்கிய நாடகம் என்ற பிரிவில் புராணங்கள் எனின் அரிச்சந்திர புராணம், பெரிய புராணம், சிறாப்புராணம் என்பவற்றினின்றும், இலக்கிய நாடகங்கள்-நளன் சபதம், இராமாயணம், சகுந்தலைக்கதை என்பவற்றிலிருந்தும் எடுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பாடு வந்த திருத்தமொன்றில் சிறாப் புராணம் தவிர்க்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

எப்போதும் முரசின் செய்தி நேர்மையானதும் உறுதியானதும் என்பதற்கு இதுவும் ஒரு சான்று.


**விளம்பரப் பகுதி**

**பிறைட் - இன் தபால் மூலம் கல்விகள்**
(ஒளிமயமான எதிர்காலத்திற்கான வழிகாட்டி)

90 நாட்களில் பேச்சு ஆங்கிலக் கல்வி
90 நாட்களில் பேச்சு சிங்களக் கல்வி
ஆண்டு 5 புலமை பரிசில் முன்னோடிப்பயிற்சி
G.C.E. (O/L) முன்னோடிப் பயிற்சி
கடைக் கணக்கு எழுதும் முறை
மேலதிக விபரங்கட்கு

Mercantile Ads

**BRIGHT TRAINING CENTRE**
S-27, FIRST FLOOR, P.O.BOX. 162
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO - 11. (T.P : 434770)



**அற்புத மலையாள மாந்திரீகம்**

மலையாள மாந்திீக ஆவி உச்சாடங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா! திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—
மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

**தலைமையகம்**
மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
**P.K. SAAMY ASSOCIATE (PVT)**
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28

**ரிஷி அஜமாமிச லேகியம்**
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு,*
*கொழும்பு 11,*
*போன்: 421398*
*Fax: 431604*


## பின்தங்கிய பகுதிகளில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் திட்டம்

**(ஏறாவூர் நிருபர்)**

மட்டு மாவட்டத்தில் கல்வி நிலையில் மிகவும் பின்தங்கிய வறிய பகுதிகளில் கல்வி நிலையை மேம்படுத்த மட்டக்களப்பு மாவட்ட கல்வி அறிவொளிச்சபை திட்டமிட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதலில் குறித்த பின்தங்கிய வறிய பகுதிகளிலும்,பாதிக்கப்பட்டுள்ள ஒதுக்குப்புறக் கிராமங்களிலும் 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கும், க.பொ.த.சா/தர மாணவர்களுக்கும் இலவச பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தப்படுவதுடன் வினாவிடைக் கையேடுகள், உசாத்துணை நூல்கள் என்பனவும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மேற்படி சபையின் தலைவர் திரு.கு.திருமால் தெரிவித்தார்.

இத்திட்டத்தை உடனடியாக- 1995 துவக்கத்திலிருந்தே செயற்படுத்த உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தேவை ஒரு இலங்கைத் தூதர்!

**(துபாயிலிருந்து ஏ.எல்.எம். நயீம்)**

மத்திய கிழக்கு நாடுகளில் மிகவும் செல்வந்த நாடாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் திகழ்கிறது. மேலும் இலங்கையர்களுக்கு அதிக அளவில் தொழில் வாய்ப்புகளும் கிடைக்கப் பெற்று வசித்து வருகின்றனர்.

அண்மையில் இலங்கை வெளிநாட்டமைச்சால் பல நாடுகளுக்கு இலங்கையிலிருந்து தூதுவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். ஆனால் கடந்த ஒரு வருடமாக தூதுவர் ஒருவர் இன்றி இயங்கி வரும் ஐக்கிய அரபு எமிரேட்ஸிலுள்ள இலங்கை தூதுவராலயத்திற்கு இதுவரை தூதுவராக யாரும் நியமிக்கப்படாதது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

நாளுக்கு நாள் இலங்கையர்களின் பிரச்சனைகள் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் அதிகரித்து வருகின்றன. ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் பணிபுரியும் இந்நாட்டிற்கு இதுவரை ஒரு தூதுவரை நியமிக்காமல் இருப்பது என்ன காரணம் என்பது புரியாமலுள்ளது.

எனவே தூதுவர் ஒருவரை இலங்கை அரசு உடன் நியமனம் செய்யவேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.


**சமையற்கலை வகுப்புக்கள் புதிய பிரிவுகள் ஆரம்பம்**

கேக் வகைகள், சிற்றுண்டிகள்
கறி சோறு வகைகள்
புடிங் வகைகள்
தமிழ் மொழி மூலம் நடத்தப்படும்
மார்ச் மாதம் 10ம் திகதிக்கு முன்
நேரில் வந்து சந்திக்கவும்.

ஸ்டொக்கிங் நெற் பூக்கள்
(Stocking net Flowers)
சில்க் ரிபன் பூக்கள்
(Silk Ribbon Flowers)
ஆகிய வகுப்புகளும் நடத்தப்படும்

ரிச் கேக் (Rich Cake) ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்

Niranjani Selvarajah
55, Vivekananda Hill
Kotahena, Colombo 13

**நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!**

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 505/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 258/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 132/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புதிய அரசுக்கு புலிகளின் முதல் எச்சரிக்கை!

முதலில் அறவழிப் போராட்டம்; அடுத்த கட்டம்தான் ஆயுத மோதல்.

இது இலங்கைத் தமிழர்களது போராட்ட வரலாறு மட்டுமல்ல, புலிகள் போருக்குத் தயாராகும் வழிமுறையும் இதுதான்.

1985இல் திம்பு பேச்சுவார்த்தையில் இந்திய அரசின் நிர்ப்பந்தம் காரணமாகவே தமிழ் இயக்கங்கள் பங்குகொண்டன.

மறுபுறம், வடக்கு-கிழக்கில் இருந்த தமது உறுப்பினர்கள் மூலம் திம்பு பேச்சு தீர்வைத் தராது என்று அந்த இயக்கங்கள் ஊர்வலங்கள் நடத்தின.

ஊர்வலத்தை ஒழுங்கு செய்தது. மற்றும் ஊர்வலங்களுக்கு வாகனங்களில் ஆட்களை கொண்டுவந்து இறக்கியது, கோஷங்கள் தயாரித்தது அனைத்துமே இயக்கங்களின் ஏற்பாடுதான்.

"தமிழீழமே இறுதித் தீர்வு" என்று மக்கள் வெள்ளம் திரண்டுவிட்டது என்று வெளியே சொல்லப்பட்டது. வெள்ளத்தை உருவாக்கியவை இயக்கங்கள் என்பது வெளியே தெரியாது.

என்றாலும் அந்த நேரத்தில் தமிழீழம் பெற்றுவிடலாம் என்னும் நம்பிக்கை மக்களிடம் நிலவியது உண்மை.

1986இல் பெங்களூருக்கு சார்க் மாநாட்டுக்கு சென்ற ஜே.ஆரை பிரபாகரன் சந்திக்க வேண்டும் என்று இந்தியா கூறியது.

பிரபாகரனும் பெங்களூர் சென்றார். அந்த நேரத்தில் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் புலிகள் உட்பட தமிழ் இயக்கங்கள், பேச்சுவார்த்தையைக் கண்டித்தும், தமிழீழமே தீர்வு என்றும் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடத்தின.

கூட்டத்தின் முன்னர் இயக்கங்கள், மக்கள் ஊர்வலம் ஒன்றையும் நடத்தின.

பெங்களூர் பேச்சுவார்த்தை பின்னர் நடைபெறவில்லை. பேச்சுக்களில் கலந்து கொள்ளும் நிர்ப்பந்தங்கள் எற்பட்ட போது இயக்கத் தலைமைகள் அதில் கலந்துகொண்டன.

அதேசமயம் மக்கள் மத்தியில் பேச்சுக்களில் நம்பிக்கை ஏற்படாதவாறு அந்த மக்களை வைத்தே ஊர்வலம் நடத்தி அவர்களையே எதிராகக் கோஷம் போடவும் வைத்து புத்திசாலித்தனமாக நடந்துகொண்டன.

மறுபுறம், அரசாங்கத்தை மக்கள் நம்பவில்லை என்று வெளியுலகிற்கும் எடுத்துக்காட்ட அந்த ஊர்வலங்கள் சிறந்த உத்தியாக அமைந்தன.

1987இல் இந்திய- இலங்கை ஒப்பந்தம். இந்தியாமீது இலங்கைத் தமிழ் மக்களுக்கு இருந்த நம்பிக்கை இந்தியப்படையை அவர்கள் மகிழ்வோடு வரவேற்கக் காரணமாயிற்று.

இந்தியப் படையை முதலில் வரவேற்ற புலிகள் பின்னர் முரண்படத் தொடங்கினார்கள்.

இந்தியாவும் 'ஊ' என்று ஊதினால் போதும் புலிகள் காணாமல் போய்விடுவார்கள் என்று தப்புக்கணக்கு போட்டது.

போர்க்குணமோ அல்லது திட்டமிட்ட அரசியல்-இராணுவ முனைப்போ இல்லாத சில இயக்கங்கள் மீது இந்தியா நம்பிக்கை கொண்டிருந்தது.

இந்தியா மீது புலிகள் முற்றாக நம்பிக்கை இழந்தபோதும் தமிழ் மக்கள் இந்தியாவை நம்புகிறார்கள் என்பதை புலிகள் கவனித்தார்கள்.

அதனால் இந்தியாவை எதிர்ப்பதற்கு முன்னர் இந்தியாமீது தமிழ் மக்களுக்குள்ள நம்பிக்கை தவறானது என்று எடுத்துக்காட்ட நினைத்தார்கள்.

'இந்தியா நீங்கள் நினைப்பது போல நல்ல நண்பனல்ல' என்பதை மக்களுக்கு உணர்த்துவதே புலிகளது முதல்கட்ட நடவடிக்கையாக அமைந்தது.

குமரப்பா-புலேந்திரன் போன்றவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் அவர்கள். தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தலைமையின் உத்தரவுப்படி சயனைட் உட்கொண்டனர்.

**இந்தியாவின் தவறு காரணமாகவே அவர்கள் தங்களை அழித்துக் கொண்டனர் என்று புலிகள் பிரசாரம் செய்தனர்.**

உண்மையில் இந்தியா அந்த விடயத்தில் துரிதமாக செயற்படத் தவறியிருந்தது. இலங்கை அரசை நிர்ப்பந்தித்து கைது செய்யப்பட்டவர்களை விடுவித்திருக்கலாம்.

இந்தியாவின் தவறு புலிகளுக்கு சாதகமானது. அது மட்டுமல்லாமல் புலிகளது முக்கிய பிரமுகர் திலீபன் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார்.

அது-இந்தியாவுக்கு எதிரான மிகப் பெரிய பிரசார இயக்கமாக புலிகளால் கையாளப்பட்டது. தினமும் பல நூற்றுக் கணக்கான மக்கள் உண்ணாவிரதமிருந்த திலீபனைக் கவலையோடு கண்டு சென்றார்கள்.

'அறவழிப் போராட்டத்தில் அறவே நம்பிக்கை இல்லாத ஒரு இயக்கம் தனது தலைவர்களில் ஒருவரை சாகும் வரை உண்ணா விரதம் இருந்து பலியாக அனுமதிக்காது. சும்மா மிரட்டுகிறார்கள்' என்று இந்தியா நினைத்திருக்கலாம்.

ஆனால், திலீபன் பலியானார். அது மிகப் பெரும் அனுதாபத்தை உருவாக்கியது.

**அறவழியை இந்தியா மதிக்கவில்லை என்று நிரூபிக்க புலிகளுக்கு வாய்ப்புக் கிடைத்தது. மக்கள் இந்தியாமீது சந்தேகம் கொள்ள ஆரம்பித்த சூட்டோடு சூடாக புலிகள் இந்தியப்படைக்கு எதிராகப் போரில் குதித்தனர்.**

பிரேமதாசா அரசாங்கத்தோடு புலிகள் நடத்திய பேச்சுவார்த்தை முறிந்து ஈழப்போர் இரண்டு ஆரம்பித்தது.

"புலிகள்தான் பேச்சை முறித்தார்கள். பிரேமதாசா நியாயமாகவே நடந்துகொள்ள நினைக்கிறார்" என்று கூறப்பட்டது. பிரேமதாசா அரசாங்கம்மீது தமிழ் மக்களுக்கு ஓரளவு நம்பிக்கையும் இருந்தது.

உடனே புலிகள் வெகுஜன அமைப்புக்களது போராட்டம் என்ற பெயரில் ஊர்வலங்களை நடத்தினார்கள்.

'நிவாரணப் பொருட்களை அனுப்பு.' 'தாக்குதலை நிறுத்து'. போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன. 'கிளாலி கடல் ஏரித் தடையை விலக்கு' என்றும் கோஷம் போடப்பட்டது.

அவற்றைச் செய்ய பிரேமா அரச முன்வராதபோது கோஷம் போட்ட மக்கள் தாமாகவே அரசின்மீது நம்பிக்கை இழப்பார்கள் என்பது புலிகளது கணிப்பு. அது பொய்க்கவில்லை.

இப்போது சந்திரிக்கா அரசு தமிழ் மக்களது அமோக நம்பிக்கையைப் பெற்றிருக்கிறது.

வெளிநாடுகளுக்கு செல்லும் வெளிநாட்டமைச்சர் 'புலிகளை ஒத்துழைக்கச் செய்யுங்கள்' என்று அந்த நாடுகளிடம் கேட்டு வருகிறார்.

"நாங்கள் தயார்தான்; அவர்கள்தான் சற்று முரண்படுகிறார்கள். நீங்களும் கொஞ்சம் சொல்லிவைத்தால் நல்லது" என்ற மறைபொருள்தான் வெளிநாட்டமைச்சரின் வேண்டுகோளில் இருக்கிறது.

புலிகள் நன்றாக ஒத்துழைக்கிறார்கள் என்று அரசு நினைத்தால் அந்நிய நாடுகள் மூலமாக சொல்லவைக்கும் தேவை இருக்காது.

உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சமாதானத் தீர்வில் நாட்டமுள்ள அரசாக தன்னை வெளிப்படுத்தி வருகிறது சந்திரிக்கா அரசு.

"புலிகள் பேச்சுக்கு ஒத்துழைக்க வேண்டும்." என்று அமெரிக்காவும்-சீனாவும் சொல்லவைத்தது வெளிநாட்டமைச்சரின் சிறந்த ராஜதந்திரம்.



யாழ்ப்பாணத்தில் இயக்க சீருடையுடன் கட்டுக் கோப்பாக-ஆயுதங்களோடு காணப்பட்ட புலிகளது செயற்பாடு சமாதானக் குழுவில் சென்றவர்களுக்கு ஏற்படுத்திய பிரமையில் இருந்து, திரும்பிவந்த பின்னரும் அவர்களால் மீளமுடியவில்லை.

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி சந்திரிக்காவையும் அரசையும் வெகு உற்சாகமாக வெளுத்துவாங்கினார் வாசு.

அரசாங்க கட்சியில் இருக்கும் ஒருவரே சந்திரிக்காமீது அவநம்பிக்கையோடு பேசியதால், நினைத்ததைவிட அதிக பலனை ஆர்ப்பாட்ட ஊர்வலம் மூலம் புலிகள் அறுவடை செய்துகொண்டனர்.

சந்திரிக்கா அரசுமீது ஆரம்பத்தில்-குறிப்பாக வடபகுதி மக்களுக்கு இருந்த நம்பிக்கையை மெல்ல மெல்ல அகற்றுவதில் புலிகள் வெற்றி பெற்று வருவதாகவே தோன்றுகிறது.

பேச்சுவார்த்தைக்கு ஆதரவு திரட்டுகிறோம், அரசும்-புலிகளும் சமாதானத் தீர்வுக்கு முயல வேண்டும். ஜனநாயகமுள்ள சமாதானமே தேவை என்றெல்லாம் கூறியது சமாதானக்குழு.

அந்த சமாதானக்குழுவின் விஜயம்கூட புலிகளது பிரசார நடவடிக்கைக்கு சாதகமாக மாறியிருக்கிறது.

சமாதானத்தை எதிர்பார்க்கும் மக்களிடம் சென்று அரசுமீது அவநம்பிக்கையை ஏற்படுத்திவிட்டு வாசு குழுவினர் திரும்பியிருக்கிறார்கள்.

சமாதானத் தீர்வில் அரசுக்கு நாட்டமில்லை என்று சமாதானக் குழுவே சொல்லும்போது மக்களிடம் ஒரு கேள்வி எழுந்துள்ளது.

அப்படியானால் புலிகள் மட்டும் சமாதானத்திற்கு முயன்று பயன் என்ன?

அந்தக் கேள்வி புலிகளுக்கு சாதகம். ஆக, யாழ்ப்பாணத்தில் புலிகள் பின்னணியில் நின்று நடத்திமுடித்துள்ள மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் அரசுக்கு புலிகள் விடுத்துள்ள முதல் எச்சரிக்கை.

மக்களிடம் இருந்து தங்களை தனிமைப்படுத்த புலிகள் அனுமதிக்கப்போவதில்லை. மக்களிடம் தம்மைத் தவிர வேறு ஒரு சக்தி செல்வாக்கு பெறுதலையும் புலிகள் ஏற்கப் போவதில்லை. ஏற்கனவே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் சுட்டிக்காட்டியதும் உறுதியாகிவிட்டது.

புலிகள் சமாதானத்திற்கு எதிரானவர்களல்ல என்று சமாதானக் குழுவையே சொல்லவைத்திருப்பது உள்நாட்டில் அரசியல்ரீதியிலும் புலிகளது பலம் மேலோங்குவதற்கு சான்று.

இப்போது அரசாங்கம் ஒரு புத்திசாலித்தனமாக காய் நகர்த்தலை செய்திருக்கின்றது.

பூநகரி-சங்குப்பிட்டி பாதையையும் ஆனையிறவு பாதையையும் திறந்துள்ளதாக அறிவித்திருக்கிறது.

பூநகரியில் 500 மீட்டர் பின்னால் நகர்ந்து வழிவிட்டிருக்கிறது இராணுவம். இது ஏற்கேனவே புலிகளிடம் கூறப்பட்டு அவர்கள் நிராகரித்த திட்டம்.

தமிழ் கட்சிகள் உடனடியாக வரவேற்றுள்ளன. புலிகள் இதற்கு உடன்பட்டார்கள் என்று தெரியாமலோ என்னவோ கூட்டணியும் துணிந்து வரவேற்றுள்ளது.

புலிகள் மறுப்பார்கள் என்று தெரிந்தால் அந்த விடயத்தில் மௌனமாக இருப்பதே கூட்டணியின் இன்றைய நிலைப்பாடு. எனினும் பூநகரி பாதையை அரசு திறந்துள்ளதை கூட்டணியும் வரவேற்றுள்ளது.

அரசின் அறிவிப்பு வந்த மறுநாளே புலிகள் தமது அதிர்ச்சியை தெரிவித்துவிட்டார்கள்.

தம்மோடு பேசிச் செய்யாமல் அரசு தானாகவே செய்யும் முன்முயற்சிகள் புலிகளுக்கு விருப்பைத் தராது.

அரசு தமிழ் மக்களிடம் நல்லபிப்பிராயத்தை பெற்றுக்கொள்ளுவது புலிகளது அரசியல் பலத்துக்கு சவாலாகலாம்.

எனவே- அரசின் அறிவிப்புக்கு புலிகள் ஒத்துழைக்க மறுப்பார்கள் என்பது உடனடியாகத் தெரிந்த ஒன்றுதான்.

'அரசு ஒரு தலைப்பட்டசமாக அறிவித்துள்ளது' என்று 26.02.95 அன்று யாழ்ப்பாணத்தில் புலிகள் அறிவித்தனர்.

25.02.95 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து பிரபாகரனால் ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு எழுதிய கடிதம் யாழ்ப்பாணத்தில் உடனடியாக பகிரங்கப்படுத்தப் பட்டது.

அரசு தனது முயற்சிகள், சமாதான தீர்வுக்கான அக்கறைகள் என்று வெளிப்படுத்தியுள்ள சகல விடயங்களையும் பிரபாகரன் குறைசொல்லியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வுப் பணிகளுக்கு அரசு அனுப்பி வைத்துள்ள பொருட்கள் இலங்கைத் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டன.

'விடிவு பிறந்துவிட்டது' என்ற ரீதியில் அரச பிரசாரங்கள் அமைந்தன.

அரசு நினைத்தால் மட்டும் யாழ்ப்பாணத்தில் எதுவும் நடந்துவிடாது என்பதை மறந்து செய்யப்பட்ட பிரசாரங்கள் அவை.

புனர்வாழ்வு பணிகளோ எதுவோ தம்மோடு வந்து பேசிவிட்டு தாம் கேட்டதை அரசு செய்யவேண்டி ஏற்பட்டதாகக் காட்டவே புலிகள் விரும்புகிறார்கள்.

அதற்கு மாறாக தனது விட்டுக் கொடுப்பு மற்றும் மக்கள் மீதான அக்கறையாக அரசு புனர்வாழ்வுப் பணிகளை செய்யும்போது புலிகள் புதிய நிபந்தனைகளை விதிக்கவே செய்வர். விதித்தும் உள்ளனர்.

'பொருளாதார தடை நீக்கம் அரசின் பிரசார முயற்சி' என்று புலிகள் தெரிவித்தள்ளனர்.

போர் நிறுத்தம் நன்றாக நடக்கிறது என்றும், கிழக்கில் படைகளுக்கும் புலிகளுக்கும் நல்லுறவு நிலவுவதாகவும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார்.

கிழக்கில் போர் நிறுத்த மீறல்கள் நடப்பதாக ஏற்கெனவே பாதுகாப்பு படைத் தரப்புத்தான் பட்டியல் வெளியிட்டது.

ஆனால் அமைச்சரோ அப்படி ஒன்றும் பெரிதாக நடக்கவில்லை என்கிறார்.

நாம் தலைமுடியைப் பிய்த்துக்கொள்ளும் நேரத்தில் புலிகளது அறிக்கை வருகிறது.

'கிழக்கில் படையினர் மோதலை தூண்ட முயற்சி' என்ற புலிகளது மட்டு- அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளரது அறிக்கை 'புலிகளின் குரல்' வானொலியில் சொல்லப்பட்டது.

ஆக மொத்தத்தில் அரச தரப்பு சில விடயங்களில் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறது தெளிவில்லாமல் இருக்கிறது.

ஆனால், புலிகள் தமது நோக்கத்தில் தெளிவாக இருக்கிறார்கள்.

வடக்கும் தனது ஆளுமையின் கீழ் உள்ள பகுதி என்று நினைத்து அரசு நடந்து கொள்ள முடியாத நிலையை புலிகள் ஏற்படுத்தியுள்ளனர்.

புலிகளது அதிகாரத்தையும், ஏகப் பிரதிநிதிகள் என்ற கருத்தையும், புலிகளுக்கு சாதகமான நிலையையும் பாதிக்காத வகையில் அரசின் நடவடிக்கைகள் அமைந்தால் மட்டுமே புலிகள் ஒத்துழைப்பர். இதுதான் உண்மையான நிலை.

அரசின் பலவீனத்தை மிகத்தெளிவாகக் கணித்து புலிகள் காய் நகர்த்துகிறார்கள் என்பது மட்டும் தெளிவு.

## நாரதர்-

புலிகள் புதிய அரசை பகைத்துக் கொண்டால் அந்த நாடுகள் என்ன நினைக்கும்...? நாம் சொல்லியும் இந்தப் புலிகள் கேட்கவில்லையே என்று நினைக்கலாம்.

வெளிநாடுகளிலுள்ள புலிகளது கிளைகள் மற்றும் ஆதரவாளர்களிடமிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள தலைமைக்கு அனுப்பப்படும் தகவல்களில், சந்திரிக்கா அரசை உடனே எதிர்ப்பதற்கு வெளியுலக அதரவு கிடைக்காது என்றே தெரிவிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

எனவேதான்-வழக்கமான உத்தியை மீண்டும் கையில் எடுத்திருக்கிறார்கள்.

'வெகுஜன ஒன்றியங்களின் கூட்டமைப்பு' என்ற பெயரில் கிட்டத்தட்ட ஐம்பதினாயிரம் மக்களை வீதியில் இறக்கி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் இருந்து சென்ற சமாதானக்குழுவினரும்- ஊர்வலத்தையும், திரண்டிருந்த மக்களையும் காணவைத்ததும், மக்கள் மூலமாகவே தமது கோரிக்கைகளை கோஷமாக அவர்கள் செவிகளில் விழவைத்ததும் புலிகளது சாமர்த்தியம்.

அதைவிட மேலும் ஒரு சாதனை, வாசு தேவ நாணயக்கார மூலமாகவே ஜனாதிபதி சந்திரிக்காமீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியதுதான்.



வெளிநாட்டு வானொலி பெண்மணியை இம்முறை ரெண்டு எழுத்து தலைவர் சந்திக்க மறுப்பாம். தனக்கும் அவருக்கும் நல்ல பழக்கம் எண்டமாதிரி ரெண்டு எழுத்துக் காரர் சிலரை செல்லமாய் மிரட்டினது தலைவருக்கு பிடிக்கேல்லையாம். தன்னுடைய ஆட்களை தலைவர் விட்டுக்கொடுக்கமாட்டார் எண்ட விஷயம் ஆனந்தமான சோதரிக்கு தெரியல்லை. சந்திப்பு மறுக்கப்பட்டதாலை மனம் ஒடிந்த சோதரி தலைவரை புகழ்ந்து பேட்டி குடுத்து சமாளிச்சுப் போட்டு வந்திருக்கிறாராம். புகழ்ச்சியாலை தலைவரை பொலிசியிலை மாற்ற ஏலாதுங்கோ. அதுதான் அவர்.

கிழக்கின் கூட்டான தமிழ் கட்சி முக்கிய பிரமுகர் ரெண்டு எழுத்து பிரமுகரைச் சந்திச்சவர் எண்டமாதிரி ஒரு கதை தேனகத்திலை பரவினது. அதுவும் ரெண்டு எழுத்துப் பிரமுகர் தேடிவந்து சந்திச்சமாதிரி கதை பரவினது. இதுபற்றி அந்த ரெண்டு எழுத்து பிரமுகரிடம் ஒருவர் கேட்டாராம். அவர் சொன்ன பதில்; "எங்களுக்கு வேறு வேலை இல்லையோ? அதுவும் அவரை நாங்கள் தேடிப்போய் சந்திக்கிறதோ? யார் அந்த கதையைப் பரப்பினது எண்டு அறிஞ்சு சொல்லுங்கோ." எண்டு சொன்னவராம் அவர்.

பொன்னான தலைவரின் புத்திரர் தொலைக்காட்சி கலந்துரையாடல் ஒண்டிலை தன்னை ஒரு 'பொதுமகன்' எண்டு சொன்னதைக் கேட்க கவலையாய் போச்சு. நாட்டின் தலைவராக வரவே ஆசைப்பட்ட மனுசன் நிலை இப்படியாப்போச்சு. எண்டாலும் தன்னை நடுநிலையானவர் எண்டு சொல்லிக்கொண்டிருப்பவரை குத்திக்காட்டின புத்திரரின் 'நக்கல்' நல்லாத்தான் இருந்தது. கோட்டும் சூட்டும் 'ரை'யும் கட்டிக்கொண்டு அரசுக்கு தலையையும், ரெண்டு எழுத்தாருக்கு வாலையும் காட்டிக்கொண்டு பேர் எடுக்க சிலருக்க சின்ன சின்ன ஆசை. ஆனால் பாருங்கோ சிறகடிக்கிறதுதான் கஷ்டம்.

## அதிரடி அய்யாத்துரை

அரசியலில் பிரபலமானவர்களை மேடையில் ஏற்றியதாலை தங்கள் நோக்கம் அடிபட்டுப் போச்சு எண்டு சமாதானக் குழுவிலை புகைச்சலாம். யாழ் சென்றுவந்தவை கொடுத்த பேட்டிகளும், பேச்சுக்களும் தனிப்பட்ட விளம்பரங்களாய் மாறிப்போச்சு. குழுவின் முக்கியத்துவம் காணாமல் போச்சு எண்டு சிலர் அபிப்பிராயப்படுகினமாம்.

யாழ்ப்பாணத்திலை ரெண்டு எழுத்தாரைக் கண்டால் சிலர் 'வரி வருகுது' எண்டு சொல்லுகினமாம். புலிபோமில் இருக்கிற வரியை சொல்லுகினமோ அல்லது அவை வசூலிக்கிற வரியைச் சொல்லுகினமோ எண்டு தெரியேல்லை.

பேச்சுக்கு போகும் குழுவில் இருக்கும் பாதுகாப்பு வட்டார ஆட்கள் பற்றிய விபரங்களை ரெண்டு எழுத்தார் விரல் நுனியிலை வைச்சிருக்கினமாம். 'இருவான மலையிலை குடியேற்றத்துக்கு உதவிய அதிகாரி இப்ப இலங்கை வந்து பவ்வியமாக நடக்கிறார். நீங்கள் சொன்னாச் சரிதான் எண்டு சொல்லுகிறாராம். முந்தி என்ன செய்தவர் எண்டு தெரியாதோ?' எண்டு சொல்லிக்கினமாம் ரெண்டு எழுத்தார்.

சினிமாவுக்கு ரெண்டு எழுத்தார் விதிச்சுள்ள தடையை நீக்கவேணும் எண்டு மருத்துவர்கள் சிலர் கேட்டிருக்கினமாம். விரக்தியையும், உளவியல் தாக்கங்களையும் தவிர்க்க சனத்துக்கு வேறு வழிகள் இல்லை. உள்ள வழிகளையும் மூடினா உளவியல் பாதிப்பு உயரப்போகுது எண்டு அவை சொல்லியிருக்கினமாம். கோரிக்கை ரெண்டு எழுத்து தலைவரின் பரிசீலனையில் இருக்காம்.

பாரிசிலுள்ள ரெண்டு எழுத்து பிரமுகருக்கு கொலை அச்சுறுத்தல்களாம். அதாலை அவர் தலைமறைவா இருக்கிறதாகத் தகவல். அதிகப் பிரபலம், அதிகப்பிரசங்கித்தனம் தலைவருக்குப் பிடிக்காது எண்டதும் அவர் அடக்கிவாசிக்க மற்றொரு காரணமாம்.

தாண்டிக்குளத்திலை மீண்டும் கெடுபிடியள் எண்டு தாண்டிவருவோர் சொல்லுகினம். கடவுள் வரம் கொடுத்தாலும்.....

பழமை-பழமை என்றும் உழைத்துப்போன மரபுகளை கட்டிப்பிடித்திருப்பவர்களுக்கும் ஒரு சாட்டையடிக் கவிதை இது; எழுதியது: அமீன் என்ற கவிஞர்.

"உன் முன்னோரும்
உன்னைப் போலவே
பழம் பெருமை பேசிக்
காலம் கழித்திருந்தால்,
நீ இப்போது வியக்கிறாயே
இந்த அற்புத
பாரம்பரியச் சின்னங்கள்
உனக்கெப்படிக் கிடைத்திருக்கும்?"

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

**17**

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# தமிழ்நாட்டில் நடந்த முதலாவது இயக்க மோதல்!

அற்புதன் எழுதுவது

## தனித்தலைமை

தமிழ்ழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பொறுப்பை தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பிரபாகரன் கேட்டார்.

தலைவரே முடிவுகளை எடுக்க வேண்டும். அதற்கு மறுபேச்சு இருக்கக் கூடாது. அப்படியானால்தான் சரியான இயக்கமாக வளரமுடியும், என்று சொன்னார் பிரபாகரன்.

பிரபாகரன் இந்த நிபந்தனையை விதித்தபோது புலிகளது செயற்குழுவில் ஏழு பேர் இருந்தனர்.

பிரபாகரன், கலாபதி, கடாபி, அன்ரன், ராகவன், சாந்தன், சீலன் ஆகியோரே அந்த ஏழு பேர்.

ஒருவரிடம் தனித்தலைமை கொடுக்கப்படுவது சர்வாதிகாரப் போக்குக்கு வழிவகுக்கும். எனவே பிரபாவிடம் தனித்தலைமை கொடுக்கப்படக்கூடாது என்று ராகவன், கலாபதி,கடாபி ஆகியோர் எதிர்த்தனர்.

செயற்குழுவில் மூன்றுபேர் பிரபாகரனின் கருத்துக்கு ஆதரவாகவும், ஏனைய மூன்று பேர் எதிராகவும் நின்றனர்.

இந்த நிலையில் செயற்குழுவில் இருந்த சாந்தன் (இவர் கியூபா இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டவர்.) இயக்கத்தை விட்டு ஒதுங்கினார்.

கலாபதி ஒரு காதல் விவகாரத்தின் காரணமாக இயக்கத்தைவிட்டு விலகினார். (யாழ் மேயர் துரையப்பா கொலை நடவடிக்கையில் பிரபாவோடு பங்கு கொண்டவர் கலாபதி.)

ராகவன் இயக்க அலுவல் காரணமாக இந்தியா சென்றிருந்தார். இந்த நிலையில் கடாபி மாத்திரமே செயற்குழுவில் பிரபாகரனுக்கு எதிராக நின்றார்.

எனினும், பிரபாவிடம் தனித்தலைமை கொடுக்கப்பட்டது.

ஒருவரே தலைவர்; அவர் சொல்வதே கொள்கை; அவர் உத்தரவே இறுதியானது- உறுதியானது என்ற நிலை உருவாகியது.

செயற்குழு கூடி முடிவெடுப்பது என்ற நிலை முடிவுக்கு வந்தது.

கடாபி பின்னர் படிப்படியாக இயக்கத்தை விட்டு ஒதுங்கத் தொடங்கினார். தற்போது இவர் வெளிநாடொன்றில் வசிக்கிறார்.

## மாத்தையாவின் தலைமை

பிரபாகரன் தமிழ்நாட்டில் தலைமறைவாக இருந்தபோது இங்கே இயக்கத்தை வழிநடத்தியவர்களில் மூவர் முக்கியமானவர்கள்.

மாத்தையா, சீலன், குண்டப்பா (ரகு) அகியோரே அந்த மூவர்.

மாத்தையாவே பிரபாகரன் நாட்டில் இல்லாத வேளைகளில் தலைமை வழங்கினார்.

மாத்தையா- சீலன்- குண்டப்பா ஆகியோர்களில் பொறுப்பாளராக இருக்கத் தகுந்தவர் யார் என்று இங்கே இருந்த புலிகள் மத்தியில் ஓர் இரகசிய வாக்கெடுப்பு நடந்தது.

அதில் மாத்தையாவே வெற்றி பெற்றார். பிரபாகரனுக்கு அடுத்த தலைவராகவும் மாத்தயாவே புலிகளால் மதிக்கப்பட்டார்.

இதே வேளையில் புலிகளில் இருந்து ஒதுங்கிய செல்லக்கிளி அம்மான் பம்பாய் சென்று கடத்தல் தொழிலில் ஈடுபட்டார்.

பம்பாயில் ஒரு 'தாதா' போல செல்லக்கிளி விலாசமாக இருந்தார்.

அது பிரபாவுக்கு பிடிக்கவில்லை. இயக்கத்துக்காக வியாபாரம் செய்வது தவறல்ல, இயக்கத்தை விட்டு விலகி தனிப்பட்ட லாபத்துக்காகத் தவறான வழியில் செல்வது தவறு. என்பது பிரபாவின் கருத்து. எனவே பம்பாயில் இருந்த செல்லக்கிளியுடன் பிரபாகரன் எவ்வித தொடர்பும் கொள்ளவில்லை.

இதேவேளை உமா மகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் வளரத் தொடங்கியது.

'சுந்தரம் புலிப்படை' என்ற பெயரையும் உமா மகேஸ்வரன் அணியினர் பயன்படுத்தி வந்தனர்.

## முதல் மோதல்

1982 மே மாதம் 29ம் திகதி. தமிழ்நாட்டில் சென்னையில் 'பாண்டிபஸார்' என்னும் ஒரு பகுதி இருக்கிறது

சனநெரிசல் மிகுந்த பகுதி அது. அங்கு உள்ள உணவு விடுதி ஒன்றுக்கு மோட்டார் சைக்கிள் ஒன்றில் உமா மகேஸ்வரனும் ஜோதீஸ்வரன் என்னும் கண்ணனும் வந்தனர்.

அதே சமயத்தில் அங்கு பிரபாகரனும் அவரோடு சிவகுமார் என்பவரும் அங்கு தற்செயலாக வந்தனர். பிரபாகரன் உமா மகேஸ்வரனைக் கண்டுவிட்டார்.

தன்னால் மரணதண்டனை விதிக்கப்பட்டவர் கண் எதிரில் நிற்கிறார். என்ன செய்யலாம்?

உடனடியாக தனது கைத்துப்பாக்கியை எடுத்த பிரபாகரன், உமா மகேஸ்வரனை நோக்கி சுடத் தொடங்கினார்.


அப்போது பாண்டி பஸார் பகுதியில் கடமையில் இருந்த பொலிசார் இரு பகுதியினரையும் உடனடியாகக் கைது செய்தனர்.

அப்போது தமிழக முதல்வராக இருந்தவர் எம்.ஜி.ஆர்.

பிரபாகரனையும், உமா மகேஸ்வரனையும் வெளியே விடவேண்டாம். உரிய நடவடிக்கை எடுக்கலாம் என்று பொலிசாருக்குத் தெரிவித்துவிட்டார் எம்.ஜி.ஆர்.

தமிழ்நாட்டில் ஈழப் போராளிகளுக்குள் நடந்த முதல் மோதல் சம்பவம் அதுதான்.

பத்திரிகைகளில் அந்தச் செய்தி வந்த போது தமிழ்நாட்டினைச் சேர்ந்த இலங்கைத் தமிழர்கள் மீது பற்றுக் கொண்ட பிரமுகர்கள் கவலை தெரிவித்தனர்.



மாத்தையா

# ஜே.ஆரின் யாழ் விஜயமும் - வெடித்த குண்டுகளும்.

"போராளிகள் தமது ஆயுதங்களை தமது நாட்டில் வைத்துவிட்டு வரவேண்டும். இங்கு வந்து தமிழ்நாட்டின் சட்டம், ஒழுங்குக்கு அச்சுறுத்தலாக இருக்கக்கூடாது. அதனை தமிழக அரசு அனுமதிக்காது", என்று தனது நிலைப்பாட்டை விளக்கியிருந்தார் எம்.ஜி.ஆர்.

## ஒற்றுமை முயற்சிகள்

இதே சமயம் கைதுசெய்யப்பட்ட ஈழப் போராளிகளை இலங்கை அரசிடம் ஒப்படைக் கக்கூடும் என்று தகவல்கள் வெளியாகின.

ஆனால் எம்.ஜி.ஆர். அரசு அதனை மறுத்தது. கைதுசெய்யப்பட்ட நால்வரும் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது.

இயக்கங்களுக்குள் ஒற்றுமை ஏற்படுத்தும் முயற்சிகளில் பலர் ஈடுபட்டனர்.

ஈரோஸ் அமைப்பில் இருந்து விலகியிருந்த 'அருளர்' சென்னையில் ஈ.பி.ஆர். எல்.எஃப் அலுவலகத்தில் தங்கியிருந்தார்.

இயக்கங்கள் மத்தியில் ஒற்றுமை முயற்சியில் அவரும் ஈடுபட்டார்.

புலிகள் என்ற பெயரை உமா மகேஸ்வரன் அணியினர் பயன்படுத்தக்கூடாது என்று பிரபாகரன் கூறினார்.

அதனை உமா மகேஸ்வரன் அணியினரும் ஏற்றுக்கொண்டனர்.

ஒற்றுமை நடவடிக்கைக்கு அருளர் ஒரு திட்டத்தை முன்வைத்தார். அந்த திட்டம் இதுதான்;

புலிகள்- இராணுவ விவகாரம்; புளொட்- அரசியல் விவகாரம்; ஈ.பி.ஆர். எல்.எஃப் - மாணவர் விவகாரம்; ஈரோஸ்- புனரமைப்பு, புனர்வாழ்வு விவகாரம் என்று பொறுப்புக்களை பகிர்ந்துகொள்வது. இதுதான் அருளரின் திட்டம்.

அருளரின் திட்டத்தை கேட்ட இயக்கங்களுக்கு கோபம் வந்துவிட்டது.

இந்த திட்டத்தை முன்வைக்கும்போது அருளர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகத்தில் இருந்து புளொட் அமைப்பினரோடு சென்று தங்கியிருந்தார்.

அவரது திட்டத்தால் ஏற்பட்ட கோபத்தால் புளொட் அமைப்பினரும் அருளரோடு முரண்பட்டுக்கொண்டனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகம் சென்ற அருளர் தாக்கப்பட்டார்.

'தனக்கிடா உத்தியோகம் தன் பிடரிக்குச் சேதம்' என்ற கதையாக அருளரின் திட்டம் முடிந்தது.

## லங்கா ராணி

ஆனாலும், அருளர் எழுதிய **'லங்கா ராணி'** என்ற நாவல் ஈழப் போராட்டத்தில் முதன் முதலில் வெளிவந்த சிறந்த இலக்கியப் படைப்பாகும் என்பதை மறுக்கமுடியாது.

இனக்கலவரத்தால் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி தமிழ் அகதிகளை சுமந்து சென்ற கப்பலில் கதை நடக்கிறது. கதையின் ஊடே 'ஈழம் ஏன் அவசியம் - அந்த ஈழம் எவ்வாறு அமைய வேண்டும்', என்று எளிமையான விளக்கங்கள் உரையாடல்களாக அமைந்திருந்தன.



காரைநகர் பாலத்தில் வெடி

ஐந்து குண்டுகள்!

ஆறு மைல் தூர மக்களை கிலி கொள்ளச் செய்தது!

'ஜெனரேற்றர்' 'வயர்' களை கடற்படை கண்டுபிடிப்பு: ஐந்துமணிநேரம் போக்குவரத்து ஸ்தம்பிதம்!

காரைநகர்...

கடற்படையின் மீதான தாக்குதல் முயற்சி.

# அரசியல் தொடர்

- ஜே.ஆரை எதிர்ப்பது போல நடிப்பது ஒரு முகம்.
- ஜே.ஆரின் திருவடிக்கு விசுவாசமாக காவடி தூக்குவது இன்னொரு முகம்.
- கூட்டணிக்கு இருப்பது- இரண்டு முகம்.

ஈழ மாணவர் பொதுமன்றம்(GUES)

## நெல்லியடி தாக்குதல்

1981ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த அரச பயங்கரவாதம் இலங்கையெங்கும் தமிழர்களை எரித்தது. அதன்பின்னர் சரியாக ஒருவருடத்தின் பின்னர் - 1982ம் ஆண்டு ஜூலை மாதம் 2ம் திகதி புலிகள் ஒரு தாக்குதல் நடவடிக்கைக்கு தயாரானார்கள்.

யாழ்ப்பாணத்திலிருந்து 16 மைல் தூரத்தில் இருக்கிறது நெல்லியடி.

அங்கு ரோந்தில் ஈடுபடும் பொலிசார் மீது குறிவைத்தனர்.

திடீர்த்தாக்குதல். புலிகளது துப்பாக்கிகள் வேட்டுக்களைப் பொழிந்தன.

நான்கு பொலிஸார் கொல்லப் பட்டனர். மூன்று பொலிஸார் படு காயமடைந்தனர்.

பொலிஸ் கொன்ஸ்டபிள் குணபால, பொலிஸ் கொன்ஸ்டபிள் மல்லவராச்சி, பொலிஸ் கொன்ஸ்டபிள் அருந்தவராஜா, ஜீப் சாரதி ஆரியரட்ண ஆகியோரே கொல்லப்பட்டவர்கள்.

ஆயுதங்களை கைப்பற்றிக் கொண்டு புலிகள் மின்னல் வேகத்தில் தப்பிச் சென்றனர்.

அந்தத் தாக்குதலை தலைமை தாங்கி நடத்தியவர் சங்கர் என்று அழைக்கப்படும் எஸ்.சத்தியநாதன்.

## பிரபாவின் அணுகுமுறை

தனித்தலைமை என்ற போதிலும் கெரில்லா இயக்கத்திற்குரிய விதிகளை பிரபாகரன் நுட்பமாகக் கையாண்டார்.

**எதிரி எங்கே பலவீனமாக இருக்கின்றானோ அங்கே தாக்கு.**

**தாக்குவதற்கு கிடைக்கும் எந்தவொரு வாய்ப்பையும் தவறவிடக்கூடாது. அதற்கான திட்டங்களை வகுத்து நிலைமைக்கு ஏற்ப செயற்படும் சுதந்திரம் கெரில்லா அணித் தலைவர்களுக்கு இருந்தால்தான் கெரில்லாக்கள் போர்க்குணத்தோடு செயற்படமுடியும்.**

**எல்லாவற்றையும் தலைமையிடம் இருந்தே எதிர்பார்க்கத் தொடங்கினால் நடவடிக்கைகளின் வேகம் தடைப்படும்.**

**சிறந்த பொறுப்பாளர்களை நியமித்து முன்முயற்சி எடுத்து செயற்படும் சுதந்திரத்தை கொடுக்க வேண்டும். அதே சமயம் தலைமையின் உத்தரவுக்கு உடனடியாக கட்டுப்படும் வகையிலும் இருக்க வேண்டும்.**

இதுதான் பிரபாகரன் தலைமையின் கீழ் புலிகள் நடத்திய தாக்குதல்கள் வெற்றிகரமாக அமைந்தமைக்கு காரணம்.சாதனைகளின் அறுவடைக்கும் அது தான் காரணம்.

1977ல் பதவிக்கு வந்த ஜே.ஆர் 1982ல் ஜனாதிபதித் தேர்தலை சந்திக்கத் தயாரானார்.

## ஜனாதிபதித் தேர்தல்

ஜே.ஆர் அரசின் ஐந்து ஆண்டுகால ஆட்சி தமிழர்களுக்கு பயங்கரவாதத்தையும், இனக்கலவரத்தையும் பரிசாக வழங்கியிருந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு வாக்களிக்குமாறு கேட்டார் ஜே.ஆர்.

யாழ்ப்பாணத்திற்கு தேர்தல் பிரசாரத்திற்காக வரப்போவதாக திகதியும் குறித்தார்.

ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்தது தமிழர் விடுதலைக் கூட்டணி.

அதன்மூலம் ஜே.ஆர். அரசின் செல்லப்பிள்ளைகளாக கூட்டணி மாறிவிட்டது என்ற கருத்தை உடைந்துவிடலாம் என்பதுதான் கூட்டணியின் திட்டம்.

தேர்தலை பகிஷ்கரிக்கப் போவதாக அறிக்கை விட்டபோதும் எதிர்ப் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருந்தது கூட்டணி.

ஜே.ஆரின் நட்பை இழக்கவும் விரும்பவில்லை, தமிழர்களதும், இளைஞர்களதும் கோபத்தை சம்பாதிக்கவும் விரும்பவில்லை என்பதுதான் கூட்டணியின் நிலையாக அமைந்தது.

**ஜே.ஆரை எதிர்ப்பது போல நடிப்பது ஒரு முகம்.**

**ஜே.ஆரின் திருவடிக்கு விசுவாசமாக காவடி தூக்குவது இன்னொரு முகம்.**

**கூட்டணிக்கு இருப்பது இரண்டு முகம்.**

என்று கண்டனம் தெரிவித்தது ஈழமாணவர் பொதுமன்றம் (G.U.E.S)

ஜே.ஆரின் வருகையை இயக்கங்கள் எதிர்த்தன. புலிகள் தமது பாணியில் எதிர்ப்பு தெரிவிக்கத் திட்டமிட்டனர்.

## பாலத்தில் குண்டுகள்

1982ம் ஆண்டு செப்டம்பர் 29ம் திகதி ஜே.ஆர். யாழ்ப்பாணம் சென்றார்.

அதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் காரைநகரில் உள்ள பொன்னாலைப் பாலத்தில் வெடிகுண்டுகளை புதைத்து வைத்துவிட்டு காத்திருந்தனர் புலிகள்.

அந்தப் பாலத்தின் வழியாகத்தான் காரைநகர் கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் யாழ் நகருக்கு வர வேண்டும்.

ரோந்து நடவடிக்கைக்காகவும், குடிநீர் எடுத்துச்செல்லவும் கடற்படை வாகனங்கள் அந்தப் பாலம் வழியாக வந்து செல்வதுண்டு.

அன்றும் வரிசையாக கடற்படை வாகனங்கள் பாலம் வழியாக வந்து கொண்டிருந்தன.

நேரம் அதிகாலை 6.30 மணி. குண்டுகளை வெடிக்கவைத்ததில் சிறு தவறு.

கடற்படை வாகனங்கள் தப்பிக் கொண்டன. பாலம் பெரும் சேதமடைந்தது.

குண்டுகள் வெடித்த சத்தம் மூன்று மணிநேரம் தொடர்ந்து கேட்டது.

குறி தவறியபோதும் ஜே.ஆருக்கு தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பாக அந்த நடவடிக்கை அமைந்தது.

இலங்கைப் படையினருக்கு எதிரான முதலாவது நிலக்கண்ணி வெடித் தாக்குதல் முயற்சியாகவும் அது அமைந்தது.

அந்த தாக்குதல் தோல்வியில் முடிந்தமையால் மற்றொரு பாரிய தாக்குதலுக்கு திட்டமிட்டனர் புலிகள்.

தாக்குதலுக்கு தலைமைதாங்கும் பொறுப்பு சார்ல்ஸ் அன்ரனி என்னும் சீலனிடம் ஒப்படைக்கப்பட்டது.

(தொடர்ந்து வரும்)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# பாதுகாப்பு செயலாளராகியுள்ள தேர்தல் ஆணையாளர்

அலசுவது - இராஜதந்திரி


பண்டாரநாயக்காவின் ஆட்சியில் இடதுசாரிப்பிரமுகர்கள் பலர் அங்கம் பெற்றிருந்தனர். இவர்கள் அன்று கம்யூனிஸப் போக்கைக் கொண்டிருந்த பல நாடுகளுடன் தொடர்புகளை வைத்திருந்தனர்.

ஆயினும் அன்றைய இடதுசாரித் தலைவர்களால் தென்னிலங்கையில் ரோஹன விஜேவீர தலைமையில்

பிரசுரங்களை வெளியிடலாம். அனால் தென்னிலங்கையில் ஆக்கபூர்வமான அரசியல் அழுத்தங்களை அவர்களால் வழங்க முடியாது என்பதனையே கடந்த கால அனுபவங்கள் மூலமாக அறிந்து கொள்ளமுடியும்.

திரு.வாசுதேவ நாணயக்கார குழுவினருடன் யாழ்ப்பாணம்

# போர்க்களங்கள் தேர்தல் களங்களாக மாறுமா?



சந்திரானந்த டி சில்வா

செலவீனம் என்பது யுத்தங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் போதுமட்டுமல்லாமல் ஏனைய காலத்திலும் பராமரிப்புப்பணிகள் என்ற ரீதியிலும் பெருமளவில் இருக்கின்றன.

இன்று ஆயிரக்கணக்கான இளைஞர்கள் முப்படைகளிலும் சேர்ந்திருக்கக் காணப்படுகின்றனர். இவர்களுக்கான ஊதியம், கொடுப்பனவுகள் என்பவற்றைவிட கடந்த காலங்களில் யுத்தங்களின்போது கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கான நஷ்ட ஈடுகள், மற்றும் அக் குடும்பங்களுக்கான மாதாந்த கொடுப்பனவுகளும் பெருமளவில் அமைந்திருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை புனர்வாழ்வு, புனரமைப்பென்பது வடக்கு - கிழக்கு யுத்த நிலவரத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல, ஏதோ ஒரு வகையில் முழு நாடுமே அரசியல், பொருளாதார, சமூக ரீதியாகப் புனரமைக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது.

திரு.வாசுதேவ நாணயக்கார ஒரு சமாதானப் பிரியராக தமது சகாக்கள் சகிதம் வடபகுதிக்குச் சென்றிருந்தார். அங்கே சமாதானம் வேண்டும், போர் ஓயவேண்டும் என்றெல்லாம் அவர் பேசிமுழங்கியிருந்தார்.

ஆனால் இந்த

உருப்பெற்ற கிளர்ச்சியை அரசியல் ரீதியாக தகுந்த முறையில் அணுக முடியவில்லை.

இராணுவத்தைக் கட்டவிழ்த்துவிட்டு கிளர்ச்சியாளர்களை கடுமையான முறையில் அன்றைய சிறிமாவோ அரசு கையாண்டது.

நூற்றுக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் அன்று படையினரால் வேட்டையாடப்பட்டனர். இலங்கையின் இடதுசாரித் தலைவர்களில் முக்கியமானவர், ஏகாதிபத்திய வாதங்களுக்கு விரோதமானவர் என்று வர்ணிக்கப்பட்ட அன்றைய நிதியமைச்சர்

சென்றிருந்த தென்னிலங்கையின் பிரபல அரசியல் விமர்சகரான டாக்டர் ஜயதேவ உயன்கொட கருத்து வெளியிடுகையில், "தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்கான ஆர்வம் பெருமளவில் காணப்படுகின்றது." என்று தெரிவித்துள்ளார்.

"தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவரீதியான பலம் குன்றி விட்டதாகவோ, அல்லது அவர்கள் பலவீனமான நிலையில் ஒரு தீர்வை எதிர்பார்க்கின்றார்கள் என்றோ நாம் கருதி விட முடியாது! கௌரவமான

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான சமாதான அணுகுமுறைகள் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கும் இத்தருணத்திலேயே தென்னிலங்கையிலிருந்து சமாதான யாத்திரையொன்று வடபகுதிக்கு மேற் கொள்ளப்பட்டிருந்தது.

"சமாதானம் வேண்டும், போர் ஓய வேண்டும்." என்றெல்லாம் வடக்கே சமாதான யாத்திரை சென்றோர் கோஷமிட்டிருந்தனர்.

தென்னிலங்கையர்களின் வடக்கு, கிழக்கு சர்ச்சை குறித்த மனோபாவம் பெருமளவு மாற்றமடைந்திருப்பதனையே கடந்த ஆண்டில் நடந்து முடிந்த தேர்தல்கள் புலப்படுத்தியிருந்தன.

வடக்கு - கிழக்கு யுத்தம் நீடிப்பதை



## அரசியல், சமூக பொருளாதார ரீதியாக முழு நாடுமே புனரமைப்புக்குள்ளாக வேண்டிய நிலை!

# இலங்கையின் சந்தர்ப்பவாத இடதுசாரிகள்!

தென்னிலங்கையர்கள் விரும்பாததையும், அரசியல் தீர்வொன்று இலங்கை இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக எட்டப்பட வேண்டியதன் அவசியத்தை அவர்கள் உளப்பூர்வமாக உணர்ந்திருப்பதனையே நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

கூடவே இன்று தென்னிலங்கையில் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் ஆகியோர் பங்கு பற்றும் பல்வேறு அரங்குகளிலும் சமாதானத்தின் தேவையும், வடக்கு-கிழக்கு சர்ச்சைக்கு அரசியல் தீர்வொன்றின் இன்றியமையாமையும் என்றுமில்லாதவாறு இடித்து உரைக்கப்படுவதையும் நன்கு அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.

கடந்த ஜனவரி மாதம் அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே போர் தவிர்ப்பு ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததன் பின்னர் வடக்கு - கிழக்கில் முழு அளவில் அசம்பாவிதங்கள் ஓய்ந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

படையினரும், புலிகளும் போர்தவிர்ப்பு ஒப்பந்தத்தை நேர்த்தியாக அனுசரித்து, தம்மிடையே எக்கட்டத்திலும் பிசகுகள் தோன்றுவதைத் தவிர்த்து வரக் காணப்படுகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் ஏற்படுத்தப்பட்ட போர் தவிர்ப்பு ஒப்பந்தத்துடன் மட்டுமே காலங்கழிந்து வருகிறதேயல்லாமல் அரசியல் அணுகுமுறைகள் எவ்வகையிலும் துரிதமடைந்திருக்கக் காணப்படவில்லை.

சந்திரிக்காஅரசாங்கம் தனது முதலாவது வரவு செலவு திட்டத்தை கடந்த காலங்களில் போன்றே பாதுகாப்புத்துறைக்கு பெருமளவு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

பாதுகாப்புத்துறை என்பது இன்று பருத்து வியாபித்திருக்கின்றது. இந்நிலையில் இத்துறைக்கான

இது தவிர பல நூற்றுக்கணக்கான ஊனமுற்றபடையினரும் இன்று பாதுகாப்புத்துறையின் தயவையே சார்ந்திருக்கின்றனர். இவர்களுக்கான மாதாந்த வேதனம், மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் என்பனவும் மனிதாபிமான அடிப்படையில் பாதுகாப்பமைச்சினாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

ஊனமுற்ற படையினர் இன்று அவர்களது குடும்பச் சூழலில் சுமைமிக்கவர்களாக இருப்பதையே அவர்கள் குறித்த ஆய்வுகள் புலப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் இந்த ஊனமுற்ற படையினருக்கான புனர்வாழ்வுப் பணிகளுக்கும் பெருமளவில் பணம் தற்போது விரயமாகி வருகின்றது.

பிரதி நிதியமைச்சரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கடந்த மாதம் வரவு செலவுத்திட்டத்தை பாராளுமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

அவர் தமது 'பட்ஜட்' உரையில் நாட்டில் அபிவிருத்திப் பணிகள் துரிதப்படுத்தப்படுவதற்கு வடக்கு-கிழக்கு யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதுடன், இனப்பிரச்னைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும் என்று கூறியிருந்தார்.

கூடவே சமாதான முயற்சிகள் வெற்றிபெறும் பட்சத்தில் இதுவரை காலமும் யுத்தத்தில் குதித்திருந்தவர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்கள், அவற்றுக்கான தொழில் பயிற்சிகள் என்பன வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் பேராசிரியர் பீரிஸ் சுட்டிக்காட்டியிருந்தார். தென்னிலங்கையில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, வடக்கு - கிழக்கில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கும் தொழில் வாய்ப்பு, தொழில் பயிற்சி என்பன பாகுபாடற்ற முறையில் வழங்கப்பட வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

திரு.வாசுதேவநாணயக்காரவின் சமாதான முயற்சி, அரசியல் பின்னணி என்பன விரிவாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவையாகவுள்ளன.

தென்னிலங்கையில் ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பவையே ஆட்சிப் பீடம் ஏறுமளவுக்கு மக்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பெரும்பாலும் இடதுசாரிகளுடன் கூட்டுச்சேர்ந்தே ஆட்சியமைப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளது.

1970ம் ஆண்டு திருமதி.சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசு பதவிக்கு வந்த போது இடதுசாரி அரசியல் முக்கியஸ்தர்கள் பலரும் திருமதி சிறிமாவோவின் ஆளுங்கட்சியில் அங்கம் வகித்தனர்.

டாக்டர் என்.எம்.பெரேரா, டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வா, திரு.பீட்டர் கெனமன், போன்ற முன்னணி இடதுசாரிப் பிரமுகர்கள் பலரும் சிறிமாவோவின் அன்றைய அரசாங்கத்தில் அங்கம் பெற்றிருந்தனர்.

இவ்வகையில் கடந்த ஆண்டு பதவிக்கு வந்த திருமதி.சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கவின் அரசாங்கமும் இடதுசாரிகள் பலரைக் கொண்டிருக்கக் காணப்படுகிறது.

தென்னிலங்கையில் இடதுசாரிகளின் கடந்தகால வரலாற்றைப் பார்க்கையில், அவர்கள் வெறுமனே காட்டுக் கூச்சல் போடுபவர்களாகவும், ஊர்வலங்கள், கூட்டங்களைப் போட்டு சிவப்பு நிறக் கொடிகளைப் பறக்கவிட்டு, தாமும் சிவப்புநிற ஆடைகளை அணிந்து 'தம்பட்ட'மடிப்பவர்களாக இருக்கக் காணப்பட்டனரே தவிர ஆக்கபூர்வமாக, உருப்படியாக எதனையும் சாதிக்க முடியாதவர்களாகவே காணப்படுகின்றனர்.

1970ம் ஆண்டு திருமதி. சிறிமாவோ

டாக்டர் என்.எம்.பெரேரா கூட கிளர்ச்சியாளர்களை கடுமையாக விமர்சித்ததுடன் இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தியிருந்தார்.

இத்தனைக்கும் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள், மற்றும் தென்னிலங்கை இளைஞர்களின் எதிர்பார்ப்புகள் நிவர்த்தி செய்யப்படாததாலேயே அன்று ரோகன விஜேவீர தலைமையில் ஜனதா விமுக்தி பெரமுனையினர் (ஜே.வி.பி) கலகத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் அன்று பதவியிலிருந்த இடதுசாரிகள், கம்யூனிஸவாதிகள் கூட கிளர்ச்சியாளர்களின் உள்ளக்கிடக்கையைப் புரிந்துகொள்ள முடியாது அடக்குமுறையாளர்களாகவே செயல்பட்டிருந்தனர்.

தமக்கு வாய்ப்பான அரசியல் சூழ்நிலைகள் தென்படும் போது தமது சுயலாபம் கருதி செயற்படுவோராகவே இலங்கையின் இடதுசாரிகள் இருந்து வந்துள்ளனரே தவிர தமது தனித்துவத்தைப் பேணுவதில் அவர்கள் உறுதியற்றிருந்ததையே காணமுடிகின்றது.

1971ம் ஆண்டு இடம்பெற்ற கிளர்ச்சியின் போது மட்டுமல்ல, 1983ம் ஆண்டு இடம் பெற்ற இனக்கலவரம், மற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட யுத்த நிலவரங்கள் என்பவை குறித்துக் கூட ஒரு தெளிவான அரசியல் கண்ணோட்டத்தையோ அல்லது வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தீர்வுகுறித்து உறுதியான நிலைப்பாட்டையோ கொண்டிருக்க முடியாதவர்களாகவே இலங்கையின் இடதுசாரிகள் விளங்கியிருந்தனர்.

இந்நிலையில் திரு.வாசுதேவ நாணயக்காரவும், அவரோடிணைந்து யாழ்ப்பாணம் சென்ற ஏனைய இடதுசாரிகளும் வெறுமனே சமாதானம் வேண்டும், போர் ஓயவேண்டும் என்ற ரீதியில் கூச்சலிட்டு அறிக்கைகள்,

ஒரு தீர்வு ஏற்படுமானால், அத்தீர்வு சமஷ்டி அமைப்பின் அடிப்படையில் கிடைக்குமானால் தமது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவர புலிகள் முன்வருவார்கள் என்பதனையே என்னால் ஊகிக்க முடிகிறது" என்று டாக்டர் ஜயதேவ உயன்கொட தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சமாதானம் பற்றிப்பேசி அதை வலியுறுத்தி பாடல்களைப்பாடி, பிரசுரங்களை வெளியிட்டு ஆர்ப்பரிப்பதை விட அரசியல் ரீதியாக செயலில் இறங்கி நிரந்தர சமாதானத்துக்காகப் பாடுபடுவதே இன்றைய தேவையாக இருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிக்கா அரசு தமிழீழ விடுதலைப்புலிகளுடன் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி இரண்டு மாதங்கள் நகர்ந்திருக்கின்றன.

இந்த இரு மாதகாலத்திலும் வடக்கு-கிழக்கில் பாரியளவு அசம்பாவிதங்கள் இடம்பெறாது பூரண அமைதி நிலவுவது வரவேற்கத்தக்கதாகவே இருக்கின்றது.

இதுவரை காலமும் அரசியல் கட்சிகளை வழி நடத்திய முன்னாள் தேர்தல் ஆணையாளர் திரு.சந்திரானந்த டி சில்வா, பாதுகாப்புச் செயலாளராகப் பதவியேற்றுள்ளார்.

பாதுகாப்புத்தறையில் இதுவரை காலமும் இருந்து வந்த முற்றுமுழுதான இராணுவ அழுத்தங்களை குறைப்பதாகவே திரு.சந்திரானந்த டி சில்வாவின் நியமனம் காணப்படுகின்றது.

இந்நிலையில் இதுவரை காலமும் போர்க்களங்களாக இருந்து வந்த வடக்கு - கிழக்குப்பிரதேசங்களை மீண்டும் தேர்தல் களங்களாக்குவதில் திரு.சந்திரானந்த டி சில்வா எவ்வளவு தூரம் ஒத்துழைக்க முடியும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

தருவது
ரசிகன்

# அழகுப் புயல் பமீலா 3



அது பிரிட்டனின் பிரபலமான பத்திரிகை. அதன் பெயர் 'நியூஸ் ஒஃப் த வேர்ல்ட்.'

அதன் நெற்றியிலே ஒரு செய்தி. படித்தவர்களின் விழிப் புருவங்கள் ஆச்சரியத்தில் உயர்ந்தன.

"பொதுமக்கள் சபையில்
விலைமகளுக்கு என்ன வேலை?"

என்று கேட்டது அந்தப் பத்திரிகை. வினாவோடு நிறுத்தவில்லை. விபரங்களையும் வெளியிட்டது.

பாராளுமன்றத்தில் பமீலாவுக்கு உதவி ஆராய்ச்சி வேலைதான்.

பள்ளியறையில் வேறு ஆராய்ச்சிகளிலும் ஈடுபட்டிருப்பதால் பமீலா பகட்டான மாளிகையில் வாழ்கிறாள்.

அந்த மாளிகையின் வாடகை, அவள் உதவி ஆராய்ச்சியாளர் வேலைக்கு பெறும் ஊதியத்தைவிட உயரமாக இருக்கிறது.

என்றெல்லாம் அந்தப் பத்திரிகை வெளியிட்ட தகவல் காட்டுத் தீயாகப் பரவியது.

"பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் மானம் காற்றில் பறக்கப்போகிறதா?" விமர்சனங்கள் தீப்பொறிகளைத் துப்பின.

பாரிசில் இருந்த பமீலாவுக்கும் செய்திகள் எட்டின.

தித்திக்கும் இதழ்களில் புன்னகை ஏந்தினாள்.

"யாரோ ஒரு புத்திசாலி நிருபர் நெவர்."

பமீலா மூச்சுவிடாமல் பேசிவிட்டு ஜிம் டேவிட்சனைப் பார்த்தாள். சட்டென்று அவரிடம் கேட்டாள்;

"நீங்கள் சொல்லுங்கள் டேவிட்! நான் விலை மகளா?"

"நோ.....நோ... நீ விலையில்லாத தேவதை."

"தாங்க்யூ டேவிட். தாங்க்யூ."

அவரை இறுக அணைத்து இதழ்களால் கலந்தாள்.

□□

ரோமானிய இளவரசர் போல் பமீலாவின் இடையை வளைத்துக்கொண்டு அவள் காதருகே குனிந்து கேட்டார்,

"தொடுவதால் ஒன்றும் முறிந்துவிடாதல்லவா?"

"உங்கள் விரல்கள் அப்படி ஒன்றும் கொடியவையல்லவே?"

இளவரசர் குளிர்ந்து அவள் கன்னத்தில் தன் உதடுகளால் தொட்டார்.

"இனியவள் நீ."

"உயர்ந்தவர் தாங்கள்."

"அனைத்துமே இனியவை!"

"அத்தனையும் உங்களுக்கே!"

ரோம் இளவரசர் தன்னை இழந்தார் பமீலாவிடம்.

□□

பமீலா எங்கே? பத்திரிகையாளர்கள் தேடி அலைந்தனர்.

சிக்கினாள் ஒருநாள். கேள்விகளை வீசினார்கள் நிருபர்கள்.

"நிறுத்துங்கள்! கேள்விகளை ஒரு



பமீலா

தெரியாமல் போகும்."

"அப்படியானால் பட்டியலை வெளியிடும் உத்தேசமே கிடையாதா?"

பமீலாவின் இதழ்களில் ஒரு குட்டிப் புன்னகை குந்தியிருந்தது.

"விருந்து பெற்றவர்கள் கனவான்கள். அந்தக் கனவான்கள் என்னைப்பற்றிக் கண்ணியமின்றிப் பேசினால், என் உதடுகள் அவர்களைப்பற்றியும் பேசும்."

ஏமாற்றத்தோடு நிருபர்கள் கலைந்தனர்.

எல்லோரும் நகர ஒரு நிருபர் மட்டும் தயங்கி நின்றார்.

"என்ன செல்ல மனமில்லையா?"

"உங்களிடம் ஒரு விடயம் பேச வேண்டும்."

"என்னைச் சந்திக்கும் எந்த ஆண்மகனும் இப்படித்தான் ஆரம்பிக்கிறான் பேச! ம்...சொல்!"

"விசாரணையோ, விருந்தோ என் தேவையல்ல."

"தூரவே நின்று என் அழகை
அருந்தப் பேசிறாயா?"

பமீலா கேட்டுவிட்டுச் சிரித்தாள்.

"நோ! என் நோக்கம் வியாபாரம்! சில புகைப்படங்களுக்கு நீங்கள் 'போஸ்' கொடுக்க வேண்டும்."

"பதிலுக்கு நீ என்ன கொடுப்பாய்?"

"தேவையான பணம். ஆடை குறைவதற்கு ஏற்ப தரப்படும் பணம் உயரும்."

"அதாவது இழப்புக்கு ஏற்ப நஷ்ட ஈடு! குட் பொலிஸி. நான் ஓ.கே! உன் பத்திரிகையின் பெயர் என்ன?"

"மென் ஒன்லி" (ஆண்கள் மட்டும்)

உடலின் ஏற்ற இறக்கங்களோடு துணியில்லாமல் பமீலாவை 'மென் ஒன்லி'யில் கண்டவர்கள் பலர் தூங்கவே மறந்தனர்.

□□

பமீலா.. பமீலா..... பமீலா.... கிட்டத்தட்ட பத்து வருடங்கள் அவள் பெயர் உலகச் செய்திகளை ஆக்கிரமிப்புச் செய்தது.

திடீரென்று சிறு இடைவெளி.

பமீலா மௌனமானாள். தலைமறைவானாள்.

□□

இந்தியாவில் தமிழ்நாடு. அதன் தலைநகரம் சென்னை. 1992ம் ஆண்டு.

தோளிலே கமரா தொங்க ஒரு அழகி தமிழ்நாடு அரசின் மறுவாழ்வுத் துறை இயக்குநரைச் சந்தித்தாள்.

"என்ன வேண்டும் உங்களுக்கு?"

"இலங்கை அகதிகள் பற்றிய தகவல்கள் வேண்டும். காரணம், இங்கிலாந்து பத்திரிகை ஒன்றில் இலங்கை இனப்பிரச்சினை பற்றி தொடர்கட்டுரை எழுதப்போவது நான்."

தமிழ்நாட்டில் இருந்த இலங்கைப் பிரமுகர்கள் பலரையும் அந்த நவநாகரீக அழகி சந்தித்துப் பேசினாள். (பேசியது மட்டும்தான்.)

இரண்டு வாரங்களின் பின்னர் அவளைக் காணவில்லை. யார் அந்தப் பெண்? விசாரித்தபோது அதிர்ச்சி!

அவள்தான் பமீலா!

அதுமட்டுமல்ல; மற்றொரு செய்தியும் வெளியாகியது.

சென்னையில் இருந்து அவள் புறப்படும்போது ஒரு நிருபர் கேட்டார்,

"எங்கே போகிறீர்கள்?"

அதற்கு பமீலா சொன்னாள்;

**"யாழ்ப்பாணம் சென்று புலிகளது தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேட்டி காணப்போகிறேன். வரட்டுமா?"**

அந்தச் செய்தி பெரிதாக வெளியாகி பரபரப்பூட்டியது.

ஆனால் இப்போது பமீலா எங்கே?

யாருக்கும் தெரியாத மர்மம் அது!

"ஓ இனிய அழகியே நீ எங்கே இருக்கிறாய்?"

என்று உங்களில் யாராவது தேடிப் புறப்பட்டால் அதற்கு நாம் பொறுப்பல்ல.

(சுபம்)

**'பதிலுக்கு நீ என்ன தருவாய்?"**
**'பணம்..... ஆடை குறைவதைப் பொறுத்து தரப்படும் பணமும் உயரும்"**
**" அதாவது இழப்புக்கு ஏற்ற நஷ்டஈடு?"**
**அழகி பமீலா சிரித்தாள்.**

## உண்மைக் கதை



துடுக்குத்தனமாக மோப்பம் பிடித்து விட்டான்."

என்றாள். என்றது ஹொலிவூட் நடிகர் ஜிம் டேவிட்சனிடம்.

"சினிமாவைவிட ருசிகரமாக இருக்கிறது உன் கதை. உன்னை வைத்தே ஒரு படம் தயாரிக்கலாம் டியர்."

என்றார் ஜிம் டேவிட்சன்.

பமீலா போதையாய் சிரித்தாள்.

"கவலைப்படவேண்டிய நேரத்தில் சிரிக்கிறாயே நீ?"

"ஏன் கவலைப்படவேண்டும் டேவிட்? நான் என்ன வீதியில் நின்று கூவியழைத்தேனா? வீடுகளுக்கு சென்று விருந்துக்கு வாருங்கள் என்று விண்ணப்பம் போட்டேனா? தேவையானால் என்னை உபயோகிக்கலாம். என்று விளம்பரம் செய்தேனா? நோ.

ஓரத்தில் போடுங்கள்."

"விடை சொல்லக் கூடாது என்று வி.ஐ.பிக்களிடமிருந்து மிரட்டலா?"

அதுவும் ஒரு செய்தியாகுமே
என்று துருவினார்கள் நிருபர்கள்.

"மிரட்டலா எனக்கா? கிடையாது! அனால் நான் மிரளுகிறேன்."

"அதுதான் ஏன் என்கிறோம்."

"பூகம்பம் வரும் என்று!"

விலை மகள் எப்போது விஞ்ஞானியானாள்? நிருபர்கள் கேலியாகப் பார்க்க, பமீலா கால்மீது கால் போட்டபடி அவர்களை அலட்சியமாகப் பார்த்தாள்.

"நான் வாய்திறந்து பேசினால் பூகம்பம் உருவாகும். என் கட்டிலில் உருண்டவர்களின் பட்டியலை வெளியிட்டால்...?"

"வெளியிட்டால்....?"

"ஆட்சிக் கட்டிலே இருந்த இடம்

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## ஒரே இடத்தில் இருப்பது முறையா?



தொடர்ந்து ஓரிடத்தில் இருக்கும் ஒருவரின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப் படுவதாக ஃபிரான்ஸில் உள்ள தேசிய வைத்தியர்களின் ஒன்றியம் ஒன்று சமீபத்தில் மேற்கொண்டிருந்த பரிசோதனை மூலம் கண்டு பிடித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

சிறந்த ஆரோக்கிய நிலையைக் கொண்டிருந்த ஃபிரான்ஸ் இளைஞர் பலரைக் கொண்டு பரிசோதனை நடத்தப்பட்டது. அந்தப் பரிசோதனையில் அவ்விளைஞர்களை தொடர்ந்தும் இரு வாரகாலம்வரை ஒரே இடத்தில் தங்கியிருக்க வைத்தனர். பின்னர் அவர்களின் ஆரோக்கியத்தை பரிசோதிக்கும்பொழுது அவ்விளைஞர்களிடம் இருந்து வந்த நோய் எதிர்ப்பு சக்திகள் 40 தொடக்கம் 50 வீதம் வரை குறைந்து காணப்பட்டிருந்ததாக அப்பரிசோதனையாளர்கள் செய்தி வெளியிட்டுள்ளனர்.

இச் செய்தியை ரஷ்யாவைச் சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்களும் உறுதிப் படுத்தியுள்ளதோடு இவ்வாறானவர்களுக்கு புற்று நோய்த் தாக்கங்களும் ஏற்பட வாய்ப்புள்ளதாக ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.


## விஷயமுள்ள பாண்

ஆண்களின் வீரிய விருத்தியை வலுப்படுத்த வல்ல மருந்து வகைகளின் சேர்க்கையுடன் கோதுமையைக் கொண்டு பாண் தயாரிக்கும் முயற்சி வெற்றியளித்துள்ளது.

மொஸ்கோவில் உள்ள உணவு உற்பத்தி நிறுவனம் ஒன்று மேற்கொண்டு வந்த அந்த முயற்சி சமீபத்தில் வெற்றியளித்துள்ளதாக ராயட்டர் நிறுவனச் செய்தியொன்றின் மூலம் தெரியவருகிறது.

இவ்வுணவு உற்பத்தி நிறுவனம் ரஷ்ய சுகாதாரத் துறையினரின் உதவியுடன் கடந்த இரு வருடகால்மாக தொடர்ச்சியாக மேற்கொண்டிருந்த பல பரிசோதனைகளுக்கு பின்பே தற்பொழுது இம் முயற்சி வெற்றி கண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இப் பாணில் அடங்கப் பெற்றுள்ள விஷேசத்தன்மை என்னவென்றால், ஆண்களின் வீரியத்தை விருத்தி செய்வதற்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் அவர்களின் உடலில் உள்ள கொலஸ்ட்ரோலையும் சம



நிலைப்படுத்தி அவசியமற்ற உடல் பருமனையும் குறையச் செய்வதாக மேலும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திங்கட்கிழமை திடுக்கிடச் செய்யும்!

பெரும்பாலான இதயத் தாக்கு நிகழ்வுகள் அதிகாலைப் பொழுதில்தான் ஏற்படுகின்றன என்று அண்மைய ஆய்வுகள் பலவும் உறுதி செய்கின்றன. இதயத்தாக்கினால் பாதிக்கப்பட்ட சுமார் 3000 பேர்களைக் கொண்டு செய்யப்பட்ட ஆய்வு ஒன்றில் 25 சத விகித்தினர் படுக்கையிலிருந்து எழுகின்ற வேளையிலும் இன்னும் 25 சதவிகிதத்தினர் எழுந்திருந்த மூன்று முதல் நான்கு மணி நேரத்திற்குள்ளும் இதயத் தாக்கத்திற்கு உள்ளானார்கள் என்று தெரிய வந்துள்ளது என்று கூறுகிறார் பால்டிமோர் மருத்துவ மையம் சார்ந்த டாக்டர் ராபர்ட் பீட்டர்ஸ்.

இதற்கு மேல் இன்னொரு புதிய செய்தி: வாரத்து நாட்களில் திங்கட்கிழமை காலையில்தான் அதிகமான இதயத்தாக்குகள் ஏற்படுகின்றன என்பதுதான் அது. இரண்டு நாள் விடுமுறைக்குப் பிறகு அலுவலகம் செல்லவேண்டிய மன இறுக்கம் மற்றும் மனக் கலக்கம் போன்றவற்றால் இது ஏற்படக்கூடும் என இதய நோயியலாளர் கருதுகின்றனர்.

## இடுப்பு வலிக்கு மருந்து வேண்டாம்!

இடுப்பு வலிக்கு சிகிச்சையேதும் மேற்கொள்ளாது தானாகவே குணமடைய விடுவதே சிறந்த சிகிச்சை முறையாகுமென்று அமெரிக்காவிலுள்ள ஹெல்சின்க்கி சுகாதார சேவை நிறுவனம் கூறியுள்ளது.

அந்த நிறுவனம் சமீபத்தில் மேற்கொண்டிருந்த பரிசோதனை ஒன்றின் மூலம் இது தெரிய வந்துள்ளதாக 'த நியூ இங்கிலன்ட்' எனப்படும் மருத்துவ சஞ்சிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இடுப்பு வலியால் பாதிக்கப்பட்டிருந்த 186 பேர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டிருந்த இப்பரிசோதனையில் பல்வேறு வகையான மருந்து மற்றும் சிகிச்சைகள், ஒய்வு, உடற்பயிற்சி போன்றவைகளில் ஈடுபட்டிருந்த நோயாளர்களை விட இவை எதையும் மேற்கொள்ளாத நோயாளர்களே ஆரோக்கியமாகவும் விரைவாகவும் குனமடைந்து காணப்பட்டிருந்ததாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



1944இல்-இத்தாலியில்"பில்' ஹெலன் 1942இல்

# ஓ.. அன்பே.. அன்பே.. அன்பே

# நீ அங்கே நான் இங்கே.

1993ம் ஆண்டு ஆகஸ்ட் 23ம் திகதி தங்களுடைய திருமணமாகி 48வது ஆண்டு விழாவினை வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள்- பில்குக்-ஹெலன் அப்பிள்ரன் தம்பதியினர்.

இவர்கள் இருவரும் முதன் முதலில் 1941 கோடைகாலத்தில் சந்தித்தனர். பில் 27 வயது இராணுவ காப்ரன். ஹெலன் 21 வயது கல்லூரி மாணவி. கண்டதும் காதல். இரண்டு மாதங்கள் ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்துகொள்ளும் வகையிலான சந்திப்புகள். இராணுவக் கடமை காரணமாக பிற நாடு செல்வதற்கு பில் தயாரானபோது திருமண நிச்சய தார்த்தம் இடம்பெற்றது.

இரண்டாவது உலகப் போர் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருந்தமையினால் மீண்டும் எப்போது சந்திப்பது- எப்போது திருமணம் முடிப்பது என்ற சந்தேக நிலை இருந்து வந்தது. இருப்பினும் 4 1/2 வருடங்களில் இவர்கள் இருவருக்குமிடையில் பரிமாற்றப்பட்ட காதல் கடிதங்கள் எவ்வளவு தெரியுமா?

## மொத்தம் ஆறாயிரம்!

உலக சாதனைப் புத்தகமான கின்னசில் இடம் பிடித்துள்ளனர். காதல் கடிதம் எழுதியதில் உலக சாதனை படைத்திருப்பது சுவாரசியமான சமாச்சாரம்தானே?

Bill was a 27-year-old Army chaplain and Helen was a student, aged 21, living with her father at the time in Diss, Norfolk. It was love at first sight. After a courtship lasting two months, and shortly before Bill was due



காதல் கடிதங்களுடன் ஹெலன் பில்

# இத்தனை சிறிய மனிதருக்கு

# எத்தனை பெரிய குணமிருக்கு!



ஷெரான், ஸ்டோசி தம்பதியினர் குள்ளமானவர்கள்.

இருவருக்கும் ஒரு மனக்குறை. கொஞ்சி மகிழ ஒரு குழந்தைப் பாப்பா இல்லையே என்பதுதான் குறை.

திடீரேன்று ஒரு செய்தி. செவியில் தேன்பாய்ந்தது போல தம்பதியினருக்கு இனித்தது.


ஒரு விடுதியில் அநாதைக்குழந்தை இருப்பதாகத்தான் செய்தி. ஓடினார்கள் இருவரும் அந்த அநாதை விடுதிக்கு.

அங்கே ஒரு ஆச்சரியம் காத்திருந்தது. அந்த அநாதைக் குழந்தையும் குள்ளமாக பிறந்த குழந்தைதான். அதனால்தான் பெற்றவர்கள் கைவிட்டுவிட்டார்களாம்.


குள்ளத்தம்பதியினர் அந்தக் குழந்தையை மகிழ்வோடு தத்தெடுத்துக் கொண்டனர்.

இப்போது தங்கள் சொந்தக் குழந்தையாகவே- அதனை வளர்க்கின்றனர் தம்பதியினர். குழந்தைக்கு பிரிட்டானி என்று பெயரும் சூட்டிவிட்டனர்.

## தகவல் பெட்டி



## தலை இரண்டு உடல் ஒன்று



ஐக்கிய அரபு எமிரேட்சிலுள்ள அஜ்மான் நகரில் அல் ஸஹாரா மருத்துவமனையில் இரு தலைகளையுடைய ஆண்குழந்தை ஒன்று 24.01.95ல் பிறந்தது. இக்குழந்தை சிசேரியன் சத்திர சிகிச்சை மூலம் வெளியே எடுக்கப்பட்டவுடன் இறந்துவிட்டது. இதன் தாய் பங்களாதேசைச் சேர்ந்த 16 வயதுப் பெண்.

குழந்தையின் தாயார் கர்ப்பமாக இருக்கும் போதே அசாதாரணமான கர்ப்பமாகத்தான் இருக்க வேண்டும் என்று கருதப்பட்டமையினால் 'ஸ்கானிங்' பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுது இரு தலைகளும் இரு முதுகெலும்புகளும் தென்பட்டமையினால் இரட்டைக் குழந்தைகளாக இருக்கலாம் என்றே மருத்துவர்கள் கருதினர். சிசேரியன் மூலம் குழந்தை வெளிக்கொணரப்பட்ட பின்னர்தான் மிக நெருக்கமாக ஒட்டிப் பிறந்த சயமீஸ் இரட்டைக் குழந்தைகள் என்று தெரியவந்தது. வெளிப்படையாக இரு தலைகள் தென்பட்ட போதிலும் இவை ஒட்டிய இரட்டைகளே.

சிசேரியன் சத்திரசிகிச்சையினை மேற்கொண்ட டாக்டர் மாயா ஸ்ரீ வஸ்தாவா குழந்தை(களு)யுடன் காணப்படுகிறார்.

(தகவல்-ஏ.எஸ்.எம். நஜீம்)



# இழுக்கணும்-இழுக்கணும் விடாது இழுக்கணும்!

தேர் இழுக்கும் காட்சியை கண்டிருக்கிறோம். இது என்ன விமானத்தையே இழுக்கிறார்களே என்று ஆச்சரியம் வருகிறதல்லவா?

டேவிட் ஹக்ஸ்லி என்பவர் 105 தொன் எடையுள்ள போயிங் 767 விமானத்தை தனி மனிதனாக 62.14 மீட்டர் (203 அடி 10 அங்) வரை இழுத்துச் சாதனை புரிந்தார்.

அவுஸ்திரேலியாவில் சிட்னி நகரிலுள்ள குவாண்டாஸ் விமானத் தளத்தில், 1994 மார்ச் 9ம் திகதி இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

அவுஸ்திரேலியாவில் பேர்த் நகர விமான நிலையத்தில் 205 தொன் எடையுள்ள போயிங் 747 விமானத்தை- குவாண்டஸ் விமான சேவை ஊழியர்கள் 59 பேர் சேர்ந்து 100 மீட்டர் தூரம்வரை 62.1 நொடிப் பொழுதில் இழுத்துள்ளனர். இது நடைபெற்றது 1988 ஒக்டோபர் 22ல்.

குவாண்டாஸ் ஊழியர்கள் (1988ல்) விமானத்தை இழுப்பதையும் பணிமுடிந்து இளைப்பாறுவதையும் படங்கள் காட்டுகின்றன.



## "நெருங்குவது எளிது"

"எல்லா ஆண்களும் என்னை அப்படியே அமுக்கப்பார்த்தனர். நான் விடவில்லை. அன்று என்னைக் கண்ணடித்துக் கூப்பிட்டவர்கள் இன்று சகல மரியாதைகளுடன் பணிவாக நடந்து கொள்கின்றனர்." இவ்வாறு கூறியிருக்கிறார் பூஜாபட். ஆனால் ஆண்கள்மீது பூஜாபட் வெறுப்பாக பேசுகிறார் என்று நினைத்துவிடாதீர்கள். அவர் மேலும் சொல்வதைக் கேளுங்கள்; "ஆண்களை நாம் எப்படிக் கையாளுகிறோம் என்பதை பொறுத்தே எல்லாம் இருக்கிறது. ஆண்களுடன் எளிதாக நெருங்கிப் பழகிவிடலாம். ஆனால் அளவுக்கு அதிகமாக இடம் கொடுத்து விடக் கூடாது. கட்டுப்பாடுகள் எனக்குப் பிடிக்காது. நான் ஒரு சுதந்திரப் பறவை." என்கிறார் பூஜாபட்.



பூஜாபட்

## ரவீனாவின் வாக்குமூலம்

இந்தியில் வெற்றிப்படிகளில் ஏறிவரும் ரவீனா ராண்டன் கூறும் வாக்குமூலம் துணிச்சலானது. அவர் சொல்வதையும் கேளுங்கள்:

"நான் என்றுமே கவர்ச்சி காட்டுவதைக் கண்டித்ததே கிடையாது. இந்த விசயத்தில் 'சென்சாரின்' கெடுபிடி அதிகமாகிவருகிறது. இவ்வளவுதான் காட்ட வேண்டும் என்று அவர்களால் திட்டமிட்டு, வரையறுத்துச் சொல்ல முடியுமா? கவர்ச்சி என்பதை சட்டத்துக்குள் அடக்கமுடியாது. சிலருக்கு கழுத்துத் தெரிந்தாலும் கவர்ச்சிதான். கழுத்துக்கு கீழே தெரிந்தால் அவர்களுக்கு சாதாரணமாகத் தோன்றும். ஆளுக்கு ஆள் கவர்ச்சியின் அளவு வேறுபடும். அவரவர் இஷ்டத்துக்கு விடுவதுதான் 'சென்சாருக்கு' அழகு." என்கிறார்.

**92**



## மாதுரிக்கு பிடித்த ஆண்?

"உங்களுக்கு பிடித்த ஆண் மகன் யார்?" என்று மாதுரி டிக்ஷித்திடம் கேட்டபோது அவர் சொன்னது: இதுவரை யார்மீதும் எனக்கு காதல் ஏற்பட்டதே கிடையாது. (சஞ்சய்தத் அறிந்தால் கோபப்படுவார்) சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள். ஆண்கள் பலர் என்னைக் கவர்ந்திருக்கிறார்கள். ஆனால் கவர்ச்சி வேறு. காதல் வேறு" என்று சொல்கிறார் மாதுரி.

## ஏன் இன்னும் காதலிக்கவில்லை?

ரசிகர்களை உணர்ச்சி பொங்க வைக்க இந்தியில் நடித்துக்கொண்டிருப்பவர் மதுபாலா.

"காதலிக்கிறீர்களா?" இந்த ஒரு வார்த்தைக் கேள்விக்கு மதுபாலா சொல்லியுள்ள பதில் இது "நான் மட்டும் ஒருவரைக் காதலித்தால் என் காதலில் அவரை மூழ்க வைத்துவிடுவேன். அவ்வளவு தீவிரம் என்னிடம் இருக்கிறது. ஆனால் என்னை நானே முட்டாளாக்கிக்கொள்ள விரும்பவில்லை. அதனால் யாரிடமும் ஈடுபாடு கொள்ள நான் விரும்பவில்லை. நான் ஒருவரைக் காதலிக்கும்போது அவர் என்னை அதேஅளவு காதலிக்காவிட்டால் என் காதல் வீணாகிப்போய்விடும் என்று பயப்படுகிறேன்." என்கிறார் மதுபாலா.

நேர்மையான காதல் உங்கள் மனவசமிருந்தால் மதுபாலாவை நீங்கள் நாடலாம்.

## மினி-சினி

- ரஜனி-மம்முட்டி இணைந்து நடித்த 'தளபதி' இந்தியில் 'தள்-பதி' என்ற பெயரில் மொழிமாற்றப் படவுள்ளது.
- கமலின் 'குணா' படத்தை முதலில் இயக்குவதாக இருந்த மலையாளப்பட இயக்குநர் சிபிமலையில், தற்போது பிரபு நடிக்கும் தமிழ்ப்படமொன்றை இயக்கவிருக்கிறார்.
- 'பம்பாய்' படம் வெளிவந்ததும் சிரஞ்சீவி நடிக்கும் தெலுங்குப் படமொன்றை இயக்கவுள்ளார் மணிரத்தினம்.
- 'அரண்மனைக்கிளி' அகானாவுக்கு தமிழில் படங்கள் இல்லையென 'திரிட்டி' மூலம் மலையாளப் படவுலகில் நுழைந்தார். அங்கும் வாய்ப்புக்கள் இல்லை. தற்போது இவர் கன்னடப் படமொன்றில் நடித்து வருகிறார்.
- இதுவரை சத்தியராஜை வைத்துப் படங்களைத் தயாரித்து வந்த சத்தியராஜின் மனேஜர் ராமநாதன் முதல்முதலாக விஜயகாந்த் நடிக்கும் படத்தைத் தயாரிக்கவுள்ளார்.
- ரமேஷ் அரவிந்த்-ரஞ்சிதா ஜோடியாக நடிக்க டி.பி.கஜேந்திரன் இயக்கும் 'பாட்டு வாத்தியார்' படத்தில் இளையராஜா இசையில் 7 பாடல்கள் உள்ளன. 7 பாடல்களையும் கே.ஜே.ஜேசுதாஸ் பாடியுள்ளார்.
- சரத்குமார் கதாநாயகனாக நடிக்கும் 'நாடோடி மன்னன்' படத்தில் தாய்-மகள் என இரட்டை வேடத்தில் நடிக்கிறார் மீனா.
- 'புதிய மன்னர்கள்' படத்தில் அறிமுகமான சீமான், தற்போது நடித்து வரும் 'சின்னத்தங்கம்' படத்தில் தனது பெயரை ஸ்ரீமன் என்று மாற்றியுள்ளார்.
- 'ஆத்தா உன் கோவிலிலே' படத்தில் அறிமுகமான ரவிராகுல் நீண்ட காலத்திற்குப் பின்னர் 'திருமகனே வருக' என்ற படத்தில் நடிக்கிறார். இதில் இவருக்கு ஜோடியாக ரூபஸ்ரீ நடிக்கிறார்.
- டி.ராஜேந்தர் இயக்கி நடிக்கும் 'தாய் தங்கை பாசம்' படத்தில் கௌரவ வேடத்தில் நடிக்கிறார் அவரது மகன் சிலம்பரசன்.
- 'கிழக்குச் சீமையிலே' 'கருத்தம்மா' போன்ற படங்களுக்கு கதை-வசனம் எழுதிய ரத்னகுமார், விரைவில் படமொன்றை இயக்கவுள்ளார்.

## முகப்பில்

பாலகிருஸ்ணா-மீனா

படம்-சின்ன பண்ணை

மாதுரி டிக்ஷித்

## சோதிடத்தில் நம்பிக்கை

'ரஞ்சிதா' நடிகைக்கு சோதிடத்தில் அதிக நம்பிக்கையாம். பார்க்கக்கூடிய ஜோதிடம் எல்லாம் பார்த்து முடித்துவிட்டார். இன்னொரு விசயம், சில பெரிய நடிகர்களது ராசி தனது ராசியோடு பொருந்துகிறதா என்றும் அறிந்துகொள்கிறாராம். பொருந்தினால் குறிப்பிட்ட நடிகரோடு சேர்ந்து நடிக்க சகல முயற்சிகளிலும் குதித்துவிடுவாராம்.

## கனகா போனார் மலையாளம்

'ஜல்லிக்கட்டுக்காளை' படத்தின் தோல்விக்குப் பிறகு தமிழ் படவுலகில் இருந்து மலையாளத்திற்கு சென்றார் கனகா. அங்கு ஜெயராமுடன் இரண்டு படமும், மோகன்லாலுடன் ஒரு படத்திலும் நடித்து வருகிறார்.

## பட்டுப்போன நம்பிக்கை

சஞ்சய் தத் கைது செய்யப்பட்டதால் இந்திப் படவுலகில் வேறு ஹீரோக்களுக்கு அவருடைய வாய்ப்பு செல்கிறது. 'திரிமூர்த்தி' படத்தில் இருந்து சஞ்சய்தத் தூக்கப்பட்டுவிட்டார். ஜாக்கி ஷெரப், அனில் கபூர், ஷாருக்கான் ஆகியோர் மும்மூர்த்திகளாக (திரி மூர்த்தி) நடிக்கின்றனர். சஞ்சய்தத் விடுதலையாவார் என்ற நம்பிக்கை பட்டுப்போய்விட்டதால்தான் இந்த நிலை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# சினி விசிட்

## 48இல் 100

ஆந்திராவில் 48 திரையரங்குகளில் நூறு நாட்களைக் கடந்து ஓடிக்கொண்டிருக்கும் படம் 'பொப்பிலி சிம்மம்'. தமிழில் சின்ன பண்ணை என்ற பெயரில் திரைக்கு வருகிறது. மீனா-ரோஜா ஆகியோர் தெலுங்கில் என்பதால் தாராளமாக நடித்தள்ளனர். (தமிழில் மட்டும் தாராளமில்லையாக்கும்) சாரதா-சரத்பாபு, மகேஷ் ஆனந்த் ஆகியோரும் நடித்துள்ளனர்.

## கவுண்டமணி ஸ்டைல்

கவுண்டமணியின் மகளுக்கு திருமணம் நடந்த செய்தியை சினிவிசிட் வாசகர்கள் அறிவீர்கள். அந்த திருமணம் பற்றி ஒரு தகவல். திருமண அழைப்பிதழை புதுமையாக வெளியிட்டிருந்தார் கவுண்டமணி. சிறிய பட்டுத்துணியில் அழைப்பிதழை அச்சிட்டு ஒரு உருண்டையான கட்டையில் சுற்றி அனுப்பினாராம். மன்னர் காலத்து மனிதர்.

## ஆயுத பூஜையில் ஆக்சன் கிங்

கே.பாக்கியராஜின் உதவியாளர் சி.சிவக்குமார் இயக்கும் புதிய படத்தின் பெயர் 'ஆயுத பூஜை' அர்ஜுன் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக ரோஜா, ஊர்வசி ஆகியோர் நடிக்கின்றனர். படத் துவக்க விழாவில் ஒரு வித்தியாசம். நடிகர்களின் குழந்தைகள் துவக்கிவைத்தார்கள். அர்ஜுன் மகன் ஐஸ்வர்யா, சத்தியராஜின் மகள் திவ்யா, பாக்யராஜின் மகள் சரண்யா ஆகியோரே படப்பிடிப்பை துவக்கிவைத்தார்கள்.

## வேகமாக வளரும் 'பசும் பொன்'

சிவாஜி-பிரபு-சிவகுமார்-ராதிகா ஆகியோர் நடிக்க ஏ.ஆர்.ரகுமான் இசையில் பாரதிராஜா இயக்கும் படம் பசும்பொன் என்பது தெரிந்த செய்தி. முதல் கட்ட படப்பிடிப்பு 15 நாட்கள் நடைபெற்றது. இரண்டாம் கட்ட படப்பிடிப்பு நடக்கிறது. இரண்டாம் கட்டப்படப்பிடிப்பில் விக்னேஷ், வடிவேலு, சரண்யா சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்பட்டன. சிவாஜிக்கு மருமகனாகவும், பேரனாகவும் பிரபு இரட்டை வேடத்தில் நடிக்கிறார். சிவாஜியின் மகளாக ராதிகா நடிக்கிறார். ராதிகா விதவையாகும்போது அவரை மணக்க முன்வருகிறார் சிவகுமார். குறுக்கே நிற்கிறார் சிவாஜி. இப்படிப் போகிறது கதை. சிவாஜியை புதிய 'கெட் அப்பில்' நடிக்க வைத்திருக்கிறார் பாரதிராஜா. கதை வசனம் ... ஒளிப்பதிவு ... [illegible]





விஜய்-சுருதி
படம்-வசந்த வாசல்

## குஷ்பு இட்லி

மதுரையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டில் வழங்கப்பட்ட இட்லிக்கு யாரோ 'குஷ்பு இட்லி' என்று பெயர் வைத்துவிட, அதனை சாப்பிட்டவர்கள் உணர்ச்சிவசப்பட்டு விட்டனராம். வேறு சிலர் சுகன்யா இட்லி, நக்மா இட்லி கேட்டு தொந்தரவு செய்தார்களாம்.

### கிசு கிசு நியூஸ்

## மீனு க்கு வலை

'மருமக' படத்தின் வெளியூர் படப்பிடிப்பில் காமுகா, 'கா' நடிகர் மீன் நடிகையை ஓரங்கட்டப் பார்த்தாராம். மீன் சிக்க மறுக்கவே 'கா' மூட் அவுட்டாகிவிட்டாராம். அதனால் படப்பிடிப்புக்கள் தாமதமாகியதாம்.

## வசையில் ஜாடை

'கறுப்பு நாகேசுக்கும்', க.மணிக்கும் இடையே பனிப்போர் நடப்பது தெரிந்த சமாச்சாரம்.

படப்பிடிப்புக்களில் வேறு யாரையோ திட்டுவது போல கறுப்பு நாகேசுவை ஜாடையாக திட்டுகிறாராம் க.மணி.

## து பாயில் கறந்தது

'கக' என்று தொடங்கும் பெயருடைய நடிகை துபாய் சென்று கலைக்கு மகா சேவை செய்துவிட்டு திரும்பியிருக்கிறார்.

சேவையில் மயங்கிய துபாய்காரர் ஒருவர் அவரது பையை நிரப்பி அனுப்பி வைத்துள்ளாராம். "துபாயில் இருப்பவர்களுக்கு என் அருமை தெரிகிறது. இங்குள்ளவர்களுக்கு மட்டும் தெரியவில்லையே" என்று புலம்புகிறார் 'கக' நடிகை. அவர் கைவசம் தமிழ் படங்கள் பற்றாக்குறையாக இருப்பதே புலம்பலுக்கு காரணம்.

## தொழில் அதிபர் மனைவி

தொழில் அதிபர்களை திருமணம் செய்த நடிகைகளது பட்டியலில் ஒய்.விஜயாவும் சேர்ந்திருக்கிறார். அவரது கணவர் அமைதாதன் தொழிலதிபர். இவர்களுக்கு ஒரு குழந்தையும் இருக்கிறது.

## ...டியில் தவழ்ந்த மனிஷா

...படத்தின் நாயகி மனிஷா கொய்ராலா பற்றி பம்பாயில் உள்ள பத்திரிகையில் வந்த கிசு-கிசு இது.

...கேப் வேக் என்னுமிடத்தில் ஜாலியான விருந்துகள் ஆடம்பரமாக நடப்பது வழக்கம். சினிமா நடிகைகள், தொழில் அதிபர்கள், நடிகர்கள் போன்ற பெரும் புள்ளிகளுக்கே அனுமதி.

...நிகழ்ச்சியில் மனிஷா ஒரு நடிகரது மடியில் அமர்ந்திருந்து மது அருந்தினாராம். அந்த நடிகரின் பெயர் கமல் சாதனா. விருந்தும் மது ...இருவரும் ஒன்றாய் புறப்பட்டு போனதும் பெண் நிருபர் ...ரிப்போர்ட்டில் விட்டதுதான் செய்தி கசியக் காரணமாகிவிட்டது.

## நிபந்தனை கிடையாது

பிரபு தேவா ஒரு படத்தில் நடிக்க வாங்கும் ஊதியம் இந்திய பெறுமதிப்படி 45 இலட்சம். ஊதிய விடயத்தில் மட்டும் கண்டிப்பாக இருப்பாரே தவிர வேறு எந்த நிபந்தனையும் போடமாட்டாராம் பிரபுதேவா.

## 'பம்பாய்' பட்ட கஷ்டம்

மணிரத்னத்தின் 'பம்பாய்' படத்திற்கு இந்தியில்தான் அசத்தலான விளம்பரங்கள் செய்திருந்தார்கள். தமிழில் சற்றுக் குறைவுதான். மணிரத்னம் படம் என்றால் சென்சாரில் உடனடியாக அனுமதி கிடைத்துவிடும் என்றுதான் நம்பப்பட்டது. ஆனால் பிரச்சனையே சென்சாரில்தான் ஏற்பட்டது. இந்து-முஸ்லிம் கலவரத்தை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட படத்தானே அனுமதிதர ... என்று மணி... இந்து-... கலவரத்தை ... தூண்டி விடுவதுபோல் படம் இருக்கிறது என்று சென்சார் ... பதில் தந்ததாம். அதிர்ந்துபோன மணிரத்னம் ... சென்றுவிட்டாராம்.



ரோஜா
படம்-சின்னத் தங்கம்

## நக்மா பேசும் தமிழ்

பிறமொழி நடிகைகள் தமிழ் பேசி ...வதைத்துக்கொண்டிருக்கிறார்கள். ...பட்டியலில் நக்மாவும் இருக்கிறார். ...ஒன்றில் நடந்த சுவையான சம்பவம் ஒன்று.

...தயாரிப்பாளர் வருவதைக் கண்ட நக்மா அருகில் இருந்தவரிடம், "அதோ பார் ... வாறான்" என்று சொன்னார். அந்த ... ஒரு காகம் வந்து எதிரே உள்ள ... கரைய, அதைப் பார்த்த நக்மா, ... கா. கூ.. கூ என்று விரட்டினார். ...தலையில் அடித்துக்கொண்டாராம்.



மனிஷா கொய்ராலா
படம்-பம்பாய்

## நெப்போலியன் படங்கள் தடுமாற்றம்

நெப்போலியனின் மார்க்கெட் 'சீவலப்பேரி பாண்டி' படத்தின் பின் திடுதிடுவென்று உயர்ந்தது. தயாரிப்பாளர்கள் அவரை துரத்தித் திரிந்தார்கள். இப்போது நெப்போலியன் மார்க்கெட் டல்லாகியிருக்கிறது. அவரை ஒப்பந்தம் செய்த தயாரிப்பாளர்கள் தொடர்ந்து படத்தை எடுக்க யோசிக்கிறார்கள். ஒரு படம் நன்றாக ஓடினால் துரத்துவார்கள். தோல்வி கண்டால் திரும்பியும் பார்க்க மாட்டார்கள்.

## தேவை கதாநாயகிகள்

தமிழ்ப் படவுலகை கதாநாயகிப் பஞ்சம் வாட்டுகிறது. தமிழில் பெரிய ஹீரோக்கள் வரிசையில் ஆறு பேர் இருக்கின்றனர். கதாநாயகிகள் என்று பார்த்தால் ரோஜாவும், மீனாவும்தான் இப்போது மார்க்கெட்டில் உள்ளனர். இதனால்தான் 'பம்பாய்' இறக்குமதிகளை நம்பவேண்டியிருக்கிறது. அவர்கள் ஒத்துழைத்தாலும் நடிப்பு விடயத்தில் தேறுகிறார்கள் இல்லை. அதுதான் பம்பாய் இறக்குமதிகளில் உள்ள குறை என்கிறார் ஒரு தயாரிப்பாளர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அழகின் இரகசியம் உங்கள் கையில்!

## பிடித்தமானதை எடுத்து பயன்படுத்துங்கள்



பித்தக் கோளாறு காரணமாகத் தலை நரைத்திருந்தால் கறிவேப்பிலையைத் தேங்காய் எண்ணெயில் இட்டு லேசாக எண்ணெயைச் சூடாக்கி தொடர்ந்து தலையில் தடவி வந்தால் நரை அகலும். உணவில் ஏதாவது ஒரு உருவில் கறிவேப்பிலையை நாள்தோறும் சேர்த்துக் கொள்வது நல்லது.

கூந்தல் கொட்டுகிறதா? சிறிதளவு வெந்தயத்தை தண்ணீர் விட்டு அரைத்துத் தலையில் தேய்த்து வைத்திருந்து, அரைமணிநேரம் கழித்துக் குளித்து கழுவிவிட வேண்டும். இவ்வாறு தொடர்ந்து சில நாட்கள் செய்து வந்தால் கூந்தல் கொட்டுவது நின்றுவிடும்.

கோழிமுட்டையின் வெள்ளைக் கருவை எடுத்து அதனுடன் பாதாம் பருப்பைச் சேர்த்து, அரைத்து, சிறிது எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகத்தில் தடவி கால்மணி நேரம் கழித்து சவர்க்காரம் போட்டு முகத்தைக் கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் சுருக்கங்கள் அகன்று முகத்தில் இளமைச்சாயல் படியும்.

ஐஸ் கட்டியைத் தூள் செய்து ஒரு மெல்லிய துணியிலிட்டு முகத்தில் ஒத்தடம் கொடுப்பது போல் தேய்த்து வந்தால், முகம் நல்ல நிறம் பெறும். கோடை வெய்யில் காரணமாக முகச் சருமத்தில் தோன்றும் வரட்சி அகலும். மஞ்சளை பன்னீர்விட்டு அரைத்துப் பூசிக் குளித்து வந்தால் வேண்டாத இடங்களில் உள்ள ரோமங்கள் அகன்று அந்த இடங்களில் சருமம் மென்மையாக ஆகும்.

அதிகமான தேன் சாப்பிட்டால் உடல் பருமன் குறையும் என்ற விஷயம் பலருக்குத் தெரிந்திருக்கும். ஆனால் தேனை எப்பிடிச் சாப்பிட வேண்டும் என்பது பலருக்குத் தெரியாது. உடல் பருமன் குறைய வேண்டுமானால், தேனைக் காய்ச்சி ஆறவைத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு அவுன்ஸ் குளிர்ந்த நீரில் ஒரு தேக்கரண்டி தேன் கலந்து காலையிலும், இரவிலும் சாப்பிட்டு வர வேண்டும்.

செயற்கையாகக் கூந்தலைச் சுருக்கிக் கொள்வது அழகு என்று சில பெண்கள் நினைக்கிறார்கள். அவ்வாறு செய்வது கூந்தலின் செழுமையைப் பாதிக்கும். செயற்கையாகக் கூந்தலைச் சுருக்கிக் கொள்ளும்போது கூந்தல் மின்சக்தியினால் சூடேற்றப்படுகிறது. அவ்வாறு சூடேற்றப் படும்போது, மயிர்க்கால்கள் பலவீனப்பட்டு முடி உதிர்தல், வழுக்கை விழுதல் போன்ற குறைபாடுகள் தோன்றக்கூடும்.

உடல்பளபளப்பாகவும் நல்ல நிறமாகவும் இருக்க தேங்காய் எண்ணெயுடன் சிறிது மஞ்சள்தூள் கலந்து, உடல் முழுதும் தடவி, சிறிது நேரம் வைத்திருந்து பயிற்றம் பருப்பு மாவைத் தேய்த்துக் குளித்து வந்தால் உடல் நல்ல நிறமாகவும், பளபளப்புடனும் இருக்கும்.

முகப்பவுடர் உபயோகிப்பதற்கு முன்னால் முகத்தை நன்கு சுத்தம் செய்து சிறிதளவு பன்னீர் தடவித் துடைத்து விட்டுப் பிறகு முகப்பவுடர் பூசினால், முகம் மிகவும் கவர்ச்சிகரமாகத் தோற்றமளிக்கும்.



குளிக்கும்போது மஞ்சளைத் தேய்த்துக் குளித்தால் நாளடைவில் உடல் கவர்ச்சிகரமாக, பொன்னிறமாக மாறும். முகத்தில் மஞ்சள் தடவிக் கழுவி விட்டு, அதன்மீது பவுடர் போட்டால் பவுடர் நீண்ட நேரம் கலையாமல் அப்பொழுது தான் போட்டதுபோல் தோற்றமளிக்கும். பவுடர் பூச்சிலும் புதுக்கவர்ச்சி தென்படும்.

கரட்டை நறுக்கி அதன் ஒரு பகுதியால் கண்களின் புருவங்களில் தேய்த்து வந்தால், கண்புருவம் அடர்த்தியாகவும், ஒழுங்காகவும், கருமையாகவும் அமையும்.

சில பெண்களுக்கு கூந்தல் சிலுப்பிக் கொண்டு நிற்கும். எவ்வளவு முயற்சி எடுத்துப் படியச் சீவிவிட்டாலும் முடி எழுந்து நின்றுகொள்ளும். ஒன்று விட்டு ஒருநாள் எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு, தலைமுடி காய்ந்த பிறகு பிரஷ்ஷைக் கொண்டு கூந்தலை அழுத்தித் தேய்த்து வந்தால் நாளடைவில் முடி மென்மையடைந்து படியத் தொடங்கி விடும். இவ்வாறு செய்வதன் மூலம் முடியும் நன்கு கருமையடைந்து விடும்.



வெளியில் சென்று அலுவல் புரியும் பெண்களின் உடல் சருமம் வெய்யில், மழை போன்றவற்றால் பாதிக்கப்படக் கூடும். இவர்கள் இரவில் கிறீமையும், பகலில் வனீஷிங் கிறீமையும் தடவிக் கொண்டால் சீதோஷ்ணநிலை காரணமாக சரும எழில் கெடாது.

---

சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### மீன் மசாலா வடை

**தேவையான பொருட்கள்:**

மீன் (முள் அதிகம் இல்லாதது) 3/4 கிலோ
கடலை மாவு -1/2 கிலோ
பெரிய வெங்காயம் -2
பச்சை மிளகாய் -5 மிளகாய்த்தூள்-1 தேக்கரண்டி
எண்ணெய் -1/2 லீற்றர்
உப்பு, கறிவேப்பிலை -அளவாக.

**செய்முறை:**

மீனை நன்றாக வேகவைத்து, அதன் முட்களை நீக்கிவிட வேண்டும். பச்சைமிளகாயை வட்டமாக நறுக்கிக்கொள்ளவும். கறிவேப்பிலையையும் சிறிது சிறிதாக நறுக்கிக்கொள்ளவும். வெங்காயத்தை நேராக நறுக்கிக்கொள்ளவும். பிறகு கடலைமாவு, உப்பு, தண்ணீர், வெங்காயம், மிளகாய், மிளகாய்த்தூள், கறிவேப்பிலை ஆகியவற்றை ஒன்றாகக் கலக்கவும். கடலைமாவில் அதிகம் தண்ணீர் விடக்கூடாது. பிறகு மீனையும் அதில் சேர்க்கவும்.

பின்னர் வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி, சூடான பின்னர் அதில் ஒவ்வொரு அகப்பை வீதம் கலவையை விடவும். அவை நன்றாக வெந்ததும், அதை எடுத்து சூட்டோடு சாப்பிடவும் மிகவும் ருசியாக இருக்கும்.

---

## பக்கத்து வீட்டுக்கு உணவு பரிமாறுதல்

### இல்லத்தரசிகளுக்கு இனிய யோசனை

விடுமுறை நாட்களில் வீட்டில் ஸ்பெஷலாக உணவு தயாரித்து இருக்கிறீர்கள். உங்கள் பக்கத்து வீட்டிலும் கொடுத்து பகிர்ந்து கொள்ள நினைக்கிறீர்கள். நல்லதுதான். ஆனால் இங்கு நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன. உணவு பறிமாறியே வளர்ந்த நட்பும் இருக்கிறது. உணவு பறிமாறியே முறிந்த நட்பும் இருக்கிறது. உங்கள் இனிய நட்பு பரிமாறிய உணவு வகைகள் மூலமாக முறிந்துவிடாமல் இருக்க சிலவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும்.

01. உணவு கொடுத்து அனுப்பும் பாத்திரம் நன்றாக மூடப்பட்டு அனுப்பப்பட வேண்டும். அடுத்த வீடுதானே எனத் திறந்தபடியே கொடுப்பது நல்லதல்ல.
02. அடுத்த வீடுதான் என்றாலும் உணவு வகைகள் வாசல் வழியே தரப்பட வேண்டும். குறுக்குச் சுவர் உயரம் குறைவாக இருந்தால் கூட அதன் வழியே கொடுத்துவிடுவது மரியாதை அல்ல.
03. பிறந்த நாள் மற்றும் விசேஷ தினங்களில் உணவுகள் பரிமாறிக் கொள்ளும்போது அழகான ட்ரேயைப் பயன்படுத்துவது நல்லது. அழகான வேலைப்பாடுகளுடன் கூடிய நாப்கினை மேலே விரித்துக் கொடுக்கலாம்.பார்ப்பதற்கு அழகான தோற்றத்தைக் கொடுக்கும். மரியாதையும் கூட.
04. சமைத்ததும் சூடாக கொடுத்தனுப்ப வேண்டும். வீட்டில் நீங்கள் அனைவரும் சாப்பிட்ட பிறகு, மேலும் நேரம் கடந்த பிறகு மீதத்தை அனுப்பக் கூடாது. அனுப்புவதற்கு முன் சுவையாக இருக்கிறதா என்று பார்த்து அனுப்ப வேண்டும்.
05. உங்களால் நேரில் அவர்கள் வீட்டில் உணவைக் கொடுக்க முடியாத பட்சத்தில் உங்கள் குழந்தைகள் மூலமாகக் கொடுக்கலாம். வேலைக்காரி மூலமாக அனுப்ப நேர்ந்தால் அவள் பார்க்க சுத்தமாக இருக்கிறாளா? என கவனித்து பிறகு அனுப்புங்கள்.

இனி மற்றவர்கள் உங்கள் வீட்டிற்கு உணவு அனுப்பும் போது நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்கள் குறித்து பார்ப்போம்.

01. அவர்களது பாத்திரத்தை உடனே சுத்தம் செய்து அனுப்புவது நல்லது. அனுப்பும் போது பெறும் பாத்திரமாக அனுப்பாமல் பழங்கள் அல்லது ஏதாவது உணவுப் பொருள் போட்டு அனுப்பலாம்.
02. திரும்ப பாத்திரத்தை தரும் போது உணவு நன்றாக இருந்தது என்று ஒரு வார்த்தை சொல்லி நன்றி கூறுவது நல்லது. 'கொஞ்சம் உப்பு தூக்கல்' 'ஒரே எண்ணெய்' என்று ஒரு போதும் விமர்சனம் செய்யாதீர்கள்.
03. மற்றவரது பாத்திரத்தை உடனே திருப்பித் தராமல் உங்கள் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்துவது தவறு. அவர்கள் திரும்ப கேட்க வரும் அளவிற்கு வைத்துக் கொள்ளாதீர்கள்.
04. மற்றவரது பாத்திரத்தை உணவுப் பொருள் போட்டு,உங்கள் சொந்த பாத்திரம்போல வேறு வீட்டிற்கு அனுப்பாதீர்கள்.அவர்கள் கேட்கும் போது, 'சொறி... மாடி வீட்டிற்கு அனுப்பி விட்டேன். நாளைக்குத் தருகிறேன்' என்று அசடு வழிந்து உங்கள் மதிப்பை இழக்காதீர்கள்.
05. பாத்திரத்தை திரும்ப கொடுக்கும்போது நீங்களே சென்று திருப்பிக்கொடுங்கள். அவர்கள் வீட்டுக் குழந்தைகளைக் கூப்பிட்டு கொடுத்து அனுப்புவது முறையல்ல. தவிர அவர்கள் அடுத்த முறை உங்கள் வீட்டிற்கு வரும்போது 'இந்தாங்க உங்க பாத்திரம்' என்று அவர்கள் கையிலேயே கொடுப்பது தவறு.

---

பரிசுக் கூப்பன்
மகளிர் மட்டும்
இல 3

**மகளிர் மட்டும்**

**—பரிசுப் போட்டி—**

**முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை**

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

**பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.**

---

# லேடீஸ் ஸ்பெசல்

## விரல் சூப்புகிறதா உங்கள் குழந்தை? தடுக்க முன்னர் இதைப் படியுங்கள்!



குழந்தைகளின் கைகள் இரண்டும் எப்போதும் தங்கள் வாயை நோக்கியே செல்கின்றன. பிறந்த இரு மாதங்களிலேயே முதன்முதலில் கற்றுக் கொள்ளும் பழக்கம் இதுவாகும். தங்கள் கைகளில் கிடைக்கும் எந்தப் பொருளையும் தங்கள் வாயில் திணிக்க முயல்வதே குழந்தைகளின் இயல்பான வழக்கமாகும். குழந்தைகளின் பிரதான பொழுது போக்கு இதுவாகும்.

பிறந்த உடனேயே தன்வாய் மூலம் தனது ஆகாரமான தாய்ப் பாலை வாய்மூலம் பருக குழந்தை தொடங்கிவிடுகிறது. இதனால் குழந்தையின் முதற்செயலே வாயுடன் தொடர்புடையதாகிறது. இதனால் கையினால் பற்றும் எதனையும் வாய்க்கே குழந்தை கொண்டு செல்கிறது.

தாயின் முலைப்பாலை உறிஞ்சிக் குடிக்க ஆரம்பத்திலேயே கற்றுக்கொள்ளும் குழந்தையின் அன்றாடப்பணி வாயுடனும் கையுடனும் தொடர்புடையதாக ஆரம்பத்திலிருந்தே அமைந்துவிடுகிறது.

கையில் எப்பொருளும் கிட்டாவிட்டால் தனது கையையே எப்பொழுதும் வாயருகே குழந்தை கொண்டு செல்கிறது. இதனைக் கண்ணுறும் தாய்மார் இச்செயலைத் தடுக்க முற்படுகின்றனர். இது தவறாகும்.

வாயிலுள்ள சுரபிகள் உமிழ் நீரைச் சுரப்பதற்கு குழந்தையின் இத்தகைய செயலே காரணமாக அமைகிறது. குடிக்கும் பால் செமிபாடடைவதற்கு இந்த உமிழ் நீர்ச் சுரப்பிகளின் செயற்பாடு மிகவும் பிரதானமானது.

குழந்தையின் வாயிலிருந்து உமிழ்நீர் சுரந்து ஒழுகுவது இயல்பாக நடைபெறும் ஒரு செயற்பாடு. இதனைத் தூண்டுவதற்காகவே குழந்தையின் கை அடிக்கடி வாயருகே செல்கிறது.

குழந்தையின் வாயிலிருந்து நீர் வடிவதைப் பார்க்கும் தாய்மார், ஏதோ தவறான பழக்கத்தை குழந்தை செய்கிறது; இதனைத் தொடர விட்டால் அது ஒரு கெட்ட பழக்கமாகத் தொடரக் கூடும் என்று தடுக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். இதனைத் தடுப்பதால் வேறுபல பிரச்சனைகள் தோன்றக்கூடும்.

நாட்கள் செல்லச் செல்ல குழந்தைகள் தங்கள் பெருவிரலை மட்டும் சூப்பத் தொடங்குகின்றன. இதனையும் ஆரம்பத்திலேயே தடுத்துவிட சில தாய்மார் முயற்சிப்பதுண்டு.

சில பிள்ளைகள் தங்கள் 4 வயதைக் கடந்த பின்னரும் விரல் சூப்பும் பழக்கத்தை விட மாட்டார்கள். இக்காலங்களில் எத்தகைய பாதிப்புமில்லாமல் குழந்தைகளை இப்பழக்கத்தைக் கைவிடத் தூண்ட வேண்டும். பலாத்காரமான முறைகளைக் கையாண்டாலோ குழந்தையின் உளநலம் பாதிப்படையக்கூடும்.

விரல் சூப்புவது குழந்தைகளுக்கு ஒரு பொழுது போக்கு. இதனால் அவர்கள் ஒரு வகை இன்படைகின்றனர் என்றே சொல்லலாம்.

உண்ணும் உணவு சீரணமாவதற்கும் இது உதவுகிறது என்றே மருத்துவத்தறை ஆய்வாளர்கள் சிலர் கூறுகின்றனர்.

பற்கள் விழுந்து புதிய பற்கள் முளைக்கும் காலத்திற்கு முன்னர் அதாவது 5 வயதையடையும்போதே குழந்தைகள் விரல் சூப்புவதை தாமாகவே விட்டுவிடுவார்கள். இருப்பினும் சில குழந்தைகள் தொடர்வதுமுண்டு.

இக்காலத்தின் பின்னரும் விரல் சூப்புவதனால் அவர்களுக்குப் புதிதாக முளைக்கும் பற்கள் ஒழுங்கற்றதாக அமைந்துவிட நேரிடும்.

பொதுவாக இரண்டு வயதக்கு மேலும் குழந்தைகள் விரல் சூப்புவதைத் தவிர்க்க விரும்பினால், கடைகளில் நல்ல ரக செயற்கை சூப்பிகளை வாங்கிக் கொடுக்கலாம்.

இத்தகைய செயற்கைச் சாதனங்களைப் பெரும்பாலான குழந்தைகள் மிக விரைவில் கைவிட்டு விடுவார்கள்.

விரல் சூப்பும் குழந்தைகளை கட்டுப் படுத்தும் நோக்குடன் சில பெற்றோர் தவறுதலான முறைகளை அனுசரிப்பதுண்டு.

நான்கு வயதாகி விட்ட பின்னரும் விரல் சூப்ப முயலும் குழந்தையை புத்தி மதிகளைச் சொல்லித்தான் மறக்க வைக்க முடியுமே தவிர தண்டனை மூலம் தடுக்க முயலலாகாது.

அவ்வாறு முனையும்போது அக் குழந்தையின் இயல்பான சுதந்திரத்தை பலாத்காரமாகத் தட்டிப் பறித்து, அவர்களை மன நோயாளிகளாக்கிவிட்ட குற்றவாளிகளாகி விடுவோம்.

குழந்தைகள் விரல் சூப்புவது பல பெற்றோருக்கு கெட்டபழக்கத்தின் அறிகுறி என்று தோன்றலாம். ஆனால் அது பாதிப்பளிக்கும் காரியமல்ல என்பதை உணர வேண்டும்.

ராஜி அக்கா

---


## நடுவரை மயக்கிய அழகி

ஹொலிவூட் திரையுலகில் ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்தவர் சோபியா லொரென்.

14 வயதில் 'மிஸ் ரோம்' என்ற பட்டத்தை தட்டிக்கொண்டார் சோபியா. பின்னர் உலக அழகுராணிப் போட்டியிலும் பங்கெடுத்தார். அதில் ஒரு சுவையான சமாச்சாரம். உலகராணிப் பட்டம் கொடுத்த போட்டிக்கான நடுவர்களில் ஒருவரே சோபியாவின் அழகில் மயங்கிவிட்டார். போட்டி முடிந்ததும் இருவரும் காதலர்களாகிவிட்டனர். அந்த நடுவரின் பெயர் கார்லோ பென்ரி. உலக அழகியை மணந்த கார்லோ காரியத்தில் கெட்டிக்காரர். சோபியாவை வைத்து ஹோலிவூட் படங்களை தயாரித்து வசூல் குவித்தார்.



# நோ கொமன்ற்ஸ்






## பதிலுக்குப் பதில்

அன்பே
உன் கண்கள்
என் கண்களை
கொத்திக் கொண்டது!

உன் குரல்
என் செவிகளை
பதுக்கிக் கொண்டது!
உன் நினைவு என் உள்ளத்தைப்
பறித்துக் கொண்டது!

பதிலுக்கு—
உன் கண்கள்
உன் செவிகள்
உன் உள்ளம்
எனக்கு வேண்டும்
தருவாயா?

ரஞ்சனி.



## சமாதானம்!

நம்
தேசத்து
மக்களின்
தேசியப்பசி!

யுத்த
யுகத்தின்
நிர்வாண சோகத்தின்
நிர்மூலம்!

பூச்சிய
சிறகடிப்பில்
மூச்சிறைக்கும்
வெண்புறாக்களின்
சிறைவாச விடுதலை!

வெள்ளக்
கண்ணீரில்
வெளிறிக்கிடக்கும்
பூமியின்
புதிய எதிர்பார்ப்பு
இது!

விடியல் மீது
விழிவைத்து
விழித்து நிற்கும்
விலாசம் தொலைந்தவர்களின்
புதிய
விலாசங்கள்!

பாணகமுவ எஸ்.முஸ்தாக்
குருநாகல்.

## 'இனிய சம்சாரமே!'

கனவில் நிதம் வந்து
கவிதை பல தந்து
சிரிக்கும் வனமுல்லையே!
உனது நினைவின்றி
உலகில் உயிர்வாழும்
மனது எனக்கில்லையே!
உயிருள் உயிராகக்
கலந்து உறவாடும்
இனிய சம்சாரமே!
இதயம் ஒன்றானோம்!
நினைவும் ஒன்றானோம்!
பிரிய வழியில்லையே!
உயிரே! நீ இன்றி
உலகில் எனக்கென்றும்
இனிய வாழ்வில்லையே!
குயிலே! நீ பேசும்
கவிதை போல் வேறு
உலகில் மொழியில்லையே!
எனது உயிர்மூச்சு
உனது நினைவாச்சு
நிலவின் தங்கச்சியே!
நமது வாழ்க்கைக்கு
இறைவன் துணையுண்டு!
கவலை நமக்கில்லையே!

கிண்ணியா அமீரலி.



## மென்மலர் தோற்கும் மேனி!

முழுநில வொத்த நல்ல
முகத்தினள்! ஆசையோடு,
தழுவிட ஏற்ற கன்னித்-
தனத்தினள்! காதல்தூவி
இழுத்திடும் பருவம் பெற்ற
இனியவள்! மதர்த்து நன்கு
கொழுத்த செந் தொடைகள் கொண்ட
குமரியாள்! அழகுச்சிட்டு!

மாதுளை முத்தைப் போலும்
மணிஎயி றதனைப் பெற்ற
மாதவள்! மணக்கும் ரோஜா-
மலரவள்! மதுவின் ஊற்று!
தீதிலாச் சுகங்கள் நல்கும்
திருமகள்! காலம் தோறும்
காதலாய் கவிஞன் போற்றும்
காரிகை! கன்னி மொட்டு!

நாணிடும் அன்னம்! மங்கை
நடையெழில் கண்டு; நீர்வாழ்-
மீனினம் தோற்கும்! அந்த
மேனகை விழிகள் முன்னால்!
தேனினை வெல்லும் அந்தத்
தேவதை இனிமைப் பேச்சு!
மேனியின் வனப்பைக் கூறின்
மென்மலர் சுடாகாதே!

அ.கௌரிதாசன்
ஆலங்கேணி கிழக்கு.

## 'துப்பாக்கி வேட்டு'

அப்பாவி
மனிதரின்
உயிரைக்
கவரவரும்
எஜமானின்
சிரிப்பொலி;

## 'மழைத்துளி'

"புவியில்
படிந்த,
இரத்தக்
கறையை(க்)கழுவ
ஆகாயப்
பெண்விடும்
கண்ணீர்"

## 'சமுத்திரம்'

பகுப்பாய்வுகளுக்கு
உட்படாத
மாயப்
பெண்"

கே.எஸ்.நந்தாவரன்
திருக்கோவில்.

## இன்றைய நிலவரம்

உன்
விழிச் செய்திகளுக்காய்
நான்
விழித்திருந்த
ராவுகள்...
உன் பனி(ப்) பார்வைகளுக்காய்
நான்
பற்றி எரிந்த
பரிதாபங்கள்.....
எல்லாம்
பிரபஞ்ச காலங்களோடு
பிரிவுத்துயருடன்
என்
இதயத்திற்குப் பின்னால்
தனியாய்
தூங்குகிறது......!

•

நீ
போய் விட்ட பிறகு
பிரிவுகளுக்குப் பக்கத்தில்
பிய்ந்து கிடக்கிறேன்...
ஓ...
அவையும்
அந்த பிரியங்களும்
பிடிவாதமாக
இன்னும் இன்னும்
என்னுடன்...!

•

வானம்
வடிந்து போனது போல்
கண்ணில்
சோகம் தெரிகிறது...
வாழ்க்கையை
துடைத்து விட்டது போல்
என்னில்
வெறுமை தெரிகிறது....!
என் இன்றைய நிலவரம்
இதுதான்.

அ.சுதாசேகர்-பொத்துவில்-03.

## "பூட்டாத அலைகள்"

நீர் தெறிக்கும் இந்த
கடற்கரை மணலில் நான்...
உடம்பில் உப்புக்கசிந்து மண் அப்பி...
விழுந்து கிடந்து சிந்திக்கிறேன்.....

•

ஒரு அலை எழுந்து முறிந்து சிதறிப்போக.....
பின்னொரு அலை வேகமாக எழுந்து....
முதலில் வந்ததை துரத்தி...
தொடமுடியாமல் அதுவும் சிதைந்து போனது.

•

நான் இனி
எதை சிந்திப்பது... எது பொய்.... எது உண்மை
மரணமா? வாழ்க்கையா?
எனக்குள் ஒரே குழப்பம்...

•

மரணத்தின் அடையாளம்
ஒவ்வொரு பொருளிலும்
இருக்குமா.....?

•

மரணித்து மீண்டும் வந்து
யாரால்தான் அதை கூறமுடியும்...?

•

முடிவு தெளிவில்லாத இந்த வாழ்க்கையில்
ஒருதுளி கூடப்பிரியமில்லை; அனால்-
மரண பயமும் எனக்கில்லை....

•

மரணமில்லாமல் நான் மரணிப்பதெப்படி...?

•

இந்தயுகத்தில் வாழும் எந்த ஜீவராசிகளும்
மறுக்கமுடியாது மரணமும் வாழ்க்கையும் போலியென்று...!

•

புணரமுடியாத இந்த அலைகளைப்போல
மனிதனின் மரணமும் வாழ்க்கையும்
ஒன்றை ஒன்று சந்திப்பதில்லை....!

•

பொத்துவில் ஏ.மஜீத்.

## மன்னிப்பதற்கில்லை

சோகத்தின் விளிம்புகளில்
நின்றிருந்தேன்–இமை
வழுக்கி விழுந்த
கண்ணீர்த் துளிகளில்
பிம்பமாய் அவன்
முகமும் எஞ்சியதான சில
நினைவுகளும்.......

இதயத்தை மிதித்துப் போனவன்
மீண்டும் வருகையில்
நான் வார்த்தைகளைப் போலவே
அவனுக்கான என்
நேசத்தையும் தொலைத்திருந்தேன்.

அது என் குற்றமல்ல;
உள்ளத்தை உடைத்துப்போனவனே!
நீ வந்துபோன
மாலையில் வானம்தான்

அழுதது–நான் வெறுமனே
மௌனமாய்...நீ வாசலில்
பதித்துப்போன
காலடிச் சுவடுகளைப் பார்த்திருந்தேன்.

தீக்குளிக்கச் சொல்லவில்லை
என் ராமன்;
அவனே தீயாய் என் மனசைச்
சுட்டுவிட்டான்–இனி
நான் மன்னிப்பதற்கில்லை அவனை
மறப்பதைத் தவிர.

ஷர்மிளா இஸ்மாயில்–கண்டி.



## கற்றதில் கவர்ந்தது

"என்னால் இயலுமென எண்ணுவேனாயின்
அது தன்னம்பிக்கை!
என்னால் மட்டுமே இயலுமென எண்ணுதல்
தலைக்கனம்."

கவிஞர் வாலி.

## இந்த வாரம் உங்கள் பலன்

(05.03.95 முதல் 11.03.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: — சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் நட்டம், கடன் சுமை. | பகல் 12 மணி |
| திங்கள்- மனக்கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்- உயர்ந்த நட்பு, கௌரவம். | காலை 8 மணி |
| வியாழன்- அந்நியர் நட்பு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், குடும்ப சுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன்படல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு-தொழில்நிலைக் கஷ்டம், பணச் செலவு. | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, கடன்படல். | காலை 7 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மறைமுக எதிர்ப்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, முன்னேற்றம். | காலை 8 மணி |
| சனி- துன்பம் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### இடபம்: — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. 1 மணி |
| புதன்- துயர் அதிகம், இடமாற்றம். | காலை 6 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி-முன்னேற்றம், முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| சனி- துன்பம் நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்: — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முன்னேற்றம். | காலை 7 மணி |
| திங்கள்- தொழில் மாற்றம், கடன் படல். | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 9 மணி |
| புதன்- பண நெருக்கடி, கௌரவக் குறைவு. | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் மந்தம், காரியத்தடை. | காலை 7 மணி |
| வெள்ளி- வீண் குறைகேட்டல், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| சனி- துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- காரிய சித்தி, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| செவ்வாய்- இடமாற்றம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| புதன்- நண்பர்களால் தொல்லை, பொருள் இழப்பு. | காலை 6 மணி |
| வியாழன்- முயற்சி பலிதம், அதிகார விருத்தி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், மனக்கவலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கும்பம் | - சூரியன், புதன், சனி |
| மேடம் | - கேது |
| கர்க்கடகம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| மகரம் | - வெள்ளி |

சந்திரன்-மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, கௌரவம். | பி.ப. 3 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மனக்கலக்கம். | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், மன அமைதி குன்றும். | காலை 8 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| சனி- நண்பர்கள் உதவி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### மகரம்: — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, கடன்சுமை. | பகல் 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, மனப் பயம். | காலை 7 மணி |
| செவ்வாய்- துன்பம் நீங்கும், புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| புதன்- பெரியோர் அனுகூலம், கௌரவம். | காலை 8 மணி |
| வியாழன்- பயனற்ற செயல், முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வெள்ளி- துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -7

### சிம்மம்: — சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- காரியத்தடை, மனக்கலக்கம். | காலை 7 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செல்வாக்கு. | காலை 6 மணி |
| புதன்- பதவி மாற்றம், காரியசித்தி. | காலை 7 மணி |
| வியாழன்- உறவினரால் கஷ்டம், மனப் பயம். | பகல் 12 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், தொழில் விருத்தி. | காலை 7 மணி |
| சனி- வீண் குறைகேட்டல், மனக்கலக்கம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### தனு: — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, பணக்கஷ்டம். | காலை 7 மணி |
| திங்கள்- மனமகிழ்ச்சி, புதிய முயற்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 7 மணி |
| புதன்- பயனற்ற செயல், முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் குறை கேட்டல், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- குடும்ப சுகம், மனக் கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- உயர்ந்த நிலை, செலவு அதிகம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம் -1

### விருட்சிகம்: — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, கடன்படல். | பகல் 12 மணி |
| செவ்வாய்- உறவினர் கலகம், கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| புதன்- பயனற்ற செயல், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், மனப் பயம். | காலை 6 மணி |
| வெள்ளி- இடமாற்றம், வீண் தொல்லை. | பி.ப. 1 மணி |
| சனி- காரியசித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### துலாம்: — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- பொருள் வரவு, பெரியோர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- காரியத்தடை, சஞ்சலம். | காலை 7 மணி |
| வியாழன்- மனக்கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பகல் 12 மணி |
| வெள்ளி- உயர்ந்த எண்ணம், மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| சனி- பயனற்ற செயல், தொழில் மந்தம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 3

### கன்னி: — சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, பணவரவு. | காலை 9 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, தொழில் மந்தம். | காலை 6 மணி |
| புதன்- புதிய முயற்சி, செலவு அதிகம். | பகல் 12 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், இடமாற்றம். | காலை 6 மணி |
| வெள்ளி- அந்நிய நட்பு, கௌரவக் குறைவு. | காலை 7 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் படல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7





## அம்மா ஆசை அம்மா

அம்மா நல்ல அம்மா
ஆசை ஆசை அம்மா
அள்ளி அள்ளி அணைக்கும்
நல்ல ஆசை அம்மா.

பாசம் காட்டும் அம்மா
நேசம் காட்டும் அம்மா.
பாலை ஊட்டி என்னை
தூங்க வைக்கும் அம்மா

பதறி நானும் எழுந்தால்
பாய்ந்து வரும் அம்மா
தவறி நானும் அழுதால்
தாவி அணைக்கும் அம்மா


பட்டு போல என்னை
தொட்டில் இட்டு வைப்பாள்
சிட்டுப்போல என்னை
சிரிக்க வைக்கும் அம்மா

அம்மா நல்ல அம்மா
ஆசை ஆசை அம்மா

அனுப்பியவர்-மணி ரவீந்திரன், கொழும்பு-13

"தொன்மைக்கு அஞ்சேல்.
தோல்வியில் கலங்கேல்
தவத்தினை நிதம்புரி
நன்று கருது
நாளெல்லாம் வினை செய்."
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை



# புத்தி வந்தது

அறிவழகன் ஜனகிரி நாட்டின் மன்னன். அவனது பெயருக்கும் அறிவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. கல்வி அறிவு மட்டுமன்றி உலக ஞானம் கூட இல்லாத ஒரு படுமுட்டாளாய் அவன் இருந்தான்.

அவனுக்குத் தன்னைப் பற்றிப் பல புலவர்கள் புகழ்ந்து பாடுவதைக் கேட்க மிகவும் ஆசை.

ஒருநாள் தன்னைப் புகழந்து பாடுகின்ற கவிஞர்களுக்கு பொன்னும், பொருளும் அள்ளி வழங்க இருப்பதாக நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் முரசு அறிவிக்கச் செய்தான்.

மறுநாளே அரண்மனை முன்னே பெரும் பெரும் ஓலைச் சுவடிகளில் அறிவழகனைப் புகழ்ந்து எழுதப்பட்ட கவிதைகளைச் சுமந்தபடி கவிஞர் கூட்டம் அலை மோதியது. அதைக் கண்ட அறிவழகன் திகைத்தாலும் தன்னைப்பற்றி இத்தனை புகழ்ச்சியான கவிதைகளா என்று பெருமிதம் கொண்டான்.

அத்தனை கவிஞர்களையும் தனது அரசவை மண்டபத்தில் வரச்செய்தான். தன்னைப் புகழ்ந்து எழுதியிருக்கின்ற கவிதைகளை வாசிக்கச் சொல்லிக் கேட்கவோ, தானே படித்துத் தெரிந்து கொள்ளவோ போதுமான அறிவு அவனுக்கு இல்லாததால், அந்த கவிஞர்களுக்கு எப்படிப் பரிசு கொடுப்பது என்று யோசித்தான்.

இறுதியில் ஒரு யோசனை தோன்றியது. அதன்படி மிகப்பெரிய தராசு ஒன்றைக் கொண்டு வர ஏற்பாடு செய்தான். தராசு வந்ததும் அதன் ஒரு தட்டில் ஒரு கவிஞரது ஓலைச்சுவடியை வைத்து, இன்னொரு தட்டில் பொன்னும் வைத்து நிறுத்து, அவற்றைக் கவிஞர்களுக்குப் பரிசாகக் கொடுத்தனுப்பினான்.

சிறப்புத்தன்மை வாய்ந்த கவிதைகள் அளவில் சிறியதாக இருந்தால் அவற்றிற்குரிய கவிஞர்கள் ஒரு சில பொற்காசுகளையே பரிசாகப் பெற்றனர். கவிதைகளை மதிப்பிடும் அக்கேவலமான நிலையைக்கண்டு பல உண்மைக் கவிஞர்கள் வருந்தினார்கள். சில போலிக்கவிஞர்கள் கட்டுக்கட்டுகளாகக் கவிதைகள் எழுதி மன்னனிடம் காட்டி பெருந்தொகையான பொன்னும், பொருளும் பெற்று வந்தார்கள்.

அந்த நகரத்தில் விஸ்வகர்மா என்ற கவிஞர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல ஒரு அறிஞரும் ஆவார். போலிக்கவிஞர்களுக்கு பொன்னையும், பொருளையும் அள்ளிக் கொடுக்கும் மன்னனின் மனநிலை கண்டு கோபம் கொண்டார். தன்னைப் போன்ற உண்மைக் கவிஞர்களுக்கு மதிப்பளிக்கத் தவறிய மன்னனுக்குச் சரியான பாடம் புகட்ட வேண்டும் என நினைத்தார்.

ஒரு நாள் அரசவைக்கு வந்து மன்னன் அறிவழகனைச் சந்தித்தார்.

"வருக கவிஞரே! என்னைப் புகழ்ந்து கவிதை இயற்றி வந்திருக்கிறீரா?"

"ஆமாம் மன்னா! தங்களைப் புகழ்ந்து பாடும் விதத்தில் அருமையான காவியம் ஒன்றை இயற்றி வந்துள்ளேன். அதைத் தாங்கள் கண்ணுற்று அதன் சிறப்புக்கேற்ப எனக்குப் பரிசளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்". என்றார் விஸ்வகர்மா.

"அவசியம் தருகிறேன். எங்கே உமது ஓலைச்சுவடியைக் கொடும்?" என்றான் அறிவழகன்.

"மன்னா எனது ஓலைச்சுவடியை அரசவைக்குள் எடுத்துவர முடியாது. அது அரண்மனைக்கு வெளியே இருக்கிறது. தாங்கள் சிரமம் கருதாமல் அரண்மனைக்கு வெளியே வந்து சுவடியைக் காணுமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்." என்றார் கவிஞர்.

அறிவழகன் ஆச்சரியத்துடன் அரண்மனைக்கு வெளியே வந்து பார்த்தான். எதிர்ப்புறம் இருந்த மைதானத்தில் ஏழெட்டுக் குதிரைகள் சேர்ந்து இழுக்கக் கூடிய ஒரு பெரிய வண்டியில் ஒரு பெரிய பாறை வைக்கப்பட்டிருந்தது.

"மன்னவா தங்களைப் புகழ்ந்து எழுத எனக்கு ஓலைச்சுவடிகள் போதவில்லை. ஆகவே தான் இவ்வளவு பெரிய பாறையில் உளிகொண்டு அத்தனை கவிதைகளையும் செதுக்கியுள்ளேன். அவற்றைப் பார்த்து, அதை எடைபோட்டு இதற்குச் சமமான பொன்னும், பொருளும் தரவேண்டும்." என்றார் விஸ்வகர்மா.

அறிவழகன் திடுக்கிட்டான்.

'இவ்வளவு பெரிய பாறையை எடை போட்டால் அரண்மனைப் பொக்கிஷம் முழுவதையும் கொடுத்தால் கூட போதாதே. அதற்குச் சமமாகப் பொன்னும், பொருளும் கொடுத்து என் வாக்கைக் காப்பாற்ற வேண்டும் கடவுளே இதென்ன சோதனை.' என்று கலங்கி நின்றார்.

இதை கண்ணுற்ற விஸ்வகர்மா.

"மன்னா ! தாங்கள் செய்வதறியாது நிற்பது எனக்குப் புரிகிறது. எடைக்கு எடை பரிசு வாங்க வேண்டுமென்பதற்காக அந்தப் பாறையில் போலியான கவிதைகளையே செதுக்கியுள்ளேன். இதுவரை தாங்கள் அப்படிப்பட்ட கவிதைகளையே உண்மை என்று நம்பி ஏராளமான பொன்னையும், பொருளையும் இழந்தீர்கள். உண்மையான கவிதைக்கு எடை குறைவு. இதை உணர்த்தவே நான் இப்படி ஒரு செயலைச் செய்தேனே தவிர தங்களிடம் பொய் சொல்லி பரிசு பெறும் நோக்கமல்ல. இனிமேலாவது உண்மை எது? போலி எது? என்பதை அடையாளம் கண்டு அதன்படி நடக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்." என்றார்.

அறிவழகனுக்கு அப்போதுதான் எல்லாம் விளங்கியது. அவன் விஸ்வகர்மாவை நோக்கி,

"கவிஞரே என் தவறுகளை நினைக்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. தாங்கள் விருப்பப்பட்டால் அரண்மனையிலேயே தங்கி எனக்கு அறிவுப்பாடம் புகட்டலாம். அதை நான் விரும்புகிறேன்." என்று கேட்டுக் கொண்டார்.

கவிஞர் விஸ்வகர்மாவும் அதற்குச் சம்மதித்தார்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 11.03.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 81
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 78

பரிசுக்குரியவர்
செல்வி எல்.வசந்தமலர்
மா/பலாபத்வெல தமிழ் வித்தியாலயம்- மாத்தளை.

பாராட்டுக்குரியவர்கள்:

செல்வன் வீரையா ஜெயச்சந்திரன்
தெஹியோவிற்ற தமிழ் மகா வித்தியாலயம்-தெஹியோவிற்ற.

செல்வி.ரஜனி சிவநாதன்
பது/ஊவா ஹைலண்ட் த.வி- பண்டாரவளை.

செ.இளங்குமரன்-ஆறைப்பற்றை 01.

செ.ஷோபா-மாத்தளை.

எம்.டி.பாத்திமா சஹானா
பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம்- புத்தளம்.

## விடுகதைகளும் விடைகளும்

01. ஆண்களுக்கு அழகு தரும் ஒன்று- ஆனால் சில மிருகங்களுக்கும் இது உண்டு. அது என்ன?
02. தானியத்தின் பெயர் ஒன்று முன்னால் உண்டு. ஊரின் பெயர் ஒன்று பின்னால் உண்டு. அந்த ஊர் எது?
03. பெண்களுக்கு அது உண்டு. இரண்டாவது எழுத்தை எடுத்தால், சில ஊர்களிலும் இது உண்டு. அது என்ன?
04. அண்ணனோ உயர்ந்தவன். தம்பியோ பணிந்தவன். யார் அவன்?
05. தாவரம் ஒன்று முன்னால் உண்டு. ஊர் ஒன்று பின்னால் உண்டு அது எந்த ஊர்?
06. இளமையில் ஒரு பெயர் முதுமையில் ஒரு பெயர். அது என்ன?
07. உணவுப் பொருட்களில் இது ஒன்று. இரு எழுத்துகளை எடுத்தால் மிருகத்தின் பெயர் ஒன்று உண்டு. அது என்ன?
08. இளமையில் சட்டை களட்ட மாட்டான். முதுமையில் சட்டை களட்டுவான். அவன் யார்?
09. வாலுண்டு மிருகமல்ல. நீரிலே நீந்தும் ஆனால் அது மீனுமல்ல. அது என்ன?
10. மூன்று குடி உண்டு. ஆனால் அது ஊரின் பெயர்களில் உண்டு. அது என்ன?
11. கட்டிடப் பொருள் ஒன்றையும் ஆசிரியர் மாணவனுக்குக் கொடுக்கும் தண்டனையையும் இணைத்தால் ஒரு ஊரின் பெயர் வரும். அது எந்த ஊர்?

**விடைகள்**

01. மீசை 02. கொள்ளுப்பிட்டி 03. கூந்தல் 04. கடிகார முள் 05. வாழைச்சேனை 06. வண்ணத்துப்பூச்சி 07. மாஜரின் 08. தேங்காய் 9. தவளை 10. காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, தூத்துக்குடி 11. கல்லடி

ஏ.ஆர்.பாத்திமா பர்வின் மட்/அல்ஹிறா வித்தியாலயம்-காத்தான்குடி-05.

## வாரம் ஒரு நாடு



**அங்குயில்லா**- (பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட சின்னஞ்சிறிய நாடு)

**அமைவிடம்:** வட-தென் அமெரிக்காவின் நடுவே மத்திய அமெரிக்காவின்-கிழக்கே அமைந்துள்ள கரிபியன் பிரதேசத்தில் லீவார்ட் தீவுகளில் ஒரு தீவு.

**பரப்பு:** 96 சதுர கிலோ மீட்டர் (60 சதுர மைல்)

**தலைநகரம்:** த வல்லே.

**மக்கள் தொகை:** 7020.

**மொழி:** ஆங்கிலம்.

**மதம்:** உரோமன் கத்தோலிக்கம், புரொட்டஸ்தாந்து.


**சுவாத்தியம்:** உஷ்ணவலய சுவாத்தியம்; சராசரி வெப்பம் 28 பாகை செல்.

**தேசிய தினம்:** மே 30.

**விஷேசம்:** அழகான- அமைதியான கடற்கரைகளையுடைய தீவு- பசுமையான சூழல். கடற்கரை வெண்மையாகவே காணப்படும். இத்தீவைச் சுற்றி மிகச்சிறிய தீவுகள் பல உள்ளன. அந்தரங்க அமைதி தேடும் உல்லாசப் பயணிகள் த வல்லே நகரிலிருந்து படகுகள் மூலம் சாண்டி தீவுக்குச் செல்லலாம். ஷோலே கடற்கரையை ஒட்டினாற்போல் நிலத்தின் கீழ் அமைந்த குகை உள்ளது. 1787ல் அமைக்கப்பட்ட தாவர இல்லம், 1796ல் ஃபிரெஞ்சுக்காரரால் கைப்பற்றப்பட்ட டச்சுக் கோட்டை மற்றும் இயற்கை நீரூற்றுக்கள் பயணிகளைக் கவரும் அம்சங்கள்.

தோணி ஓட்டப் போட்டிகளும் ஏனைய நீர் விளையாட்டுக்களும் வார முடிவுகளிலும் விடுமுறை நாட்களிலும் நடைபெறுவதுண்டு.

## அறிவோம் மனதில் பதிவோம்



இத்தாலியைச் சேர்ந்த லியோனார்டோ டாவின்சி மிகச் சிறந்த ஓவியர் மட்டுமன்றி தத்துவ அறிவு கொண்டவரும், விஞ்ஞானியும் ஆவார். இவர் அக்காலத்திலேயே (1452–1519) ஹெலிக்கொப்டர் போன்ற மாதிரி வடிவத்தைத் தயாரித்திருந்தார்.



உலகின் முதல் வெற்றிகரமான ஹெலிக்கொப்டர் பிரான்ஸ் நாட்டில் 'கைரோ பிளேன்' ஆராய்ச்சிக் கூடத்தில் 1935ம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. தயாரித்தவர்கள் லூயிஸ் பிரிகட், ரீனி டொரண்ட். இந்த ஹெலிகொப்டர் மணிக்கு 80 கிலோ மீற்றர் வேகத்தில் பறந்தது.

## ரிபன் புழுக்கள்




ரிபன் புழுக்கள் மிக நீளமானவை. கடல், ஆறுகளில் இவை வாழும். சேஷெல்ஸ் தீவுகளில் மட்டும் ஒருவகை பைன் மரங்களில் இப்புழுக்கள் அதிகமாக இருக்கும். இவை 5 சென்றி மீற்றரில் இருந்து 55 மீற்றர் நீளம் வரை வளரும். உலகிலேயே மிக நீளமான பிராணி இதுதான்.

இது துண்டு துண்டாக வெட்டப்பட்டால் கூட சிறு துண்டில் இருந்து முழுநீளப் புழுவாக உருவெடுக்கும். இவை உணவின்றி நீண்ட நாட்களாக பட்டினியாக உயிர்வாழும் திறன் கொண்டவை.

அவை அப்போது மிகச் சிறியதாகத் தனது உடலைக் குறுக்கிக்கொண்டு வாழும். உணவு கிடைத்ததும், மீண்டும் பழைய நிலைக்கு வந்து விடும். இந்தப் புழுக்களில் 600 வகைகள் உள்ளன.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகா சூலம்




சேரமான் பெருமாள் ஆட்சிக் காலத்தில் புல்லரியும் குன்றின் வடக்குத் தரை வீட்டுக்கு ஒருவகை ராஜாங்க மரியாதை இருந்தது. அந்தச் செல்வாக்கு காரணமாகவே வடக்குத்தரை வீடும், அந்த வீட்டு மனிதர்களும் ஊர் மக்களால் மிகவும் மதிப்போடு போற்றப்பட்டனர்.

அந்த வீட்டின் வாரிசாக செல்லக் குழந்தையாக- வளர்ந்தவள்தான் பத்ரா. அவளுக்கு வயது பதினைந்து ஆகும் போதே முழுமையாக வளர்ந்த ஒரு பெண்ணின் மனவளர்ச்சியும், உடல் வளர்ச்சியும் ஏற்பட்டு விட்டது! காரணம்: அந்த வீட்டுக்கு இருந்த செல்வாக்கால் வருவோர் போவோர் எல்லோரும் அந்தக் குழந்தையை தங்கள் தங்கள் அன்பால் சீராட்டி ஆதுர்யமாகப் பாராட்டிக் கொஞ்சிக் கொஞ்சிக் கொண்டாடினார்கள். சிலர் அவளைத் தோளில் சுமந்தார்கள். சிலர் அவளை முதுகில் சுமந்து கொண்டு விளையாட்டுக்காட்டினார்கள். ஒருசிலர் திருட்டுத்தனமாக அந்தக் குழந்தைக்கு முத்தமும் கொடுத்தார்கள்.

அப்போதெல்லாம் யார் அந்தக் குழந்தையைப் பார்த்தாலும் அவள் அருகே நின்று கன்னத்தைத் தடவி... கைகளைத் தடவி.. ஏதோ நீண்ட நாள் பழகிய நட்புப் போல் குசலம் விசாரித்துக் கொஞ்சி விட்டுப் போவதே வழக்கமாக இருந்தது.

மன்னருக்கு மிகவும் வேண்டியவர் என்கிற முறையில் பத்ராவின் தந்தையிடம் ஏதாவது காரியமாக வருகிறவர்கள், முதலில் இந்தக் குழந்தைக்காக பழமும் இனிப்பும் கொண்டு வந்து கொடுத்து அவளுடைய முகத்தில் சந்தோசத்தைப் பார்த்து விட்டுத்தான் குழந்தையின் தகப்பனாரிடம் பேசவே ஆரம்பிப்பார்கள்.

இதெல்லாம் ஐந்து வயது வரை பத்ராவுக்கு அனுபவப்பட்டிருந்த சமாச்சாரங்கள்.

பிறகு.. அவளுக்குப் பத்து வயது ஆவதற்குள் வருகிறவர்கள் அவளையே தங்களின் பிரதிநிதியாக்கி அப்பாவிடம் பேசவிடுவது வழக்கமாக இருந்தது. செல்லக் குழந்தையான பத்ரா சொன்னால், தகப்பனார் மறுபேச்சுப் பேச மாட்டார் என்று மக்களுக்கு நம்பிக்கை வந்தது தான் காரணம்.

பத்தாவது வயது பத்ராவுக்கு ஆரம்பமான அன்று அந்த வடக்குத்தரை வீட்டில் ஒரு துக்கமான சமாச்சாரம் நடந்தது. மன்னருக்கு வேண்டியவர் என்கிற முறையில் அத்துமீறிச் சில அரசாங்க விஷயங்களில் தலையிட்டு, தனக்கு வேண்டியவர்களுக்குச் சில சலுகைகளைச் செய்து விட்டார் என்கிற குற்றச் சாட்டு மன்னனின் அவையில் வந்தது.

இது பத்ராவின் தந்தையை மிகமிக அவமானப்படுத்திய ஒரு தகவலாகும்! அரசாங்கச் சிப்பந்திகள் தம் வீட்டுக்கு வந்து அவரை மன்னர் முன் கொண்டு போக எத்தனித்த மறு நிமிடமே அவரது உயிர் வடக்குத் தரை இல்லத்தின் முற்றத்திலேயே பிரிந்து விட்டது! மன்னர் என்ன தண்டனை கொடுக்க இருந்தாரோ... அதைவிடப் பெரிய தண்டனையைத் தமக்குத் தாமே அனுபவித்தது போல் பத்ராவின் தந்தை இறந்து போனபிறகு....

அந்த வடக்குத்தரை வீட்டில் பத்ராவும், அவள் அம்மாவும் மட்டும் தான். செல்வாக்கு இருந்த காலத்தில் வந்து ஒட்டியிருந்த சொந்த பந்தமெல்லாம், இங்கே இனி எதுவுமில்லை என்று அறிந்த பிறகு... அவரவர் திசை நோக்கிப் பறந்து விட்டன!

பத்ராவின் தாய் நங்கை, அப்போது தான் நினைத்துப் பார்த்தாள். இல்லத்துக்கு ஓர் ஆண்துணை இல்லை என்றால்... என்ன நடக்கும் என்பது அவளுக்கு கணவர் இறந்து போன மறுநாளே தெரிந்தது.

பந்துஜனம் எல்லாம் வீண் பரிவாரம்!

நங்கையின் யவ்வனமே இப்போது எச்சரித்தது! ஏனென்றால்... கணவனை இழந்தபோதும்.... தன் கட்டழகை இழக்காதவள் அவள்! எனவே தான் மூன்றாண்டுகள் எப்படி எப்படியோ தாக்குப் பிடித்துக் கொண்டு இருந்தாள்! அப்புறம் ஒரு முடிவுக்கு வந்தாள்.

இரண்டாவதாக ஒரு திருமணம் செய்து கொள்வதென்பதுதான் அந்த முடிவு! நம்பூதிரியினத்தில் பெண்களுக்குத் தானே அந்த நாளில் எல்லா அதிகாரமும்? அவளாக இஷ்டப்பட்டால் தான் கணவனே ஆனாலும் கையைப் பிடிக்க வேண்டும்! அந்த அளவுக்கு பெண்ணுரிமையிருந்த போது நங்கை எத்தனை நாட்களுக்கு ஆண்துணையில்லாமல் செத்தவனை நினைத்துக் கொண்டிருப்பாள்?

நாராயணன் நம்பூதிரியைக் குடிவைத்திருந்த இதயத்தில் இன்னொரு நம்பூதிரிக்கு இருப்பிடமா? என்று சொந்தக்காரர்கள் பலரும் சொல்லம்பு தொடுத்தார்கள்.

பத்ராவிற்கு அப்போது பதிமூன்று வயது.

"இன்றைக்கோ நாளைக்கோ பூத்துமலர காத்திருக்கிறாள்... மகள்! இந்த நிலையில் அம்மாவுக்கு புருஷ அணுக்கமா?"

கேட்டார்கள் சிலர்.

நங்கை அவர்களிடமெல்லாம் விளக்கிச் சொன்னாள். "என் பசிகூட எனக்கு முக்கியமில்லே! விரதமிருந்துவிடுவேன்! ஆனால் நம்பூதிரி சேர்த்து வச்சிருக்கிற நிலபுலத்தையும்...இவ்வளவு பெரிய இல்லத்தையும் என் ஒருத்தியாலே கட்டிக் காவந்து பண்ண முடியுமா? அதுக்காகத் தான்...!"

தன் முடிவை நங்கை நியாயப்படுத்திய போது-

உறவினர்கள் வாயை மூடிக் கொண்டார்கள். சிலருக்கு இந்த நங்கையை நாமே இரண்டாம் கலியாணம் செய்து கொண்டால் என்ன என்றும் தோன்றியது!

கடந்த மூன்று வருஷங்களாக நிலத்தில் அறுவடையில்லை. எனவே தான் இந்த வயல்வேலை தெரிந்த ஒருத்தருக்காக நங்கை காத்திருக்கிறாள் போலும் என்று சிலர் தயங்கித் தயங்கி ஒதுங்கினார்கள்! ஏனென்றால் பெரும்பாலானவர்களும் உழைக்காமல் ஊரை ஏய்த்தே பிழைப்பை நடத்திப் பழகிய நம்பூதிரிகள்! இவர்களுக்கு நங்கை மீது இருந்த காதல் அவளுடைய நிலபுலன்களைப் பராமரிப்பதில் இல்லை.

சேற்றில் கால் வைக்கத் தைரியமுள்ளவன் எவனோ அவனுக்குத் தான் நங்கை சோற்றிலும் சுகத்திலும் பங்கு வைக்கப் போகிறாள் என்கிற தெளிவோடு பலரும் பம்மிப் பதுங்கிய நேரம்-

□□

ஒரு நாள்...ஓர் அந்தி நேரம்... நாற்பது வயது மதிக்கத்தக்க ஒரு கட்டுமஸ்தான நம்பூதிரி-வடக்குத்தரை இல்லத்துக்கு வந்து சேர்ந்தார். அப்படியே நாராயணன் நம்பூதிரியின் உருவம். அதே உயரம்!

நடை கூட அப்படியே அச்சாய்! வந்து திண்ணையில் அமர்ந்ததுமே பேசினார் அந்த நம்பூதிரி. "நாங்க நாலு பேர் அண்ணன் தம்பி- நான் தான் கடைசி! எங்க ஊர் வடக்கே வெகுதூரம். ராத்திரி ஏதாவது ஒரு நம்பூதிரி வீட்டிலே தங்கிப் போலாம்னு விசாரிச்சேன். இங்கே ஒரு இல்லம் இருக்குன்னு சொன்னாங்க.எங்கேயும் ஒரு சொட்டுத் தண்ணி கூடக் குடிக்கலே. ஒரு செம்பு மோரோ நீரோ குடுத்தாக் கூடப் போதும்!இப்படியே இளைப்பாறினப் புறம் விடியற நேரம் புறப்பட்டுப் போயிடுவேன்."

மடமடவென்று அந்த ஆள் சொல்லி முடிந்த போது நங்கைக்கு அவர் மீது என்னவோ தெரியவில்லை; ஒருவகைப் பரிவுணர்ச்சி!

"மோரோ நீரோ இல்லே.சோறும் போடறேன். கொஞ்சம் இருங்க!" என்றாள் நங்கை. அந்த ஆள் ஆச்சரியமாக நங்கையை நிமிர்ந்து பார்த்துவிட்டு மேல் துண்டெடுத்து உடம்பைத் துடைத்துக் கொண்டார்.

அதற்குள் கிண்டியில் நீரும் ஒரு துண்டுமாக வந்தாள் நங்கை!

"கையலம்புங்க! இதோ இலையும் சோறும் எடுத்துட்டு வரேன்."

பரபரத்தாள் அவள். பரிமாறிய பிறகு வயிறு குளிரச் சாப்பிட்ட அந்த மனிதர் பரவசமாகச் சொன்னார். "சாப்பாடு பிரமாதம். காரணம் இதுக்கு என்ன தெரியுமா? உங்க கைப்புண்ணியம். அரிசியைக் கூட அமிர்தமா மாத்தியிருக்கு!"

நங்கை லேசாக வெட்கப்பட்டு நெளிந்தாள். அப்போதுதான் பளீரென்று கேட்டார் அந்த மனிதர்: "இது நாராயணன் நம்பூதிரி இல்லம்னு கேள்விப்பட்டேன். பரம திருப்தியாகயிருந்தது. அவரை நமக்கு ராஜாங்கத்திலே இருந்த காலம் பழக்கமுண்டு! முக்தி அடைஞ்சு எத்தனை வருசமாச்சு?"

"மூணு முடிஞ்சு போச்சு!" தனக்கே கேட்காத மாதிரிச் சொன்னாள் நங்கை.

"அவர் அதிர்ஷ்டசாலி! நல்லவங்களை எல்லாம் சீக்கிரமாக் கூப்பிட்டுக்குவான் ஈஸ்வரன்."

அவர் சொல்லிக் கொண்டிருந்த போது தான் வீட்டுக்குள்ளிருந்து "தீபம்.... தீபம்..... தீபம்" என்று குரல் கேட்டது!

பூமுகத்தில் விளக்கேற்றிக் கொண்டு வந்து வைத்தாள் பத்ரா.

இனி திண்ணையிலும் தீபம் வரும் என்கிற நேரம் அவர் எழுந்து கைகளை அலம்பிவிட்டு வரப்போனார். போனவர் முற்றத்தில் நின்றபடி அந்த இல்லத்தில் மண்டிக்கிடந்த புதர்களை எல்லாம் பார்த்தார்.

இதற்குள் திண்ணையிலும் பத்ரா தீபம் கொண்டு வந்து வைத்து விட்டுப் போனாள்.

அப்போதுதான் வெகு ஆதங்கத்தோடு கேட்டுக் கொண்டே வந்தார் அந்த மனிதர். கேள்வியில் நங்கையின் மனம் அதிசயித்துப் போயிற்று!

"என்னம்மா இது? இப்படி மண்டியிருக்கு புல்லும் புதரும்? இதை எல்லாம் வெட்டிப் போட்டு இல்லத்தைச் சுத்தமா வச்சுக்கக் கூடாதா? இப்படியிருந்தா பாம்புகள் வந்து குடியிருக்குமே! எப்படிப் பயமில்லாம இருக்கீங்க?"

அவளுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை.

திண்ணையில் துண்டை விரித்துப் போட்டு உட்கார்ந்தபடி அந்த மனிதர் தன் பாட்டுக்குப் பேசிக் கொண்டே இருந்தார்.

"வீடும் மனையும் சேர்ந்து மொத்தம் மூணு நாலு ஏக்கர் இருக்கும் போலிருக்கே! எங்க இல்லத்துக்கு இவ்வளவு இடவசதியிருந்தா.. எப்படி வச்சிருப்பேன் தெரியுங்களா? உம்.. அதைப் பத்தி பேசி என்ன பிரயோசனம்- அண்ணனுக மூணுபேருக்கும் கல்யாணம் முடிஞ்சு போயிட்டாங்க! எனக்கும் தான் கல்யாணம் செய்யணும்னு ஏற்பாடு தடபுடலா நடந்தது! என்னவோ தெரியலே-கடவுள் வெளையாடி விட்டுட்டாரு! கல்யாணத்துக்கு முந்தின நாளே பொண்ணு உசிரை எடுத்துட்டுப் போயிட்டாரு! இந்த முரட்டுச் சிவசங்கரனுக்கு விதி அதுதான்னு மூணு அண்ணனும் என்மேல பழியைத் தூக்கிப் போட்டுட்டாங்க! போங்கடான்னு நானும் இல்லத்தை விட்டு ராசாங்க வேலைக்குப் போயிட்டேன்.

"பத்து வருசமாச்சு... மறுபடியும் கல்யாண நெனப்பே எனக்கு வரலே!"

"ஏன் பண்ணிக்கலே?" அனுதாபமாகக் கேட்டாள் நங்கை.

"என்னமோ தெரியலிங்க ! கட்டிக்கணும்னு வந்தவளைக் கடவுள் கொண்டு போனப்புறம் நான் வேறே யாரையுமே விரும்பலே! நம்ம மொரட்டுக்கு...ராசாங்கத்திலே குதிரைகளை அடக்கவும்....யானைகளை அடக்கவும்தான் லாயக்குன்னு நானும் ஒரு தீர்மானம் எடுத்திட்டு உட்கார்ந்துட்டேன். இனி இவ்வளவு வயசு ஆனப்புறம் எனக்கு யார் பொண்ணு குடுப்பாங்க?"

"இப்ப நீங்க எங்கே போயிட்டிருக்கீங்க?"

"எனக்கே தெரியலே! எங்காவது தேசாந்திரம் போகலாம்னு ஒரு முடிவெடுத்தேன்! அலைஞ்சு நடக்கற ஆத்மாவுக்கு கால்பட்ட இடமெல்லாம் தேசம் தான். சோறு கிடைச்ச இடமெல்லாம் சொர்க்கம். அவ்வளவு தானே? இன்னிக்கு நீங்க என் வயித்தை நிரப்பியிருக்கீங்க! நாளைக்கு யார் நிரப்புவார்களோ...அது கடவுளுக்குத் தான் வெளிச்சம்...."

"அப்படியானா நாளைக்கும் நானே சோறுபோட்டா...?"

"தங்கியிருந்து சாப்பிடணும்னு கடவுள் கட்டளையிட்டதா நினைச்சுட்டு உட்காரப் போறேன்!ஆனா உண்ட சோற்றுக்கு நான் ஏதாவது செய்யணுங்க! சும்மா உட்கார்ந்து ஒரு வேளைக்கு மேலே சாப்பிட்டா ரெண்டாவது வேளை அந்த சோற்றுக்கும் மதிப்பு இருக்காது. உண்டவனுக்கும் மதிப்பு இருக்காது!"

நங்கைக்கு அந்த மனிதரின் பேச்சைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போலிருந்தது.

"அப்ப ஏதாவது வேலை குடுத்தால் செய்வீங்களா?"

"இதென்ன கேள்வி? இப்பவே ஒரு வெட்டரிவாளும், மண்வெட்டியும் குடுங்க. விடியறதுக்குள்ளே இந்த இல்லத்தைச் சுத்தியிருக்கிற அவ்வளவு புல்லுப் பூண்டையும் வெட்டி எடுத்துக் குவிச்சுக் காட்டுறேன். நம்பூதிரிகளிலேயே நான் ஒரு வித்தியாசமான நம்பூதிரிங்க!" பெருமிதமாகச் சொன்னார் அந்த ஆள்! கதவின் மறைவில் நின்றபடி அந்த மனிதர் பேசியதையும், அதைக் கேட்டு அம்மா சொக்கி நிற்பதையும் கவனித்த பத்ரா, வடக்குத்தரை இல்லத்துக்கு ஒரு ஆண்துணையாக இந்த நம்பூதிரி இங்கேயே இருந்தால் எப்படியிருக்கும் என்று மனசுக்குள் கற்பனை செய்து கொண்டிருந்தாள்.

அவள் கற்பனை அடுத்த சில நாழிகையிலேயே பலித்து விட்டது.

அம்மா அந்த ஆளுக்கு ஒரு பாயும் தலையணையும் எடுத்து வந்து திண்ணையில் போட்டாள்.

"சிவசங்கரன் திருமேனி! இனிக் கொஞ்ச நேரம் இளைப்பாறுங்க. மத்த விஷயமெல்லாம் காலைலே பேசிக்கலாம்!" என்றாள்.

"இப்ப மண்வெட்டியும் வெட்டரிவாளும் குடுக்கலையா?"

கேட்டார் அந்தச் சிவசங்கரன்!

"நங்கை சிரித்தாள். "இந்த இருட்டுல அந்த வேலையெல்லாம் எதுக்கு? சிவசங்கரன் திருமேனி இளைப்பாறி எழுந்திருங்க!எல்லாத்தையும் காலைலே பார்த்துக்கலாம்!" சொல்லி விட்டு நங்கை கதவைச் சாத்திய போதுதான் அங்கே பத்ரா நின்றிருப்பதைப் பார்த்தாள். திடுக்கிட்டாள்.

"என்ன பத்ரா இங்க நிற்கிறே?"

"அந்த நம்பூதிரி பேசறதையெல்லாம் கேட்டுட்டே இருக்கலாம் போலிருக்கும்மா....!" என்றாள் மகள் வெகுளியாக.

தாய் மகளை அணைத்துக் கொண்டாள். படுக்கைக்கழைத்துப் போனாள். கட்டிலில் படுத்தபடியே இருவரும் பேசிக் கொண்டிருந்தது ஒரே விஷயத்தைத்தான்!

அது-சிவசங்கரன் திருமேனியை இந்த இல்லத்திலேயே ஒரு ஆண்துணையாக இருத்தி விடலாம் என்பது தான்! இதில் இரண்டு நடவடிக்கைகள் ஒரே சமயத்தில் முடிகிறதென்று நங்கை அபிப்பிராயப்பட்டாள். "நமக்கு இல்லத்துக்கு ஒரு துணையுமாச்சு....இருக்கற வேலைகளுக்கெல்லாம் ஆளுமாச்சு பத்ரா!"

"அப்படியானா அம்மா இனி வேறே கல்யாணம் பண்ணிக்க மாட்டே இல்லையா?" கேட்டாள் பத்ரா.

தூக்கிவாரிப் போட்டது நங்கைக்கு!

உற்றாரும் உறவினரும் வந்து பத்ராவின் மனசையும் அழுக்காக மாற்றிவிட்டுப் போயிருப்பதைப்போல் ஒரு பதட்டம்!

"என்னம்மா சொல்றே?"

"அப்பாவுக்கு அப்புறம் எனக்கு இன்னொரு அப்பாவை நீ தயார்படுத்திக் குடுக்கப் போறதா எல்லோரும் பேசிட்டிருந்தாங்க! எனக்குப் பிடிக்கலே......!"

சட்டென்று மகளை அணைத்துக் கொண்டாள் நங்கை.

முகத்துக்கு முகம், தோளுக்குத் தோள் ஆளாகியிருந்த மகளுக்கே ஒரு மாப்பிள்ளை தேட வேண்டிய நிலைமையில் தானும் ஒரு புருஷனுக்காக ஏங்கியது எவ்வளவு பெரிய தப்பு என்று உறுத்தியது! எனவே தான் மழுப்பலாகச் சொன்னாள் நங்கை. "அப்பாவுக்கு அப்புறம் உனக்கு வேறொரு அப்பாவா? இல்லே பத்ரா. இந்த இல்லத்துக்குக் காரியம் பார்க்க ஒரு வேலைக்காரனைத் தான் தேடிக்கிட்டிருந்தேன்... வாறவன் நம்பிக்கையா நாம நினைக்கற வேலைகளை எல்லாம் முகம் சுழிக்காமச் செய்யணுமில்லியா? அதுக்காகத்தான் ஒரு ஆண் துணைவேணும்னு விரும்பினேன்....."

பத்ரா புரிந்து கொண்டதுபோல் தலையை அசைத்தாள். அரும்பிய கண்ணீரையும் துடைத்தாள்.

"...இனி அதுக்கு அவசியமில்லே பத்ரா! இந்தச் சிவசங்கரன் திருமேனி போதும்! சோறு போட்டா எல்லாவேலையும் நம்பகமாச் செய்வாரு!"

□□

விடிய இன்னும் ஏழரை நாழிகை இருந்தபோதே விழித்துக் கொண்டு விட்டார் சிவசங்கரன் திருமேனி. அதற்குப் பிறகு அவருக்குத் தூக்கம் வரவில்லை! முற்றத்தைத் தாண்டி வந்து முசுமுசுவென்று நின்றார்! அப்புறம்?

அவரால் சும்மா இருக்க முடியவில்லை!

அங்கே மண்டியிருந்த புதர்ச் செடிகளையும் புற்பூண்டுகளையும் வெட்டரிவாளோ மண்வெட்டியோ எதுவுமே இல்லாமல் இருகைகளைக் கொண்டே வேரோடு பிடுங்கிப் போட ஆரம்பித்தார்.

விடிந்து முற்றம் தெளிக்க வந்த நங்கை அந்தக்கணம் இதை எதிர்பார்க்கவேயில்லை! செடியும் செத்தையும் ஒரு மூலையில் குவிக்கப்பட்டிருந்தன. திருப்திப்பட்டாள் நங்கை! சிவசங்கரன் இல்லத்துக் காரியக்காரனாகவே மாறிவிட்டான். ஆறு மாதத்தில் விளைச்சலில்லாமலிருந்த நிலத்திலும் விவசாயம் செய்து நெல் மூட்டைகளைக் கொண்டுவந்து அடுக்கினார் சிவசங்கரன் திருமேனி!

அப்போதுதான் சபிக்கப்பட்ட ஒரு நாளில் அந்த அநியாயம் நடந்தது!

(தொடர்ந்து வரும்)



## எழுதுவது யார்?

தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்
'முரசு'க்காக எழுதும் தொடர் இது!
வாசகர்களின்
ஊகிப்புத் திறனுக்கு சவால்!
கண்டுபிடிக்கும்
வாசகர்களில்
பத்து
அதிஷ்டசாலிகளுக்கு
அசத்தலான-பரிசுகள்
காத்திருக்கின்றன.
தொடர்ந்து வாசியுங்கள்
நாம்கேட்கும்போது
விடையை எழுதி அனுப்பினால் போதும்.

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: இ.யோகநாதன்
வயது: 25
முகவரி: கிரான்குளம்-6 குருக்கள்மடம்.
பொழுபோக்கு: நண்பர்கள் தொடர்பு, ஓவியம் வரைதல்.




பெயர்: எம்.பைஸர்
வயது: 20
முகவரி: 81, பிரதான வீதி, மாத்தளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம், தொலைக்காட்சி.



பெயர்: ஆர்.கனகலதா
வயது: 10
முகவரி: இறம்புக்கந்தை தோட்டம், இரத்தினபுரி.
பொழுதுபோக்கு: சித்திரம் வரைதல், விளையாடுதல்.



பெயர்: பாத்திமா றினானா வசூர்தீன்
வயது: 17
முகவரி: ரஹ்மானியா வீதி, சின்னக்கிண்ணியா-01.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, கதைப்புத்தகம், பத்திரிகை.



பெயர்: என்.ஜெகதீஸ்வரன்
வயது: 27
முகவரி: GAS STATION P.O.BOX- 211, AL-KHUBAR 31952,-K.S.A.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை.



பெயர்: எம்.யஹியா
முகவரி: P.O.BOX-31268 CODE NO-90803 SULAI BIKHAT, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்.

பெயர்: டி.ஜோன்சன்
வயது: 18
முகவரி: 23, மேபீல்ட் ஒழுங்கை, கொழும்பு-13
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, புத்தகம், சஞ்சிகை.

பெயர்: எம்.இப்றாஹிம்
வயது: 17
முகவரி: ஜலால்தீன் சதுக்கம், இல.5, பொத்துவில்-1
பொ.போ: பத்திரிகை, வானொலி.

பெயர்: ஏ.ஸ்ரீபன்
வயது: 24
முகவரி: HOUSE MATTRIN-22, 4600 OLTEN-SWITZERLAND
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, பத்திரிகை.

பெயர்: எஸ்.நஜீம்
முகவரி: P.O. BOX-60479, RIYADH-11545-K.S.A
பொ.போ: முத்திரை சேகரித்தல், பத்திரிகை.

பெயர்: ஆர்.வரதராஜா
வயது: 17
முகவரி: வட்டவளை தோட்டம்-வட்டவளை.
பொழுதுபோக்கு: வானொலி, கதைப்புத்தகம்.

பெயர்: எம்.பாயிஸ்
வயது: 20
முகவரி: 9, பொகுண வீதி, தெஹிவளை.
பொ.போ: வானொலி, பத்திரிகை, பேனாநட்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

15

**என்றும் முதலிடம்**

**உலகில் மிகச் சிறந்த நாவல் எது?**
**ஒரே பதில்-**
**தாய்! தாய்!! தாய்!!!**

**உண்மைகள் எப்போதும் வசீகரமானவை-**
**அதுதான் 'தாய்' நாவல் எப்போதும் முதலிடத்தில் இருக்கிறது!**

**தவறவிடாமல் தொடர்ந்து வாசியுங்கள்!**

**ரகுநாதனின் மொழி பெயர்ப்புநடை பிரமாதப்படுத்துகிறது.**

-ஆ.ர்.



# தாய்

## மக்சீம் கார்க்கி

"அந்தப் பிரசுரங்கள் இருக்கிறதே, அருமையான வேலை. மக்களைத் தூண்டி விட்டுவிட்டன: மொத்தம் பத்தொன்பது, இல்லை?"

"ஆமாம்" என்றான் பாவெல்.

"அப்படியென்றால் நான் அத்தனையையும் படித்துவிட்டேன். அதிலுள்ள சில விஷயங்கள் தெளிவாக இல்லை: சில தேவையில்லாதவை. ஆனால், எவ்வளவோ விஷயங்களை ஒரு மனிதன் சொல்ல வேண்டியிருக்கும்போது இப்படி ஒன்றிரண்டு தப்பிப்போவது சகஜம்தான்."

ரீபின் தனது வெள்ளைப் பற்கள் வெளியே தெரியும் வண்ணம் புன்னகை செய்தான்.

"பிறகுதான் சோதனை நடந்தது. அதுதான் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது. நீயும், அந்த ஹஹோலும் நிகலாயும் நீங்கள் எல்லோரும்..."

சொல்வதற்குச் சரியான வார்த்தை வாய்க்கு வராமல், அவன் பேச்சை நிறுத்திவிட்டு ஜன்னலுக்கு வெளியே பார்த்தான்; மேஜை மீது கைவிரல்களால் தாளம் கொட்டினான்.

"நீங்கள் எல்லோரும் உங்கள் உறுதியைக் காட்டிவிட்டீர்கள்-ஓ, பெரியவர்களே, உங்கள் வேலையை நீங்கள் செய்யுங்கள்; நாங்கள் எங்கள் வழியில் போகிறோம் என்று சொல்வது மாதிரி இருந்தது. அந்த ஹஹோல் ரொம்ப அருமையான ஆசாமி. தொழிற்சாலையிலே அவன் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் நான் எனக்குள் நினைத்துக் கொள்வேன்- இந்த ஆசாமியை எதுவும் அசைக்க முடியாது, சாவு ஒன்றுதான் இவனைச் சரிக்கட்டும். உருக்கினாலான பிறவி இவன்! பாவெல், நான் சொல்வது உண்மைதானே?"

"ஆமாம்" என்று தலையை ஆட்டிக் கொண்டே சொன்னான் பாவெல்.

"நல்லது! என்னைப் பார். எனக்கு நாற்பது வயதாகிறது. உன்னைவிட இரட்டை வயது. உன்னைவிட இருபது மடங்கு அனுபவம் எனக்கு உண்டு. மூன்று வருஷத்திற்கு மேல் நான் பட்டாளத்தில் வேலை பார்த்தேன். இரண்டு தடவை கல்யாணம் பண்ணினேன்; முதல் தாரம் செத்துப்போனாள். இரண்டாவது பெண்டாட்டியை நானே விரட்டியடித்து விட்டேன். காகஸஸிலும் இருந்திருக்கிறேன். துகபர்த்சி (துகர்த்சி-ஒரு சமயக் கட்சியினர்) களையும் பார்த்திருக்கிறேன். அவர்களுக்கு வாழ்க்கையைச் சமாளிக்கத் தெரியாது. தெரியவே தெரியாது, தம்பி!"

அவனது நேரடியான பேச்சை ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்தாள் தாய். இத்தனை வயதான ஒருமனிதன் வந்து தனது மகனிடம் அவனது உள்ளத்தில் கிடந்ததையெல்லாம் திறந்து கொட்டிப்பேசுவதைக்காண்பது அவளுக்கு இன்பம் அளித்தது. ஆனால், பாவெல் நடந்து கொள்ளும் முறையோ சுமுகபாவமற்றிருப்பதுபோல் அவளுக்குத் தோன்றியது. எனவே தானாவது அவனுக்கு அன்பு காட்டி, அந்த வயோதிகனின் பேச்சுக்கு ஈடுகட்ட வேண்டும் என்று நினைத்தாள்.

"மிகயீல் இவானவிச்! ஏதாவது சாப்பிடுகிறாயா?" என்று கேட்டாள்.

"கேட்டதே போதும், அம்மா. நான் சாப்பிட்டாயிற்று. பாவெல், வாழ்க்கை எப்படி இருக்க வேண்டுமோ, அப்படி இருக்கவில்லை என்பதுதானே உன் எண்ணம்?"

பாவெல் இடத்தைவிட்டு எழுந்து, கைகளை முதுகுப்புறமாகக் கட்டிக்கொண்டு மேலும் கீழும் நடந்தான்.

"வாழ்க்கை சரியான பாதையில்தான் போகிறது" என்று பேச ஆரம்பித்தான் பாவெல்; "உங்களைக்கூடத் திறந்த மனத்தோடு இங்கு கொண்டுவந்து சேர்க்கவில்லையா? வாழ்நாள் முழுவதும் உழைத்துக்கொண்டிருக்கும் நம்போன்றவர்களை அது கொஞ்சம் கொஞ்சமாக ஒன்று சேர்க்கிறது; நம் அனைவரையும், ஒவ்வொருவரையும் ஒன்று சேர்க்கும் காலமும் வந்தே தீரும். வாழ்க்கை என்பது நமக்கு இன்று ஒரு பெரும் பாரமாகவும் அதீதமாகவுமே இருக்கிறது. ஆனால் அதே வாழ்க்கைதான் தனது கசப்பான உண்மையை நமது கண்ணுக்கு முன்னால் காட்டுகிறது; வாழ்க்கைப் பிரச்சனைகளை நாம் எப்படி விரைவில் தீர்ப்பது என்பதற்கும் அதுவே வழி காட்டுகிறது."

"அப்படிச் சொல்லு, அதுதான் உண்மை" என்றான் ரீபின். "மக்கள் அனைவரையும் பரிபூரணமாகச் சீர்படுத்தியே ஆகவேண்டும். ஒரு மனிதன் அசுத்தமாயிருந்தால், அவனைக்கொண்டுபோய்க் குளிப்பாட்டி, துடைத்துத் துவட்டி, அவனுக்குச் சுத்தமான ஆடைகளை அணிவித்தால் சரியாகிவிடுவான். கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருப்பான். இல்லையா? ஆனால், அவன் உள்ளத்தைச் சுத்தப்படுத்துவது எப்படி- அதுதான் சங்கதி."

பாவெல் தொழிற்சாலையைப் பற்றியும், தொழிற்சாலை முதலாளிகளைப் பற்றியும், உலகின் பிறபாகங்களிலுள்ள தொழிலாளர்கள் எப்படித் தங்கள் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள் என்பது பற்றியும் உணர்ச்சிமயமாகப் பேசினான். சில சமயங்களில் பாவெலின் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைப்பது மாதிரி ரீபின் மேஜைமீது குத்துவான். இடையிடையே அவன் சொன்னான்,

"ஆமாம். அதுதான் சங்கதி!"

ஒருமுறை சிரித்துக்கொண்டே சொன்னான்:

"நீ இன்னும் சின்னப் பிள்ளை, மனிதர்களைச் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை."

"சின்னவன் பெரியவன் என்று பேச வேண்டாம்" என்று ரீபினின் முன்னால் வந்து நின்றுகொண்டு கடுமையாகச் சொன்னான் பாவெல்; "யார் சொல்வது சரி என்பதைப் பார்ப்போம்!"

"அப்படியென்றால்- நீ சொல்கிறபடி பார்த்தால்- நம்மை ஏமாற்றுவதற்காகத்தான் கடவுளைக்கூட உண்டாக்கியிருக்கிறார்கள் என்கிறது. இல்லையா? ஹூம். எனக்கும் அப்படித்தான் படுகிறது. நமது மதம்-ஒரு போலி, பொய்."

இந்தச் சமயத்தில் தாய் வந்துசேர்ந்தாள். அவளுக்கோ கடவுள் நம்பிக்கை அதிகம்; அந்த நம்பிக்கை அவளைப் பொறுத்தவரையில் புனிதமானது; உயிருக்குயிரானது. எனவே தனது மகன் கடவுளைப் பற்றியோ கடவுள் நம்பிக்கையைப் பற்றியோ ஏதாவது பேச ஆரம்பித்தால், அவள் தன் மகனைக் கூர்ந்து பார்ப்பாள்; கூரிய நாத்திக வார்த்தைகளால் தன் இதயத்தைச் கீற வேண்டாம் என்று தன் மகனிடம் மௌனமாய்க் கொஞ்சுவது போல இருக்கும் அந்தப் பார்வை. எனினும் அவனது நாத்திகத்திற்குப் பின்னால் நம்பிக்கை ஒன்றிருப்பதாக அவளுக்குப் படும்; அந்த எண்ணமே அவளை ஓரளவு சாந்தப்படுத்தும்.

"அவன் எண்ணங்கள் எனக்கு எப்படிப் புரியும்?" என்று தனக்குள் நினைத்துக் கொள்வாள் தாய்.

பாவெலின் பேச்சு, வயதான ரீபினின் மனதைக்கூடப் புண்படுத்தி இருக்கும் என்று அவள் கருதினாள். ஆனால், ரீபினே அமைதியுடன் பாவெலை நோக்கி அதுபற்றிக் கேட்டதைக்கண்டு அவளால் தன்னைத்தானே கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை.

"கடவுளைப் பற்றிப் பேசும்போது மட்டும், கொஞ்சம் ஆர அமரப் பேசு, அப்பா!" அவள் ஆழ்ந்த பெருமூச்சு விட்டுவிட்டு அதிகமான உத்வேகத்தோடு பேசினாள்: "நீங்கள் என்னவேண்டுமானாலும் நினைத்துக்கொள்ளுங்கள்! ஆனால் நானோ கிழவி. எனக்கோ, என் கடவுளை என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டு மட்டும் போய்விட்டால், என் துயரத்தைச் சொல்லியழக்கூட ஒரு துணையிராது!"

அவளது கண்களில் கண்ணீர் நிரம்பி நின்றது; தட்டுக்களைக் கழுவும்போது அவளது கைவிரல்கள் நடுங்கின.

"நீங்கள் எங்களை புரிந்துகொள்ளவேயில்லை, அம்மா" என்று மெதுவாகச் சொன்னான் பாவெல்.

"எங்களை மன்னித்துக்கொள், அம்மா" என்று மெதுவாக ஆழ்ந்த குரலில் சொன்னான் ரீபின்; லேசாகச் சிரித்துக் கொண்டே பாவெலைப் பார்த்தான்.

"இத்தனை வருஷமாய் ஊறிப்போன உன் நம்பிக்கையைப் பிடுங்கியெறிய முடியாது என்பதை நான் மறந்துவிட்டேன்."

"நீ நம்புகிற இரக்கமும் அன்பும் நிறைந்த கடவுளைப் பற்றி நான் பேசவில்லை" என்று தொடர்ந்தான் பாவெல்;

"ஆனால் நமது குருக்கள் குண்டாந்தடி மாதிரி காட்டி நம்மைப் பயமுறுத்துகிறார்களே அந்தக் கடவுளை, ஒரு சிலரின் கொடுமைக்கு மக்களெல்லாம் பணிந்து கொடுக்க வேண்டும் என்று எந்தக் கடவுளின் பேரால் நம்மை நிர்ப்பந்தப்படுத்துகிறார்களோ அந்தக் கடவுளைப் பற்றித்தான், அம்மா, நான் பேசுகிறேன்."

"அதுதான் சங்கதி!" என்று மேஜையை அறைந்து கொண்டே சொன்னான் ரீபின். "அவர்கள் உண்மையான கடவுளைக்கூட நம்மிடமிருந்து பிடுங்கிக்கொண்டுவிட்டார்கள்! நம்மைத் தாக்குவதற்கு எல்லாவற்றையும் தமது கைக்கருவியாக மாற்றிக்கொண்டுவிட்டார்கள்! அம்மா, ஒரு கணம் சிந்தித்துப்பார். கடவுள் தன் உருவம்போலவே மனிதனையும் படைத்தான் என்கிறார்களே, அதற்கு என்னம்மா அர்த்தம்? கடவுள் மனிதனைப்போல் இருக்கிறார், மனிதன் கடவுளைப்போல் இருக்கிறான் என்பதுதானே. ஆனால், இன்றோ நாம் கடவுள் மாதிரி இல்லை, காட்டு மிருகங்கள் மாதிரி இருக்கிறோம். தேவாலயத்தில் பூச்சாண்டிதானம்மா இருக்கிறது; நாம் நமது கடவுளை மாற்றியாக வேண்டும்; புனிதப் படுத்தியாக வேண்டும்; அவர்கள் கடவுளைப் பொய்யாலும் புனை சுருட்டாலும் மூடி மறைத்துவிட்டார்கள்; நமது உள்ளங்களைக் கொன்று குவிப்பதற்காக, அவர்கள் கடவுளது திருஉருவத்தையே பாழாக்கிவிட்டார்கள், அம்மா!"

அவன் அமைதியாகவே பேசினான்; எனினும் அவனது பேச்சின் ஒவ்வொரு வார்த்தையும் காதில் பலத்த அறைபோலத் தாக்கி ஒலித்தது. கறுத்த தாடிக்குள்ளாக தெரியும் அவனது முகத்தின் நிழலாடிய துயரத்தைக் கண்டு பயந்தாள் அவள். அவனது கண்களின் இருண்ட ஒளியை அவளால் தாங்க முடியவில்லை; அந்த ஒளி அவளது இதயத்தில் ஏதோ ஒரு வேதனையை எழுப்பியது.

"இல்லை, இல்லை. நான் இங்கிருந்து போய்விடுகிறேன்" என்று தலையை ஆட்டிக்கொண்டே சொன்னாள் தாய்: "இந்த மாதிரி விஷயங்களைக் கேட்கவே எனக்குச் சக்தி போதாது, போதாது!"

அவள் சமையலறைக்குள் விரைந்து சென்றுவிட்டாள். அவள் சென்றவுடன் ரீபின் பாவெலை நோக்கிச் சொன்னான்:

"பார்த்தாயா, பாவெல்? இந்த விஷயங்களுக்கு ஆதாரம் இதயமே தவிர, மூளை அல்ல. மனித மனத்தில், வேறு எதுவும் இல்லாத ஓர் இடத்தில், இந்த இதயம் இருக்கிறது!"

"அறிவுதான் மனிதனை விடுதலை செய்யும்" என்று உறுதியோடு சொன்னான் பாவெல்.

"ஆனால் அறிவு மனிதனுக்குப் பலம் தருவதில்லை" என்று உரக்கச் சொன்னான் ரீபின். "இதயம்தான் மனிதனுக்குப் பலம் தருகிறது, அறிவு அல்ல."

தாய் தன் ஆடையணிகளைக் களைந்து மாற்றிவிட்டு பிரார்த்தனை கூடச் செய்யாமல் படுக்கப்போய் விட்டாள். அவளுக்குக் குளிராகவும், வெறுப்பாகவுமிருந்தது. ஆரம்பத்தில் புத்திசாலியாகவும், மனதுக்குப் பிடித்தவனாகவும் தோன்றிய ரீபின்மீது இப்போது பகைமை உணர்ச்சி உண்டாயிற்று.

அவன் பேசுவதைக் கேட்ட சமயத்தில் தனக்குள் நினைத்துக்கொண்டாள்: "மதத் துரோகி! குழப்பவாதி! இவன் ஏன் இங்கு வந்து தொலைந்தான்?"

ஆனால் அவனோ நம்பிக்கை தோய்ந்த குரலில் அமைதியுடன் பேசிக்கொண்டே போனான்:

"அந்தப் புனிதமான இடத்தைக் காலியாக விடக்கூடாது, பாவெல். மனித இதயத்தில் கடவுள் குடியிருக்கும் இடம் ஒரு வேதனை இல்லம். அங்கிருந்து அவரைப் பிடுங்கியெறிந்தால், அந்த இடத்தில் படுகாயம் ஏற்படும். எனவே அவ்வில்லத்தில் ஒரு நம்பிக்கையை, மனித குலத்தின் நண்பனான ஒரு புதிய கடவுளைப் படைக்க வேண்டும். அதுதான் சங்கதி."

"கிறிஸ்து இருந்தாரே!" என்றான் பாவெல்.

"கிறிஸ்துவுக்கு ஆத்மபலம் கிடையாது. 'இந்தக் கோப்பை என் கையை விட்டுப் போகட்டும்' என்றார் அவர். அவர் சீசரை ஆமோதித்து ஒப்புக் கொண்டார். மனிதர்களிடையே மனித ஆட்சியைக் கடவுள் எப்படி ஆமோதிக்க முடியும்? கடவுள்தான் சர்வ வல்லமையும் பொருந்தியவராயிற்றே. அவர் தமது ஆத்மாவைத் துண்டுபடுத்திப் பேசமுடியாது. இதுதான் கடவுள் சித்தம், இதுதான் மனித சித்தம் என்று பாகுபாடு செய்யமுடியாது. அனால் கிறிஸ்துவோ வியாபாரத்தை ஒப்புக் கொண்டார்; திருமணத்தை ஒப்புக் கொண்டார். மேலும், அத்திமரத்தை அவர் சபித்தது இருக்கிறதே-அது தவறான காரியம். கனி தராதது மரத்தின் தவறா? அது போலவே மனத்தில் நலம் விளையாததற்கு அந்த மனம் பொறுப்பல்ல. எனது இதயத்தில் நானாகவா, விதையூன்றித் தீமையை வளர்த்தேன்?"

இருவரது பேச்சுக்களும் ஒன்றையொன்று கவ்விப்பிடிப்பது மாதிரி உணர்ச்சி வசமான போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன. பாவெல் மேலும் கீழும் நடந்துலாவும்போது தரையில் காலடி ஓசை எழும்பியது. பாவெல் பேசும்போது வேறு எந்தச் சப்தமும் ஓங்கி ஒலிக்கவில்லை. அவனது குரலே உயர்ந்து ஒலித்தது. ரீபினோ அமைதியும் ஆழமும் நிறைந்த குரலில் பேசினான்:

(தொடர்ந்து வரும்)

# தாமதமாகும் காதலிகள்

"இன்றைக்காவது ஒரு முடிவைச் செல்லிவிடு"
என்றவாறு கதவைப் பூட்டிவிட்டாள் நஸீரா.
நஸீராவுக்கு மனதுக்குள் நன்றி சொல்லியவாறு ஜீனத்தின் முன்னாலிருந்த கதிரையில் உட்கார்ந்து கொண்டான் வஸீம்.
அவள் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.
"நீ அழகாயிருக்கே."
"நல்லது."
"ரொம்ப அழகாயிருக்கே."
"ரொம்ப நல்லது."
"நான் அழகாயில்லயா?"
மௌனம்-
"அப்ப நான் அழகில்ல இல்லே?"
மௌனம்-
"என் கவிதைகள் உனக்குப் பிடிக்குமாமே! நஸீராதான் சொன்னாள். பிடிக்குமா?"
"ம்..பிடிக்கும்."
"கவிதைகள் மட்டும்தானா?"
மௌனம்-
"என்னைப் பிடிக்காதா?"
"பிடிக்கும்."
"அப்ப ஏன் பேசிறதில்ல?"
"படிக்கணும்."
"படிக்கணுமா?"
"ஆமா."
"பாஸாயிடுவியா?"
"படிச்சாப் பாஸாகலாம்."
"பரீட்சை முடியும் வரை காத்திருக்கவா?"
மௌனம்-
"காத்திருக்கட்டுமா?"
"ஆமா."
"கவிதை ஒண்ணு சொல்லட்டுமா?"

வியான்ஸ்-
தோற்றுத்தான் போனான்
இந்த-
கருப்பு மோனாலிஸாவிடம்!

"நல்லாயிருக்கு;
ரொம்ப நல்லாயிருக்கு"
ஒரு வருடத்திற்கு முன்பு நஸீராவின் வீட்டில் வைத்துப் பேசியவைகளை அசைமுடித்தான் வஸீம்.
'ஜீனத் நீ செய்த தவறு! ஜீனத் நீ செய்த தவறு!'
மனசுக்குள் எடுபிடியாய் சோகங்கள் சத்தமிட்டுக் கொண்டிருந்தன. அவள் கைபட எழுதிய இரண்டாவது கடிதத்தைத மீண்டுமொருதரம் பார்க்க ஆரம்பித்தான் வஸீம்.

'வஸீம் நான் ஒங்கள உயிருக்குயிரா நேசிச்சேன்!
அனா என்னோட சின்னப் பிடிவாதத்தாலே வெளிப்படுத்தும் வேளையைத் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தேன்.
அதன் பாதிப்பு இன்று வேறு மாப்பிள்ளை நிச்சயிக்கப்பட்டுவிட்டான்.
எனக்கு இந்த கலியாணத்திலே கொஞ்சம் கூட இஸ்ட்டமில்ல.
அதனால் இன்றைக்கு நான்கு மணிக்கு நஸீராவின் வீட்டில் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்.
கட்டாயம் வரவும்.

இப்படிக்கு,
காதலி,
ஜீனத்.

"என்ன செய்ய எனக்கும் கலியாணம் நிச்சயமாயிற்று!
ஒன்ன எதிர்பார்த்திருந்தேன் அனா, எனக்கு கிடைத்த செய்தி ஒனக்கு திருமணம் என்பதாகயிருந்ததால் நான் வேணாம் வேணாம்னு இருந்த மாமிமகளுக்கு 'ஆம்' சொல்லிட்டேன்.'
என்னால் முடியாது வஸீம்;
வேறொருத்தரோட என்னால் வாழ
'என்னால் முடியாது வஸீம்.
நீங்கயில்லாட்டி நான் செத்தே போயிடுவேன். என் பிணத்திலாவது காதலின் தூய்மைக்காக ஒருதுளி கண்ணீர் விடுங்க." சொல்லிவிட்டு அழுது வடித்தாள் ஜீனத்.

வஸீமுக்குப் பாவமாக வந்தது. அவன் சொல்ல ஆரம்பித்தான் "ஜீனத் இது ஒனக்கு மட்டுமல்ல; காதலை தாமதப்படுத்தும் ஒவ்வொரு பெண்ணுக்கும் பாடமாயிருக்கும். மனதுக்குள் ஆசைகளை அடக்கிவைத்து விட்டு முகத்தில் முடியாதேன்று பாவனை செய்யும் எல்லாப் பெண்களின் கதியும் ஒனக்குச் சமனாக அமையும். அதற்காக உயிரை விடுவது கோழைத்தனம். நீயே ஒன்னோட வாழ்க்கையை சிறையிட்டு விட்டாய் கணங்களை அனுபவிச்சாகவே வேண்டும்." என்றவாறு எழுந்து நடந்தான் வஸீம்.



கிண்ணியா சத்தாத்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

"நமது தாய்நாட்டில் கழித்த சந்தோசங்கள் இங்கே இல்லை. எனது கணவரும் இப்போது மாறிவிட்டார்."

# அக்கரைக்கு ஒரு பதில்

நிஜம் கலந்த நிகழ்வு

சிறுகதை

**சுபைர்கான் காத்தான்குடி**



"என்ன இன்றைக்கு காலையில இருந்தே இப்படி கடிதத்தை கையில வைத்துக்கொண்டு யோசிச்சிக்கிட்டு இருக்கிறீங்க....?" மனைவியின் குரல் என்னை மீண்டும் ஒரு தடவை மறந்திருந்த உலகத்திற்குள் கொண்டு வந்து வீழ்த்துகின்றது. நிமிர்ந்து என்ன வென்பதாக பார்க்கின்றேன். "காலையில குளித்து சாப்பாட்டு வேலைகளை முடித்தால்தானே மத்த அலுவல்கள பார்க்கலாம்..." தொடர்ந்த அவளின் குரல் என்னை எரிச்சலபடுத்துகிறது.

அவளுக்கு ஒரு நேர கடமையை முடித்துவிட்டு அடுத்த வேளைக்கு தன்னை அர்ப்பணிக்க வேண்டிய அவசரமும், கடமையுணர்வும். எனக்கோ இன்றைக்கு எதற்கும் தயாராக இல்லை என்பது போன்ற ஒரு மனநிலை. வெளியே வானம் வேறு பிய்த்துக்கொண்டு ஒழுகிக் கொண்டிருந்தது. எனவே கடைக்குப் போவதில்லை என்று எப்போதோ முடிவெடுத்துவிட்டேன். முடிவை மனைவியிடம் சொல்லாமல் அமைதியாக இருக்க அவளோ முகத்தைத் திருப்பிக்கொண்டு உள்ளே போகின்றாள்.

இத்தனைக்கும் காரணம் இன்று காலையில் வந்த ஒரு கடிதம். தபால்காரனின் அவசரமான மணிச் சத்தத்துடன் கதவைத்திறந்தபோது மழைக்கு கறுப்பு கோட் அணிந்து கொண்டு அவன் நீட்டிய கடிதத்தை கையில் வாங்கியபோது ரொம்பவும் ஆச்சரியப்பட்டுப்போனேன். மிக நீண்ட இடைவெளியொன்றின் பின்னர்- அதாவது சுமார் ஆறு வருடங்களின் பின் அந்தக் கையெழுத்து என் கண்களில் படுகிறது. அதைவிட ஆச்சரியம் கவரிலிருந்த முத்திரை. சுவிஸ் நாட்டு முத்திரை, கறுப்பு மேல் பூச்சுடன் காட்சியளித்துக்கொண்டிருந்தது.

நான் மத்திய கிழக்கிற்கு தொழில் வாய்ப்புப் பெற்றுப் போன போது யாழ்ப்பாணத்தில் இருந்து, பிறகு தொடர்பற்றுப் போய்விட்ட சகோதரி றினோஸாவின் கடிதம், தற்போது சுவிஸில் இருந்து வந்தால் நான் எப்படி ஆச்சரியப்படாமல் இருப்பது?

அட்வான்ஸ் லெவல் விஞ்ஞானப் பிரிவில் படித்துக்கொண்டிருந்த நான் முதல் தடவை பரீட்சைக்குத் தோற்றி சரியான பெறுபேறுகள் கிடைக்காததனால் திறமையான ஆசிரியர்கள் நிறைந்த யாழ்ப்பாணத்திற்கு படிப்பைத் தொடரச் சென்றபோது கிடைத்த அந்த தூய்மையான உறவு இப்போது பல வருட இடைவெளியின் பின்னர் எங்கோ ஒரு தொலைவான தேசத்திலிருந்து என்னை நினைத்துள்ள வேளை கண்களில் கசிகின்ற கண்ணீர் ஆனந்தக் கண்ணீரன்றி வேறு எதுவாக இருக்கும்?

"என்ன இன்னும் அப்படியேதான் இருக்கிறீங்களா....?" குசினிக்குள் இருந்து வந்த மனைவியின் குரலைப் புறக்கணித்து விட்டு மீண்டும் கடிதத்தில் பார்வையை மேய விடுகின்றேன்.

**என்றென்றும் எனது அன்பிற்கினிய சோதரனுக்கு,**

நலம் நாடிய பிரார்த்தனைகளுடன், பல வருட இடைவெளியின் பின்னர் உங்களின் பழைய முகவரியிலேயே நீங்கள் இன்னமும் இருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் இக்கடிதத்தை எழுதுகின்றேன். இம்மடல் எப்படியும் உங்கள் கையில் சேர வேண்டும் என்ற எனது பலகோடி வேண்டுதல்களுடன் தொடர்கின்றேன். கடிதத்தில் எனது பெயரைக் கண்டு ஏற்பட்ட ஆச்சரியம் முகவரியைப் பார்த்து இன்னும் பல மடங்காகியிருக்கும் என்பது நிச்சயம். வியப்புக்கள் இன்னும் நிறைய உண்டு. தொடர்ந்து படியுங்கள்.

அறிவார்ந்த மக்களுடன், அன்பால் இணைந்து அமைதியாக வாழ்ந்துகொண்டிருந்த நாங்கள் அரக்கத்தனமாக அநாதைகளாக துரத்தப்பட்ட அநியாயத்தை நீங்கள் வெளி நாட்டில் வேலைபார்த்த போது கேள்வியுற்று அதிர்ச்சியடைந்திருப்பீர்கள். நீங்கள் சவுதிக்குப் போனபின் எழுதிய இரண்டு கடிதங்கள் எனக்கு கிடைத்தன. கடைசியாக உங்களுக்கு பதில் எழுதிய சில நாட்களின் பின்னர்தான் எங்களுக்கு அந்த துர்ப்பாக்கியமான அவலம் நிகழ்ந்தது. உடுத்த துணியுடன் மட்டுமே நாங்கள் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டபோது கையில் இரண்டு மாதக் குழந்தையுடன் கிளம்பிய நான் உங்கள் முகவரியை தொலைத்ததில் வியப்பொன்றும் இல்லைதானே?

அந்தச் சின்னப் பிஞ்சுடன் காட்டு வழியாக பயணப்பட்ட எங்களின் துயரங்களைக் கேட்டால் நீங்கள் இரத்தக் கண்ணீர் வடிப்பீர்கள்! (இதோ இப்போது இக்கடிதத்தை எழுதிக்கொண்டிருக்கும்போது மகன் வீடியோ கேம் விளையாடிக் கொண்டிருக்கின்றான். சரியான சுட்டித்தனம்) இனி எப்போதாவது நாம் நேரில் சந்திக்கும்போது அவற்றைப் பேசுவோம்! (சந்திப்போம் என்ற நம்பிக்கையென்றால் நிறையவே இருக்கிறது.)

எப்படியோ கொழும்புக்கு வந்து சேர்ந்தோம். வாடகை வீடொன்றில் தங்கிக்கொண்டிருந்த வேளை அதிஷ்டவசமாக கொழும்பில் இருந்த எங்கள் தந்தையின் லொறியை - விற்றுவிட்டு நாங்கள் சுவிஸுக்கும், எனது தங்கையும், கணவரும், ஜெர்மனிக்கும் வந்துவிட்டோம். அகதிகள் என்ற நிலையில் கிடைத்த அலவன்ஸ் உடன் கொஞ்ச நாட்களை கழித்துவிட்டு பிறகு கணவர் தொழில் ஒன்று பெற்றுக்கொண்டார். பிறகு நானும் தையல் மெசின் ஒன்று வாங்கி உடுப்புக்கள் தைத்து இங்குள்ள இலங்கை ஆட்களுக்கு விற்று கொஞ்சம் சம்பாதிக்கின்றேன்.

நான் எனது இன்ப துன்பங்கள் எல்லாவற்றையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதால் ஒளிவு மறைவின்றி இங்கே எழுதுகின்றேன். இங்கே வந்தபின் வாழ்க்கை மிகவும் கசந்துவிட்டது. நமது தாய்நாட்டில் கழித்த சந்தோஷங்கள் எதுவுமே இல்லை. எனது கணவரும் இப்போது மிகவும் மாறிவிட்டார். அங்கே இருந்த அந்நியோன்யம், பரஸ்பர புரிந்துணர்வு, அன்பான பேச்சுக்கள் எதுவுமே இல்லை. ஏதோ இயந்திரம் போன்று இயங்கிக் கொண்டிருக்கின்றார். நமது பண்பாட்டிற்கும் கலாசாரத்திற்கும் கொஞ்சமும் பொருந்தாத இந்த அந்நிய நாட்டில் ஏதோ சம்பாதிக்க வேண்டும், மகனுக்காக வாழவேண்டும் என்பதற்காக எல்லாவற்றையும் சகித்துக் கொண்டு போராடிக்கொண்டிருக்கின்றேன்.

எனது தாயாரும் தங்கையும் (கடைசித் தங்கை) அங்கு கொழும்பில்தான் இருக்கின்றார்கள். அவர்களுக்கும் எனது உழைப்பைக் கொண்டுதான் பணம் அனுப்புகின்றேன். அதுவும் கணவருக்குத் தெரியாமல்தான். உங்களிடமிருந்து இக்கடிதத்திற்கு பதில் வந்தால் அவர்களின் முகவரியைத் தருகின்றேன். கட்டாயம் போய்ப் பாருங்கள். மிகவும் சந்தோஷப்படுவார்கள். இன்னும் நிறைய... நிறைய... செய்திகள் பகிர்ந்து கொள்ள உண்டு! நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள். மனைவி, குழந்தை என்று குடும்பமாக இருப்பீர்கள் என்று நம்புகின்றேன். எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள மனது துடிக்கின்றது.

கடைசியாக, எப்படி இவ்வளவு காலம் கடந்த பின் எழுதுகின்ற எண்ணம் வந்தது என்று நீங்கள் அதிசயிக்கின்ற காரணத்தை சொல்லி முடிக்கின்றேன். இங்கே எனது நண்பி ஒருவர் மூலம் 'தினமுரசு' பார்க்கக் கிடைத்தது. உங்கள் கவிதையொன்றைக் கண்டேன். அப்போது எழுந்த உணர்வுகளையும், பொங்கிய சந்தோஷத்தையும் வார்த்தைகளில் வடிக்க முடியாது. உங்கள் பெயரும் ஊரும் மட்டுமே இருந்தது. எனவே நீங்கள் தற்போது நாட்டில்தான் இருக்கின்றீர்கள் என்ற நம்பிக்கை பிறந்தது. அந்தக் குறுகிய முகவரிக்கே எழுதுகின்றேன்.

முன்னரைப் போல் இப்போதும், நிறைய கவிதைகள், கதைகள் எழுதுகின்றீர்களா? தினமுரசுக்கு தொடர்ந்து எழுதுங்கள். எனக்கும் பார்க்கலாம். நமக்குள் தொடர்பை நிலைக்கச் செய்த இலக்கிய ஆர்வமே நம்மை மீண்டும் இணைக்கப் போகின்றது என்று நிச்சயமாக நம்புகின்றேன். உங்களின் மடல் கண்டால் நான் அடையப் போகின்ற மகிழ்ச்சி மிக மிக உன்னதமானது. அதற்காக விழிகளை விரிய வைத்துக் காத்திருக்கின்றேன். நிறைய நம்பிக்கைகளுடன்..!

என்றென்றும் அன்புடன்
சகோதரி றினோஸா.

இன்றைக்கே - இப்போதே அந்த அன்புள்ளத்திற்கு பதில் எழுத வேண்டும்... அவர்கள் சொந்த மண்ணிலிருந்து அகதிகளாக துரத்தப் பட்ட துயரம், அந்தப் பாலையில் வைத்து என் செவிகளில் விழுந்தபோது நான் அடைந்த வேதனை, அவர்கள் எங்கிருக் கிறார்கள் என்று தெரியாமல்- அறிந்து கொள்ள முயற்சித்து நான் அடைந்த தோல்விகள்!... என்றைக்காவது எமது தூய்மையான நட்பு புதுப்பிக்கப்படும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் நான் கழித்த நாட்கள்!... எல்லாவற்றைப் பற்றியும் எழுத வேண்டும். இன்று முழுக்க அவவுக்கு மட்டுமே கடிதம் எழுத வேண்டும். மனைவியுடனும், மகனுடனும் கடந்து கொண்டிருக்கின்ற எனது வாழ்க்கை- வெளியேற வேண்டும்' என்ற அச்சுறுத்தல்களின் மத்தியில் தொடர்கின்ற எங்களின் போராட்டம்!... இப்போது நாட்டில் அடிக்கடி உச்சரிக்கப்படுகின்ற சமாதானத்தின் உதயம்... இன்னுமொரு தடவை நீங்கள் உங்கள் சொந்த மண்ணைத் தரிசிக்கின்ற சாத்தியம்!... உங்கள் மகனை தாய் நாட்டிலேயே அழகிய தமிழ் மொழியில் கற்பிக்கின்ற வாய்ப்பு கிடைக்கக்கூடும் என்றெல்லாம் எழுதவேண்டும்... இன்னும் எத்தனை எத்தனையோ புதிய நம்பிக்கைகள், எதிர் பார்ப்புக்கள்... எல்லாவற்றையும் சொல்லி நீண்ட... மிக நீண்ட கடிதம் ஒன்று எழுத வேண்டும்... அவவின் மகனின் புகைப்படத்தை அனுப்பச் சொல்ல வேண்டும் இன்னும்..! இன்னும்!... பெருக்கெடுக்கும் உணர்வு களுக்கு உருக்கொடுக்க பேனாவைக் கையில் எடுத்துக்கொண்டு அமர்கின்றேன்.

"நான் கூப்பிடுறது ஒண்டும் விளங்காம என்னதான் செய்யுறீங்க?" வினாவுடன் உள்ளே இருந்து வந்த என் மனைவி என்னைப் பார்த்துவிட்டு "ஹும்! பேனய தூக்கிக்கிட்டு உட்காந்திட்டா ஒண்டும் விளங்காதே...!" என்று முணுமுணுத்துக்கொண்டு மீண்டும் உள்ளே செல்கின்றாள்.



# எதிர்பார்ப்புக்கள்......

**பீர்.எம்.ஏ.ஸமத்**

அனுராதபுரம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது அந்த 'பஸ்'வண்டி. அதில் பர்ஸானாவும் இருந்தாள்.

அவளை எதிர்த்தாற்போல் இருந்த இருக்கையில் ஹாசிமும் பயணம் செய்து கொண்டிருந்தான். கையில் பத்திரிகை இருந்தது. புரட்டிப் படித்துக் கொண்டிருந்தான்.

அவன் வேறு எந்தவிதமான கவனத்திலும் தன்னைச் செலுத்தாது குனிந்து பத்திரிகையிலேயே கண்ணாய் இருந்தது பர்ஸானாவைக் கவர்ந்தது.

'பஸ் என்றால் தன் உடல் சூட்டைத் தணித்துக்கொள்ளும் ஒரு சாதனம் என்று சில இளைஞர்கள் நினைத்துக் கொண்டிருக்கும் இந்தக்காலத்தில் இப்படியும் சிலர் இருக்கத்தான் செய்கின்றனர்.' அவள் மனம் அவனுக்காய் வக்காலத்து வாங்கியது.

பர்ஸானாவின் மனம் இப்போது ஒரு நிலையில் இல்லை. அவள் பார்வையெல்லாம் அவன் பக்கமே இருந்தது.

அவனோடு எப்படியாவது பேச்சுக் கொடுத்து தன் மனதிற்குள் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் அந்த தவிப்பை அவனிடம் சொல்லி கேட்டுவிட வேண்டும் என்ற எண்ணமே அவள் குறியாக இருந்தது.

'ஆனால் முன்பின் தெரியாத அவரிடம் திடீரென்று எப்படிக் கேட்டுவிடுவது!? என்மனநிலை புரியாமல் என்னைத் தவறாக நினைத்துவிட்டால் என்ன செய்வது? ஒரு வேளை (முடியாது என்று) மறுத்துவிட்டால், அந்த அவமான நிலையை எப்பிடித் தாங்கிக் கொள்வது!?'

'சா...! அவர் தன் பக்கமாவது இருந்திருந்தால் எவ்வளவு வசதியாய் போயிருக்கும்.' என்ற சிந்தனைகள் மனதைத் தூண்டும்போது அவள் மனம் குழம்பியது.

'சே...! என்ன ஆம்பிள்ள இவர். ஒரு தடவையாவது திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன் என்கிறாரே!' சலித்துக் கொண்டாள்.

அவன் இறங்கிப் போவதற்கு முன் அவனிடம் கேட்டுவிட வேண்டும் என்ற நினைவுக்கு வந்த பர்ஸானா ஒரு முடிவுக்கு வந்தாள்.

அதாவது தன் வலக்கையை எடுத்து அவன் அமர்ந்திருக்கும் இருக்கையில் கைப்பிடியைப் பிடிப்பதுபோல் அவன் தலைமயிர் சிலவற்றையும் சேர்த்து இலேசாக அழுத்த, அது அவனுக்கு நொந்திருக்க வேண்டும். வேகமாய்த்திரும்பிய ஹாசிம், பர்ஸானாவைக் கண்டதும் வியந்து போனவன் வழிந்தான்.

"சொரி....!" மன்னிப்புக் கேட்டுக் கொண்டே அது தவறுதலாக நடந்தது என்பதை அவன் அறிந்துகொள்ள வேண்டும் என்று பார்க்க அவள் போட்ட திட்டம் பலித்துவிட்டது என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டவளிடம்,

"பறவாயில்லை...." என்று ஒரு புன்னகையோடு சொல்லிவிட்டு திரும்பிக்கொள்ள மனம் இன்றி மீண்டும் பத்திரிகையில் கண்களைப் பதித்துக் கொண்டவனுக்கு அதைத் தொடர்ந்து வாசிக்க மனம் இன்றி மீண்டும் கண்களைப் பதித்துக் கொண்டவனுக்கு அதைத் தொடர்ந்து வாசிக்க முடியவில்லை.

'சே இவ்வளவு அழகான ஒரு பெண்ணை தன்னெதிரே வைத்துக்கொண்டு இந்தப் பத்திரிகை தந்த 'சுவாரஸ்யத்தில் தன்னையும் மறந்து நேரத்தை வீணடித்து விட்டோமே!' என்று தன்னையும் பத்திரிகையையும் நொந்து கொண்ட அவனுக்கு பர்ஸானாவுடன் பேசவேண்டும் போல் இருந்தது. ஆனால் எப்படிப் பேசுவது?

அவளாவது பேசமாட்டாளா! ஹாசிமின் மனம் ஏங்கியது.

இப்போது பர்ஸானாவிற்கு சற்றுத் தெம்பு ஏற்பட்டிருந்தது என்றாலும் இதயம் ஏனோ வழமையைவிட வேகமாய் அடித்துக் கொண்டது.

அவனை நோக்கி "நீங்க பாக்கிறது என்ன பேப்பர்?" இவ்வாறு கேட்டு பேச்சை ஆரம்பித்தாள்.

அவள் தன்னிடம்தான் பேசுகிறாள் என்பதைத் தெரிந்து கொண்ட ஹாசிமின் அடி வயிற்றிலிருந்து தொண்டைவரை என்னமோ செய்தது. அவன் மனதிற்குள் ஒருவகை இன்ப நாதம் இழையோட "தி...னமுரசு வாரமலர். ....." என்று பதில் சொன்னவனின் வார்த்தைகள் தடுமாறின.

'தினமுரசு வாரமலர்' இதுபற்றி அவள் கேட்டிருக்கிறாள். ஆனால் இதுவரை பார்த்ததில்லை. ஹாசிம் இந்தப் பத்திரிகையில் ஊறிப்போய் இருக்கும் போதே அவள் நினைத்துக் கொண்டாள். அது ஏதாவதொரு விஷேசமான பத்திரிகையாகத்தான் இருக்க வேண்டுமென்று.

"அதக் கொஞ்சம் தருவீங்களா? பார்த்திட்டுத் தந்திடுறன்."

அதுக்காகவே எதிர்பார்த்துத் தயாராக இருந்தவன் அதை நீட்டிவிட,

இத்தனை நேரமும் எதைக் கேட்க வேண்டும் என்று துடித்தாளோ அது தன் கைகளில் கிடைத்துவிட்ட பெருமிதத்தில் அவனுக்கு 'தேங்ஸ்' - ஒரு நன்றியைத் திணித்துவிட்டு அதை தன் கைகளில் அள்ளி ஆர்வமாய் மேயத் தொடங்கினாள் பர்ஸானா.

அவளின் எதிர்பார்ப்பு பலன் தந்தது.

பாவம் ஹாசிமின் எதிர்பார்ப்புக்களோ வெறும் ஏமாற்றமாகியது.



வாட்ச்மேன்: எனக்கு இனி பகல்லே வாட்ச்மேன் வேலை வேண்டாங்க.
முதலாளி: ஏன்?
வாட்ச்மேன்: என்னை எல்லோரும் 'டே' வாட்ச்மேன் என்று கூப்பிடுகிறார்கள்.

□□

ஆசிரியர்: எல்லாப் பாடத்திலேயும் 16 மார்க்குக்கு மேலே வாங்க மாட்டேங்கிறியே உன் பேரு என்ன?
மாணவன்: மார்க்கண்டேயன்.

□□

- உங்க மனைவியோட எங்க ஹோட்டலுக்கு வந்து அடிக்கடி சாப்பிடுறீங்களே அவ்வளவு ருசியா?
- இல்ல. அப்பதானே அவளுக்கு என்னோட சமையலின் அருமை தெரியும்.

---

அவர்: 'பளிச், 'பளிச்'னு பேசுறாரே...... யாருங்க அவரு?
இவர்: அவர்தாங்க ஃபோட்டோகிராஃபர்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# வரம்பு கடந்த வரம்



-தருவது-

**ரசிகன்**

**பூ**மியின் மேனிக்கு பச்சைப் பட்டாடை விரிந்தது போல கண்ணுக்கெட்டிய தூரம் வரை கதிர்கள் சிரிக்கும் வயல்.

பூரித்த இளநீர் குலைகளோடு வானை நலம் விசாரித்துக்கொண்டிருக்கும் தென்னைகள்.

இயற்கை வஞ்சகம் இல்லாமல் வளத்தை வாரியிறைத்திருந்தது. அங்குதான் பாலமுனியின் ஆசிரமும் இருந்தது.

பத்து வயதிலேயே சித்து விளையாட்டுக்களில் தேர்ச்சி வந்துவிட்டதால் பாலமுனி என்ற பெயர் வந்துவிட்டது.

தீட்சண்யமான கண்கள். சிவந்த மேனி. பரட்டைத்தலை. பரந்த மார்பு. பழங்களையும், இலை, தழைகளையும் தவிர வேறு உணவு கிடையாது. கருங்கல்லாக உறுதி பெற்ற உடல். உதடுகளில் நிரந்தரமாய் வசிக்கும் புன்னகை. அடிக்கடி உச்சரிக்கும் ஏதோ சில மந்திர வார்த்தைகள். அவர்தான் பாலமுனி. பாலமுனிக்கு வயது 40 என்று சொன்னால் நம்புவது கடினம்.

"சுவாமி!"

சீடன் பொதியன் மெல்லியதாய் அழைத்தான். சுவாமி நிஷ்டையில் இருந்தவர் ஞான விழிகளை திறந்து எதிரே பார்த்தார்.

"என்னப்பா பொதியா?"

"தங்கள் தரிசனத்திற்காக..."சீடன் சொல்லி முடிக்க முன்பே பாலமுனி கையுயர்த்தி தடுத்தார்.

"தெரியும். அரசி அமலாதேவியும் அவள் தோழியும் வந்திருந்திருக்கிறார்கள்."

சீடன் பொதியனுக்கு ஆச்சரியத்தால் திறந்த வாய் மூடமறுத்தது. 'நிஷ்டையில் இருந்தவருக்கு வெளியே வந்திருப்பவர்களின் விபரம் எப்படித் தெரிந்தது?' என்று நினைத்தான்.

அவன் மனதில் ஓடிய எண்ணங்களை அவன் முகத்தில் படித்த பாலமுனி உதட்டில் ஒரு மர்மப் புன்னகை மட்டும்.

"வரச்சொல் பொதியா!"

வந்தார்கள். பாலமுனி விழிகளை மூடியிருந்தார். பெண்கள் இருவரும் அருகில் வந்து தலைவணங்கினர். வாசனைத் திரவியங்களை மேனியில் பூசியிருக்கிறார்கள். பாலமுனி விழிளை மூடியிருந்தாலும் புலன்களை மூடவில்லை.

"வணக்கம் சுவாமி."

அரசி அமலாதேவி நமஸ்கரித்தாள். தோழியும் அப்படியே.

"நலமா தேவி?"

"ஆம், தங்கள் அருளின் புண்ணியத்தால்!"

"அபத்தம். அபத்தம். நமக்கும் மேலே இருப்பவன் ஒருவன். அவன் என்ன கட்டளை இடுகிறானோ அதனையே அடியேன் சிரமேற்கொண்டு செய்கின்றேன் தேவி."

சொல்லிவிட்டு மெல்ல விழிகளைத் திறந்தார் பாலமுனி. அமலாதேவியின் இளமை புலன்களை வதைத்தது.

குனிந்து வணங்கியதால் விலகியிருந்த அவளது மேலாடை ரசிப்புக்கும், ஊகிப்புக்கும் உந்துதல் கொடுத்தது.

பாலமுனி தன்னை மறந்து சற்று அதிகமாகவே விழிகளை மேயவிட்டுத் தொலைத்தார்.

"என்ன பார்க்கிறீர்கள் சுவாமி."

பாலமுனி திடுக்கிடுகிறார்.

பத்துவயதில் சித்து விளையாட்டைத் தொடங்கியவரல்லவா, முப்பது வருட அனுபவம் கைகொடுத்தது.

"உடல் வாடியிருக்கிறது தேவி".

அரசர் ராஜ விவகாரங்களில் அதிகம் மூழ்கியிருக்கிறார் என்று என் சிற்றறிவில் தெரிகிறது. அரச காரியங்களில் அந்தப்புற காரியங்களை மறந்துவிடுகிறாரோ?"

அமலாதேவி வெட்கப்பட்டாள்.

திடீரென்று பாலமுனி தனது வலது கரத்தை தலைக்கு மேல் உயர்த்தினார்.

அடுத்த நொடியே அந்த கரத்தில் ஒரு ரோஜா மலர் அமர்ந்திருந்தது.

அழகியும், தோழியும் திகைத்துப் போயினர்.

"இந்தா தேவி. இது உனக்கு."

"எதற்கு சுவாமி."

"குழந்தை இல்லையே என்ற குறை உன் நெஞ்சில் குடியேறியிருக்கிறதல்லவா?"

"ஆமாம்..சுவாமி!"

பாலமுனி தோழியைப் பார்த்தார்.

"சற்று வெளியில் இருக்க முடியுமா நீ. ஒருவர் மட்டுமே அறியும் மந்திரம் ஒன்றை உச்சரிக்கவேண்டியிருக்கிறது. நீ இருந்தால் பாதகமில்லை; ஆனால் மந்திரம் பலிக்காது!"

தோழி எழுந்து குடில் கதவு திறந்து வெளியே சென்றாள்.

பாலமுனியின் உடல் நடுங்கியது. விழிகளை மூடியிருந்தார். உதடுகள் ஏதோ மந்திரங்களை உச்சரித்தன.

இடையில் ஒரு பை. இடக்கை செலுத்தி விபூதி எடுத்து காற்றில் வீசினார்.

"அமலா சற்றே முன்னே
நகர்ந்து அமர்ந்துகொள்"

அமர்ந்தாள்.

"விழிகளை இறுக மூடு!"

மூடினாள்.

"நான் தந்த ரோஜாவை உனது இடது கரத்தில் வைத்துக்கொள்."

வைத்திருந்தாள்.

"உடல்கள் இரண்டு கூடிக் கலப்பது தேவ சுகம்.

அந்த சுகத்தின் ஜனனம்தான் புதிய உயிர்.

உன்னை அவன் தொட அவனை நீ தொட பூவும் வண்டும் போல் மாறும் பொழுதுகள் அற்புதம்."

பாலமுனி தத்துவம் சொல்லும் பாங்கில் உணர்ச்சிகளை விதைக்கத் தொடங்கினார்.

"கவரும் தன்மை இருந்தால்தான் அது காந்தம். பெண்ணும் அப்படித்தான். புரிகிறதா தேவி?"

"புரியவில்லை சுவாமி!"

"உன் உடலில் எந்த குறையும் இல்லை. அங்க சாஸ்திரம் எழுதப்பட்டதே உன் சாரீரத்தைப் பார்த்துத்தானோ என்று பற்றில்லாத எனக்குள் கூட பற்றிக்கொள்கின்றது கேள்வித் தீ. எனினும் ஒரு குறை."

பாலமுனி சொல்லி நிறுத்தினார். அரசி பதட்டப்பட்டாள்.

"என்ன குறை சுவாமி?"

"கண்களை கவரும் வலிமையை உன் உடலுக்கு தந்தவன் அதில் காந்த சக்தியை வைக்க மறந்துவிட்டான். அதனால்தான் அரசர் விலகிப் போகிறார்."

"ஐய்யய்யோ...."

"பயப்படாதே தேவி. நான் எதற்கு இருக்கிறேன்?"

அரசியின் தோள்கள் இரண்டிலும் சுவாமியின் இரு கரங்களும் இறங்கின.

பருத்த தோள்கள். எனினும் இதம். பெண்ணில்தான் எத்தனை இரகசியங்கள்.

பாலமுனிக்குள் நெருப்பு மெல்ல மெல்ல ப்ரந்து உயர்ந்து எரியத் தொடங்கியது.

"விழிகளை திறக்காதே."

"சரி சுவாமி!"

என்ன வரம் வேண்டும். என் தேவன் கேட்கிறான் சொல் தேவி!"

"குழந்தை வரம்!"

"கேட்பது உன் கடன். கொடுப்பது என் பணி! உன் மணவாளன் பெயரை மனதுக்குள் உச்சரி தேவி"

"உத்தரவு சுவாமி!"

பாலமுனி அமலாதேவியின் மேலாடையை மெல்ல விலக்கினார்.

விலக்கியவர் வெறித்துப் பார்த்தார். விழிகள் சிவந்தன. உடல் உஷ்ணமானது.

அரசிக்கு ஏதோ வித்தியாசமாய் பட்டது. சுற்றிலும் புகை மண்டலம்.. வாசனைப் புகை. செவியில் விழும் மந்திரம். தோளில் வரவர அதிகமாகும் சுவாமியின் கர அழுத்தம்.

ஏதோ தவறு நடக்கிறது...அரசி விழித்துக்கொள்ள முயன்றாள்.

வாசனைப் புகையில் மயக்க மூலிகை. சுவாசித்து பழகியதால் பாலமுனியை மயக்கம் நெருங்காது.

அரசி மெல்ல மயங்கிச் சரிய பாலமுனி மார்பகங்களை வருடி அவள் மூடிய விழிகளில் முத்தமிட்டார்.

பஞ்சின் இதமாய் இருந்த வயிற்றில் மெல்லக் குனிந்து உதடுகள் பதித்து, உன்மத்தமாகி அரசியின் பட்டாடைக்கு விடைகொடுக்க இடையில் கைவைத்தார்.

முழுதாக கண்டு ரசிக்க வேண்டும்.

எத்தனை நாளாய் போட்ட திட்டம்.

பாலமுனிக்கு சகல புலன்களும் உணர்ச்சியால் நிரம்பின.

பட்டாடைக்கு விடை கொடுக்க பாலமுனி உறுதியாய் முயல,

பட்டென்று திறந்தது குடிலின் கதவு. காற்றைக் கிழித்து வரும் அம்பு போல் வந்தாள் அரசியின் தோழி.

பாலமுனி இப்போதுதான் உண்மையாகவே நடுங்கினார். நெகிழ்ந்திருந்த இடுப்புத்துண்டை இறுக்கியபடி எழுந்து, சமாளிக்க முயன்றார்.

"பூ... பூசையை குழப்பிவிட்டாயே."

"பூசையயல்லடா பாவி; நடக்கவிருந்த மோசத்தை தடுத்துவிட்டேன்!"

"தெய்வத்தை நிந்திக்கிறாய்"

"தெய்வத்தின் பெயரால் பெண்களின் தேகத்தை நேசிக்கின்ற மந்திக் குணத்தவனை நிந்திப்பதற்கும் தெய்வத்திற்கும் என்னடா சம்பந்தம்?"

"என் அருள்வாக்கு பொய் என்கிறாயா?"

"உன் இருள் நாவல் சொல்வது அருள்வாக்கா? சாவை ருசிக்கப் போகும் சண்டாளா கேள்; ஆண்டவனுக்கும் அவன் அடியாருக்கும் தரகர்கள் தேவையில்லை. ஆலயங்கள் இருக்கும்போது அடியார்களுக்கு இந்த ஆசிரமங்கள் எதற்கடா? தகுந்த கூரை கூட இல்லாமல் கொட்டும் மழையில் கோவில் விக்கிரகங்கள் நனைந்து கொண்டிருக்கும் போது உன் போன்ற கொடியவர்களுக்கு கூடாரங்கள் எதற்கடா? கொளுத்துப் பருக்கவும் குடிமக்களை ஏய்க்கவும் அவதாரங்கள் என்ற பட்டம் ஒரு கேடோ?"

பாலமுனி தப்பிக்கொள்ள தருணம் பார்த்தார்.

"பொதியா.....ஓடிவா!"

உரத்துக்கூவினார். தோழி நகைத்தாள்.

"எல்லாம் முடியும் உன்னால் என்றால் உதவியாளரை ஏனடா அழைக்கிறாய்? பூ என்று ஊதினால் பூ வரும் உன் கையால் இந்த பூவை வீசும் கத்தியை தடு பார்க்கலாம்."

கத்தி அவள் கரத்தில். பாலமுனி கையெடுத்துக் கும்பிட்டார்.

"என்னை விட்டுவிடு. இனிமேல் இந்த தொழிலையே விட்டுவிடுகிறேன்."

தோழி நகைத்தாள்.

"என்னடா பார்க்கிறாய். காளி நகைக்கிறாளடா என் உருவில்! காதகா! உன்னை அழிக்கப் போகிறாளடா என் வடிவில்! குற்றங்களின் மொத்த வடிவமே ஒரு குறள் சொல்கிறேன் கேள்.


**"யாதனின் யாதனி னீ ங்கியா னோதல் அதனி னதனி லிலன்"**

பாலமுனியின் முகத்தில் சவக்களை. தோழி கேட்டாள்.

"அந்தக் குறளின் அர்த்தம் தெரியுமா உனக்கு? ஒருவன் எந்தப் பற்றுக்களை விட்டு வருகிறானோ அந்தப் பற்றுக்களால் வரும் துன்பங்களும் அவனுக்கு இல்லையாம். விருப்பம் காட்டாத பெண்ணை மயக்கமாக்கி அனுபவிக்க நினைத்தது அவள் தேகத்தில் நீ கொண்ட பற்று! அதன் விளைவு உன் வீழ்ச்சி. இனி இல்லை உனக்கு மீட்சி!"

பாலமுனியின் மார்பில் செருகியது தோழியின் கத்தி. ●

## குறுக்கெழுத்துப் போட்டி இல-91



**இடமிருந்து வலம்**

01. இது சிறுவர்களுக்கும் மகிழ்ச்சி தரும்.
06. இவர் ஒரு மெழுகுவர்த்தி.
08. வெள்ளை நிறத்தில் இதை இங்கே கண்டதில்லை.
11. அணிவகுத்தாலும் இது உருவாகும்.
12. இந்தப் பெயரில் ஒரு சண்டைக் கலையும் இருக்கிறது.
15. நீரோ மன்னனுக்கு நாட்டைவிடப் பிடித்தது இது.

**மேலிருந்து கீழ்**

01. ஊர்வலங்களில் அலங்காரமாய் வரும்.
02. பிரபு இதில்தான் அறிமுகம்.
03. பல சேர்ந்தால் மந்தை.
04. விளையாடுவோருக்கு இது களம்.
05. மருத்துவரை இப்படியும் அழைப்பதுண்டு.
07. இவர்கள் தொழில் ஆடுகளை மேய்ப்பது.
09. தண்டணையாக இதையும் கொடுப்பார்கள்.
10. துணி இருந்தால் தான் இந்த அணி வரும்.
13. மடுவுக்கு எதிர்ச்சொல்.
14. மனிதர்களுக்கு இல்லாத ஒன்று.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 11.03.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-91**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-89ற்கான சரியான விடைகள்:**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 சி | ன | ம் | ■ | 2 இ | ஞ் | 3 சி |
| ர | ■ | 4 க | ர | ட் | ■ | கி |
| 5 சு | ம | ங் | க | லி | ■ | ச் |
| ■ | 6 மா | சி | ■ | ■ | 7 ப | சை |
| 8 பா | ரி | ■ | 9 அ | ல | ரி | ■ |
| க் | ■ | 10 ச | ட் | ட | ச | பை |
| 11 கு | ற | ட் | டை | ■ | ல் | ■ |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.89இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. ஏ.பாலகோபன் மட்டக்குளி.
2. செல்வி.எஸ்.சரோஸ் நுவரெலியா.
3. ஏ.எம்.நஸீரா மினுவங்கொடை.
4. யூ.எல்.வாஹிட் களுத்துறை.
5. எம்.காமில் சம்மாந்துறை.
6. செல்வி.மனாஇந்துமதி ஹப்புத்தளை.
7. வி.ஜெயக்குமார் வவுனியா.
8. செல்வி. சுதாராணி மூதூர்.
9. திருமதி பாத்திமா சிஹானாமாபிர் மன்னார்.
10. கே.சிவானந்தம் பண்டாரவளை.

**இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

## ஸ்போர்ட்ஸ்

# முதலாம் இடத்தை எட்டிப்பிடித்தார்

# இந்திய வீரர் சச்சின் சாதனை

இந்தியாவின் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான சச்சின் டெண்டுல்கர் உலகின் நம்பர் வன் இடத்தைப் பிடித்து விட்டார்.

இதுவரை நம்பர் வன் ஆக இருந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரர் பிரையன் லாரா 3வது இடத்திற்குத் தள்ளப்பட்டு விட்டார்.

பாகிஸ்தானின் சலீம் மாலிக் 2வது இடத்திற்கு முன்னேறி விட்டார்.

இந்தியாவின் துணைக் கப்டனான சச்சின் டெண்டுல்கர் துடுப்பாட்டப்பட்டியலில் நம்பர் வன் இடத்தைப் பிடிப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

மிகக்குறைந்த வயதிலேயே டெஸ்ட் போட்டிகளில் அறிமுகமாகி பிரகாசித்தவர் டென்டுல்கர்தான். இவர் முதல் டெஸ்ட் போட்டியின் போது விளையாடும் இவருக்கு வயது 16.

1989-90ல் பாகிஸ்தானில் உள்ள கராச்சியில் நடைபெற்ற போட்டியிலேயே டென்டுல்கர் அறிமுகமானார். இளம் வயதிலேயே முன்னோடிகளின் அனுபவத்துடனும், முதிர்ச்சியுடனும் விளையாடிய டென்டுல்கர் கிரிக்கெட் ரசிகர்கள் மற்றும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தார்.

சமீபகாலமாக பிரையன் லாராவே முதலிடத்தில் இருந்து வந்தார். ஆனால் இந்தியாவுக்கு எதிராக நடந்த் போட்டிகளில் லாரா சரியாக விளையாட வில்லை. இதனால் இவரது ரன்ரேட் விகிதம் குறையத் துவங்கியது.

ஆனால் கடந்த வருடம் டென்டுல்கருக்கு சிறப்பான ஆண்டாக அமைந்தது. இந்திய அணி ஒருநாள் போட்டிகளிலும், டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடி வெற்றியீட்டியது. அதனால் இந்த வெற்றிக்குக் காரணமாக இருந்த டென்டுல்கரின் ரன்ரேட் விகிதம் உயரத் தொடங்கியது.

கடந்த டிசம்பர் மாதம் வரை நடைபெற்ற போட்டிகளை அடிப்படையாக வைத்து கூப்பர்ஸ் அன்ட் லைபிராண்ட் நிறுவனம் வெளியிட்டுள்ள தேர்வுப் பட்டியலில் முதல் பத்து இடங்களைப் பெறும் வீரர்கள். விபரம் கீழே;

| வீரர் | நாடு | புள்ளிகள் |
|---|---|---|
| 01.சச்சின் டென்டுல்கர் | இந்தியா | 814 |
| 02.சலீம் மாலிக் | பாகிஸ்தான் | 764. |
| 03.பிரையன் லாரா | மேற்கிந்தியத்தீவுகள். | 753 |
| 04.மைக்கல் ஸ்லேட்டர் | அவுஸ்திரேலியா | 742. |
| 05.டேவிட் பூன் | அவுஸ்திரேலியா | 725. |
| 06.டெஸ்மன்ட் ஹெய்ன்ஸ் | மேற்கிந்தியத்தீவுகள் | 719 |
| 07.ஜிம்மி அடம்ஸ் | மேற்கிந்தியத்தீவுகள் | 718 |
| 08.சையட் அன்வர் | பாகிஸ்தான் | 709. |
| 09.மார்ட்டின் குரோ | நியூசிலாந்து | 689. |
| 10.அலெக் ஸ்ரிவட் | இங்கிலாந்து | 687. |

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 70

இவ்வாரம் (05.02.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:**
இந்த வீர காவியத்தில் இதுவரை நான் கூறிவந்த எந்தவொரு சம்பவமும் எதிர் திசையில் காணுகின்ற குருச்சேத்திர மென்னும் கொலைக் களத்தையே நாடும் கருத்தினையே தாங்கிக் நகருவதை கண்ணுற்றோம்! போர் முனைக்கு ஏகிடு முன் பீஷ்முடனேயிணைந்த தோரரிய கதையைமிங்கு கூறுவதுதான் பொருந் தும்! காசிநாட்டு மன்னவனின் ஆசை மகள் மூவரையும் கங்கை மைந்தர் பீஷ்மரவர் அன்றொருநாள் கடத்தி வந்தார். விசித்திர வீரியனே இருவரையும் மணம் முடிக்க வெஞ்சினத்தால் வெகுண்டெழுந்த மூத்தவளாம் அம்பா கடுந் தபசுதனை ஏற்று கங்கை மைந்தர்தனை வதைக்க கொடுஞ் சபதம் பூண்டின்று சிகண்டி எனுமுரு வெடுத்தாள்!

-காட்சி தொடக்கம்-

சிகண்டி தன்னுடைய பாசறையில், காவல னொருவன் கொண்டு வந்து கொடுத்த விஷத்தில் தனது அம்பின் முனைகளைத் தோய்தெடுத்துக் கொண்டிருக்கும்போது அங்கு திஷ்டத்துய்மன் வருகிறான்.

**திஷ்ட:** வணக்கம் அண்ணா! யாருக்காக இந்த விஷ அம்புகளை தயார் செய்கின் றீர்கள்?

**சிகண்:** தேவவிரதன், கங்கை மைந்தன், பீஷ்மன் என்றழைக்கப்படும் அந்த மாவீரனை வதைப்பதற்காகத்தான்!

**திஷ்ட:** அந்தப் பணியினை என்னிடம் விட்டுவிடலாமே அண்ணா!

**சிகண்:** இல்லை தம்பி! அவரவர்க்கு நேர்ந்த அவமானத்துக்கு அவரவரே பிராயச் சித்தம் தேட வேண்டும்! அன்று காசி நாட்டரண்மனையில் நடைபெற்ற சுயம் வர நாள் இன்றும் என் உள்ளத்தை உறுத்திக்கொண்டேயுள்ளது. மாவீரர்கள் சூழ்ந்திருந்த அந்த அவை ஒரேயொரு மனிதன் புகுந்ததனால் அதிர்ச்சியுற்றது.

-காட்சி பின்னோக்கு-

காசி நாட்டரசன் அரசவை.

**காவலன்:** கங்கையின் மைந்தர் பீஷ்மர் அவைக்கு வந்துகொண்டிருக்கிறார்!

**இளவரசர்-1:** இளவரசிகளின் எழில் பிரம்மச்சாரி பீஷ்மரையும் கவர்ந்திழுத்து விட்டதுபோலும்!

**இளவ-2:** அவருடைய சபதம் கண்ணாடி போலானதோ! நொருங்கிவிட்டது...!

ஏனையோர் சிரிக்கின்றனர்.

**பீஷ்ம:** அஸ்தினாபுரி அரசன் விசித்திர வீரியனின்சார்பில் இங்கு வந்திருக் கிறேன்! காசி நாட்டு இளவரசிகள் கவுரவ வம்சத்தவரை மணம் முடிப்பது தான் மரபாக இருந்து வந்துள்ளது. அதன்படி இந்த இளவரசிகள் மூவரை யும் என் தம்பி விசித்திரவீரியனுக்கு மணம் முடிக்க அழைத்துச் செல்கிறேன்.

**சால்வன்:** இளவரசிகள் தாங்கள் விரும்பும் மணமகனை தேர்ந்தெடுப்பதற்காகவே இந்த சுயம்வரம்...!

**பீஷ்ம:** இந்த இளவரசிகளுக்கு அந்த உரிமை கிடையாது சால்வ நாட்டு மன்னரே!

**சால்:** அடக்கிப் பேசும் பீஷ்மரே!

**பீஷ்ம:** குதிரைகளை அடக்கித்தான் எனக்குப் பழக்கம் சால்வ மன்னா! ஏற்கனவே என் வழியில் குறுக்கிட்ட உன்னை மன்னித்தேன். இங்குள்ள அனைவ ருக்கும் அறிவிக்கிறேன்! இளவரசிகள் மூவரையும் என்னுடன் அழைத்துச் செல்லவே இங்கு வந்தேன்!

இவ்வாறு கூறிய பீஷ்மர் தனது வில்லில் ஒரு பாணம் தொடுத்து எய்கிறார். அது அங்கிருந்த சகல மன்னருடைய முடிகளையும் தரையில் உருட்டி விடுகிறது. அனைவரும் தலை குனிகின்றனர்.

**பீஷ்ம:** என்னை எதிர்க்க வேறு எவருக்காவது துணிவு இருக்கிறதா? காசி நாட்டதிபரே! தங்கள் மகள்களை அனுப்புங்கள்!

பீஷ்மர் தனது இரதத்தில் மூன்று அரச குமாரிகளுடன் செல்லும்போது சால்வ நாட்டு மன்னன் எதிர்ப்படுகிறான்.

பீஷ்மர் சால்வனுடைய வில்லையும் இரதத்தின் சக்கரத்தையும் உடைத்து, அவனை இரதத்திலி ருந்து கீழே உருட்டிவிடுகிறார்–தனது கணைக ளால். அரசகுமாரிகளுடன் அஸ்தினாபுரம் செல்கிறார்.

□□□

சத்தியவதியிடம் அம்பா, அம்பிகா, அம்பாலிகா:

**அம்பா:** தாயே! தங்களிடம் ஓர் உண்மையைக் கூற அனுமதி கோருகிறேன். கங்கையின் மைந்தரின் வருகைக்கு முன்னரே சால்வ நாட்டரசரை நான் என் மணாளனாக ஏற்றுக்கொண்டவள்...

**பீஷ்ம:** அவ்வாறானால் விசித்திர வீரியனின் மனைவியாகும் உரிமை அம்பாவுக்கு இல்லை. இளவரசி! உனக்கு எந்தக் களங்கமும் இல்லாமல், மதிப்பு- மரியாதையுடன் சால்வ மன்னவனிடம் அனுப்பி வைக்கப்படுவாய்!

□□□

சால்வ மன்னனும் அம்பாவும்.

**சால்வ:** நான் இழந்ததை தர்மமாக ஏற்க நான் தயாராக இல்லை. உன்னை என்னிடம் அனுப்பி வைத்ததன் மூலம் பீஷ்மர் என்னை அவமதித்துவிட்டார் என்பதனையும் அவரிடமே போய்க்கூறு!

□□□

அஸ்தினாபுரி அரசவை.

**அம்பா:** கங்கையின் மைந்தரால் நான் அவமானப்படுத்தப்பட்டு விட்டேன். என்னை- என் விருப்பத்துக்கு மாறாகக் கடத்தி வந்த அவர் சால்வ மன்னரிடம் என்னை அனுப்பியிருக்கலாகாது. சத்திரிய தர்மப்படி-என்னைக் கடத்திய அவரே என்னை தன் மனைவி யாக்கிக்கொள்ள கட்டளையிடவேண்டும்! கையில் சுயம்வர மாலையுடன் நின்றி ருந்தபோதே நான் கடத்தப்பட்டேன். என் தங்கையர் இருவரும் தங்களை ஏற்றுக்கொண்டனர். நான் நிர்க்கதியாகி விட்டேன்!

**பீஷ்ம:** பிரமச்சரிய விரதம் பூண்டவன் நான்! என்னால் உன் கோரிக்கையை ஏற்க முடியாது தேவி!

**அம்பா:** கங்கையின் மைந்தர் பீஷ்மர் அவர்களே! காயம் பட்ட பாம்பு, சீண்டப்பட்ட சிங்கம், இழிவு படுத்தப் பட்ட பெண் என்றுமே பழிவாங்காமல் விடுவதில்லை. கவுரவ வம்சப் பெரிய வர்கள்- கவுரவ குல மாமன்னர் முன்னிலையில் இன்று சபதமேற்கிறேன்! பீஷ்மரே! எத்தனை பிறவி எடுத்தாலும் உங்கள் மரணத்துக்கு நானே காலாக இருப்பேன் என்பதை மறக்க வேண்டாம்!

-காட்சி பின்னோக்கு முடிவு-

திஷ்டத்துய்மனிடம் சிகண்டி தனது வரலாற்றினைத் தொடர்ந்து கூறுகிறான்.

**சிகண்:** சபதம் மேற்கொண்ட அம்பா தபோவனங்களில் பல முனிவர்களைக் கண்டு தனது சபதம் ஈடேற உதவுமாறு கோரினாள். முனிவர்கள், பெண்ணொ ருத்தி தன் பிறந்தகத்தில் அல்லது புகுந்தகத்திலே மட்டுமே அமைதி பெற



முனைய வேண்டும் என்று கூறுகின் றனர். அம்பா, தான் அமைதியோ அடைக் கலமோ தேடி வந்தவளல்ல-பழி தீர்க்கும் நோக்குடன் வந்தவள் எனக் கூறுகிறாள்.

-காட்சி பின்னோக்கு-

முனிவர்களுடன் அம்பா.

**அம்பா:** முனி சிரேஷ்டர்களே! நான் காசி நாட்டுக்கோ, சால்வ மன்னனிடமோ மீண்டும் போக முடியாது. இறைவனின் அருள் வேண்டி தவம் இயற்றப் போகிறேன்.

**முனிவர்:** இளவரசி! தவம் செய்வது மிகக் கடுமையான காரியமல்லவா? உன்னால் அதற்கு முடியுமா?

**அம்பா:** தவமியற்றுவது கடுமையானது என்பதனை நான் நன்கு அறிவேன்! எனக்கு வேறு வழி தோன்றவில்லை. அவமானத்துடன் வாழ்வதால் ஏற்படும் வேதனையைவிட தவமியற்றுவதால் வேதனை அடைவதொன்றும் பெரிதா காது மாமுனிவரே!

இதேவேளை ராஜரிஷி ஹோத்ரவாகனர் அங்கு வருகிறார். அவரை வரவேற்ற அங்குள்ள முனிவர்கள் அம்பாவை அறிமுகப்படுத்து கின்றனர்.

-காட்சி பின்னோக்கு முடிகிறது-

□□□

சிகண்டியும் திஷ்டத்துய்மனும்.

**சிகண்:** அம்பாவின் வரலாற்றினைக் கேட்ட ராஜரிஷி ஹோத்ரவாகனர் அதிர்ச்சிக் குள்ளானார்.

-காட்சி பின்னோக்கு-

அம்பாவிடம் ராஜரிஷி உரையாடுகிறார்.

**ராஜ:** மகளே! நான் யார் என்பதை நீ உணரமாட்டாய்! உன் தாய் வழிப் பாட்டன் யான். நீ பரசுராமரிடம் போக வேண்டும்! அவர்தான் உனக்கு உதவுவார். அவர் என் இளமைக் கால நண்பர்!

**அம்பா:** அவரை நான் எங்கே சென்று காண வேண்டும்?

இதேவேளை பரசுராமர் அங்கே தோன்றுகிறார். ராஜரிஷி எழுந்து மரியாதை செய்கிறார்.

**ராஜ:** பிரம்மரிஷி அவர்களே! இவள் எனது பேத்தி அம்பா! இவளுடைய துன்பங் களைப் போக்கும் வல்லமை பெற்ற தங்களிடம் இவளை அனுப்பி வைக்க எண்ணினேன். தாங்களே வந்து விட்டீர்கள்!

**பரசு:** ஆண்டவன் அருள் பாலிப்பான்! உன் பிரச்சனை என்ன மகளே!

**ராஜ:** கங்கா புத்திரர் பீஷ்மர் இவளைக் கடத்திச்சென்றுள்ளார். பின்னர் மணம் முடிக்க மறுத்துவிட்டார்!

**பரசு:** அவ்வாறானால் பீஷ்மர் இவளை ஏற்கத்தான் வேண்டும்!

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்-பீஷ்மரின் அரண்மனை. அந்தணன் ஒருவன் பீஷ்மரிடம், குரு பரசுராமர் வந்திருப்பதாகவும் காண வரவிருப்பதாகவும் கூறுகிறார்.

□□□

பீஷ்மரிடம் பரசுராமர் வருகிறார்.

**பரசு:** காசி நாட்டு இளவரசியை திருமணம் செய்யும் நோக்குடனல்லாமல் வேறு எதற்காகக் கடத்தி வந்தீர்? உமது செயலால் சால்வ மன்னனும் இவளை ஏற்க மறுத்துவிட்டான். துணையின்றித் தவிக்கும் இவள் கரம் பிடித்து சத்திரிய தர்மத்தைக் காக்க வேண்டியது உன் கடமை!

**பீஷ்ம:** குருபெருமானே! இவள் ஏற்கனவே சால்வ மன்னனைக் காதலித்ததாகக் கூறியமையினால் என் தம்பிக்கு இவளை மணம் முடித்து வைக்க முடியாமற் போய்விட்டது. இவளுக்கு எக்களங்க முமின்றி சத்திரிய தர்மப்படியே இவள் காதலனிடம் அனுப்பி வைத்தேன்.

**பரசு:** கங்கையின் மைந்தர் தேவவிரதரே! எனது கோரிக்கையை ஏற்க மறுத்தால் என்னுடன் போர் புரிந்தாக வேண்டும் நீர்!

**பீஷ்ம:** குருநாதரிடம் விவாதித்து விளக்கம் அளிப்பது சீடனுக்கு ஏற்றதல்ல என்பதால் என் நிலையினை தங்களுக் குப் புரிய வைக்க இயலாத நிலையிலுள் ளேன் குருவே!

**பரசு:** அவ்வாறானால் போர் புரியத் தயாரா?

**பீஷ்ம:** குருவாகிய தங்களிடம் நான் போரிடுவதா?

**பரசு:** ஒரு சீடன் ஒழுங்கு முறை தவறி நடந்தாலோ அல்லது குருவின் கட்ட ளையை மீறி நடந்தாலோ அந்த சீடனைத் தண்டிக்கும் உரிமை குருவுக்கு உண்டு! அம்பாவை மனைவியாக ஏற்றுக் கொள் என்று கூறுகிறேன் நான்!

**பீஷ்ம:** தங்கள் கட்டளையினை ஏற்க முடியாத நிலையிலுள்ள என்னை மன்னியுங்கள். அடுத்த கட்டளையான-தங்களிடம் போர் புரியச் சித்தமாயுள்ளேன்! தாங்கள் தனித்து நின்று, உலகனைத்துமுள்ள சத்திரியர்களை வென்றவர் என்பத னையும் அறிவேன். இருப்பினும் குருசிரேஷ்டரே! தங்கள் மாணாக்க னாகிய நான் தங்களுடைய வீரத்தையே மிஞ்சக் கூடிய வல்லமையுடையவன் என்பதனைத் தாங்கள் அறிவீர்கள்!

**பரசு:** ஆகவே, எனது மாணாக்கனுக்கு எத்தகைய கல்வியினை ஊட்டியிருக்கி றேன் என்பதனை இன்று பரீட்சித்துப் பார்க்கப் போகிறேன்! வா ஒரு திறந்த வெளிக்குப் போவோம்!

□□□

பரசுராமர் கால் நடையாகச் செல்ல பீஷ்மர் தன் இரதத்திலேறிச் செல்கிறார். பீஷ்மர் தனது சங்கினை ஒலிக்கிறார்.

**பீஷ்ம:** குருசிரேஷ்டரே! தாங்கள் தரையில் நின்று என்னுடன் போரிடாமல் ஓர் இரதத்தினையும் படைக் கலங்களையும் பெற்றுக்கொள்ளுங்கள்!

**பரசு:** பூமியே என் தேர்! மேகங்களே என் குதிரைகள்! காற்றே என் தேரோட்டி! காயத்திரி, சாவித்திரி, சரஸ்வதி ஆகியோர் எனது படைக்கலங்கள்.

பரசுராமர் பூமியிலிருந்து மேலே கிளம்பி மீண்டும் பூமியில் இறங்குகிறார். பீஷ்மர் தேரிலிருந்து இறங்கி.

**பீஷ்ம:** குருசிரேஷ்டரே! இந்தப் போரில் நானே வெற்றி பெற தாங்கள் எனக்கு வாழ்த்துக் கூற வேண்டுகிறேன்!

**பரசு:** கவுரவ குல முதல்வனே! உனது பண்பு என்னை நெகிழ வைத்துவிட்டது. ஒருவனுடைய வெற்றிக்கு இத்தகைய பணிவே வழிகாட்டும். இந்த முறையில் நீ நடந்திராவிட்டால் நீ என் சாபத்துக் குள்ளாகியிருப்பாய்! எங்கே உன் குருவா கிய நான் வெட்கித் தலைகுனியாதி ருக்க என்னிடமே உன் வீரத்தைக் காட்டு!

இருவரும் ஒருவர் மீது ஒருவர் பாணங்களை ஏவுகின்றனர் எந்த அம்பும் எவரையும் தீண்டவில்லை. ராஜரிஷியுடன் அம்பாவும் யுத்த முனைக்கு வந்து பார்க்கிறாள். ஏனைய முனிவர்களும் அங்கு வருகின்றனர். சிறிது நேரத்தில் இருவரும் காயப்படுகின்றனர். பீஷ்மர் தியானித்து அஸ்வபத்திரம் என்னும் அஸ்திரத்தைப் பெறுகின்றார்.

**ரிஷி:** ராஜரிஷி அவர்களே! அஸ்வபத்திர அஸ்திரத்தை பீஷ்மர் பெற்றுக் கொண்டார்.

**அம்பா:** அந்த அஸ்திரம் என்ன செய்யும்?

**ராஜரிஷி:** இந்த அஸ்திரத்தின் பிரயோகம் பீஷ்மருக்கு மட்டுமே தெரியும். இதனைப் பயன்படுத்தினால் பலராமரின் தோல்வி நிச்சயம்!

பீஷ்மர் அந்த அஸ்திரத்தை பரசுராமர் மீது ஏவுவதற்கு குறிபார்க்கும்போது அசரீரி ஒலி ஒன்று எழுகிறது.

**அசரீரி:** பாரத வம்ச சிரேஷ்டரே அஸ்வ பத்திர அஸ்திரத்தை ஏவி குருவின் கோபத்துக்காளாக வேண்டாம்!

பீஷ்மர் அசரீரிக்கு மதிப்பளித்து அஸ்திரத்தைக் கைவிடுகிறார். அவர்மீது தேவர்கள் மலர்மாரி பொழிகின்றனர்.

**பரசு:** சீடர் திலகமே! உன் வீரத்தால் உன் குருவையே ஜெயித்துவிட்டாய்! மகனே! எவ்வாறானாலும் நானாக இந்தப் போர்க்களத்தைவிட்டு உயிருடன் போவது சரியல்லவே! ஆகவே நீ என்னைக் கொன்றுவிடு; அல்லது நீயாகவே போர்க்களத்தை விட்டுச் சென்றுவிடு!

**பீஷ்ம:** குரு பெருமானே! தாங்கள் இட்ட கட்டளைப்படிதான் நான் தங்களிடம் போரிட்டேன். தாங்களே என்னை போகும்படி பணிப்பதால் நானே வெளியேறுகிறேன்.

-காட்சி பின்னோக்கு முடிகிறது-

□□□

திஷ்டத்துய்மனிடம் சிகண்டி கதையைத் தொடர்கிறான்.

**சிகண்:** இவ்வாறு பரசுராமரையே பீஷ்மர் தோற்கடித்ததும் வேறு எவரையும் நாடாமல் நானாகவே பரிகாரம் தேட நினைத்து தவமியற்றினேன். இதன் பயனாக மறுபிறப்பில் என்னில் பாதி மத்சய நாட்டின் இளவரசியானேன். பாதி அம்பா நதியாகியது. என் இலட்சியம் ஈடேற இது மார்க்கமல்ல என்பதனை உணர்ந்து சிவபெருமானை நோக்கி தவமிருந்து பீஷ்மரின் மரணத் துக்குக் காலாக இருந்த உருவினை அடைய வரம் பெற்றேன்! துருபதனின் அரண்மனையில் முன் ஜன்ம நினை வுடன் ஆணாகப் பிறந்து வளர்ந்துள்ளேன்!

**பின்னணிப்பாடல்:**

முன் ஜென்மப் போதில் நாம் முயல்கின்ற தத்தனையும்
பின் ஜென்ம மெடுத்தே பயனடைதல் வேண்டுவதால்
அம்பாவெனும் பெயரில் அவமானம் தேடிய பெண்
வெம்பகையைத் தான் முடிக்க சிகண்டியென உருவெடுத்தாள்!

-காட்சி மாற்றம்-

பீஷ்மர் தனது கூடாரத்தில் பழைய நினைவு களில் தோய்ந்தவராகப் படுத்திருக்கிறார்.

அவருடைய குரல் பின்னணியில் ஒலிக்கிறது.

**பீஷ்ம:** தாயே! நான் போரை விரும்பவில்லை! போர்தான் ஒரே வழி என்றால் நான் யாரைச் சார்ந்து நிற்பது? பாண்டவர் களையா அல்லது துரியோதனனையா? தயவு செய்து ஒரு தீர்மானத்துக்கு வர எனக்கு உதவுங்கள் தாயே!

**கங்கை:** மகனே! நெருக்கடிகள் நேரும்போது மட்டும் உன் தாயிடம் ஒரு கோழையைப் போல் ஓடி வருகிறாயே! நீ சபதம் ஏற்பதற்கு முன்னரோ, உன் தந்தையிடம் அஸ்தினாபுரத்தைக் காப்பதற்கான பிரதிக்ஞை எடுப்பதற்கு முன்னரோ என்னிடம் கலந்தாலோசித்தா முடி வெடுத்தாய்? நீயே ஏற்றுக்கொண்ட சபதத்தாலும் முடிவாலும் ஏற்படும் பிரச்சனைகளை நீயே தீர்த்துக்கொள்ளப் பழகிக்கொள்.

**பீஷ்ம:** அவ்வாறே செய்கிறேன் தாயே! இனிமேல் அம்மா தாங்களாகத்தான் என்னை நாடி வரவேண்டியிருக்கும்...!

-காட்சி பின்னோக்கு முடிகிறது-

பீஷ்மரிடம் துரோணாச்சாரியார் வருவதாகக் காவலன் கூறுகிறான். அவரை பீஷ்மர் வரவேற்கிறார்.

**பீஷ்ம:** வாருங்கள் ஆச்சாரியர் அவர்களே! என்னைப்போல் தாங்களும் தூங்க முடியாமல் தவிக்கிறீர்கள் என்று கருதுகிறேன்!

**துரோ:** அஸ்தினாபுரத்தின்மீது நல் லெண்ணம் கொண்ட எவரால்தான் இந்த இருண்ட இரவுகளில் நிம்மதியாக உறங்க முடியும்? கண்களை மூடியதும் பாண்டவர்கள் சிறுவர்களாக ஓடி விளையாடித் திரிந்த காட்சிகள்தான் மனக் கண்ணில் நிழலாடுகின்றன. "எங்களை எதிர்த்துப் போராடப் போகின்றீர்களா குரு தேவா?" என்று அவர்கள் கேட்பதுபோல் தோன்றுகிறதே!

**பீஷ்ம:** அந்தக் கனவுகளை மறப்பது கடினம்தான் ஆச்சாரியர் அவர்களே! தங்களுக்கு நினைவிருக்கிறதா? அர்ச்சுனன் ஓடி வந்து என் மடிமீது தாவி ஏறிக்கொண்டு, "பெரியப்பா! பெரியப்பா! அண்ணன் பீமனுடைய பாயாசத்தைத் திருடிக் குடித்துவிட்டேன். அண்ணன் துரத்தி வருகிறான்" என்பான். அப்போது, "மகனே! நான் உனக்கு பெரியப்பா அல்லடா, உன் பெரியப்பாவின் பெரியப்பா என்று கூறுவேனே." அந்தச் சின்னஞ் சிறுசுகள் இன்று முழுமையாக வளர்ந்து விட்டார்கள். அவன் சிறுவனாக இருந்தபோது அவனை அணைத்தது போன்றே இன்று எனது மார்பு அவனு டைய பாணங்களை அணைக்கக் காத்துக் கிடக்கிறது. ஆச்சாரியர் அவர்களே! எனது தளர்ந்து முதிர்ந்த உடலில் அவனுடைய பாணங்கள் வாழ்த்துக்கள் போல் வந்து விழும்!

**துரோ:** அவர்களுக்கும் இது ஒரு பரிசோத னையாகவே விளங்கும் கங்கையின் மைந்தரே! அவர்கள் ஏவும் கணைகளால் என் உடலில் ஏற்படும் புண்கள், நான் ஓர் ஆசிரியனாக ஆற்றிய பணியின் வெற்றியைப் பறையறையப் போகின் றன. அன்றொரு நாள் அர்ச்சுனனிடம் நான் ஆணையிட்டேன்; என்றாவது ஒருநாள் நீ என்னுடன் போரிட நேர்ந்தால்- 'என் குருநாதருடன் எவ்வாறு நான் போரிடப் போகிறேன்' என்று தயங்கிவிடாதே! அவ்வாறு தயங்கு வாயானால், அவ்விடத்திலேயே 'நீ எனக்கு ஏற்ற சீடனாக இருக்கத் தகுதியற்றவன்' என்று சபித்துவிடுவேன்" என்றேன்.

**பீஷ்ம:** ஆச்சாரிய! அர்ச்சுனன் அத்தகைய நிலையினை ஏற்படுத்தப் போவதில்லை என்பது உறுதி!

-காட்சி மாற்றம்-

அர்ச்சுனன் தனது பாசறையில் ஆழ்ந்த யோசனையிலிருக்கும்போது அங்கு பாஞ்சாலி- திரௌபதி வருகிறாள்.

**அர்ச்:** பாஞ்சாலி! நீயா?

**திரௌ:** இங்கு என்னைப் பார்த்ததும் வியப்பாக இருக்கிறதா?

**அர்ச்:** ஆமாம்! இது போர்முனை! இங்கு உனக்கு இடமில்லை! அதனால்தான் உப்பலவயன நகரில் உன்னை இருக்கும் படி விட்டுவந்தோம்!

**திரௌ:** வில்லுக்கு விஜயரான தாங்கள், இந்தப் போர் தங்களுக்கும் தங்கள் சகோதரர்களுக்கும் மட்டுமான போர் அல்ல என்பதனை மறந்து விட்டீர் களோ? தனிப்பட்ட வகையில் எனக்கும் இப்போரில் பெரும் பங்குண்டு! நானே எனது படை! நானே தளபதி! எனது கூந்தலே எனது படைக்கலங்கள்! கதாயுத வீரரான பீமசேனர் துச்சாதனனின் இரத்தத்தை இங்கிருந்து உப்பலவயனம் வரை கைவிடேந்திக்கொண்டு வருவார் என எதிர்பார்க்க முடியுமா? அதற்கி டையில் அக்குருதி அவர் கையைவிட்டு வழிந்தோடி விடுமே! அப்போ தொடர்ந்து என் கூந்தல் அவிழ்ந்தே கிடக்கும். ஆகவேதான் பீமசேனர் குருதியோடு வரும்வரை பாண்டவரின் விடுதியில் காத்திருக்கப்போகிறேன். உங்கள் மூத்த அண்ணனை நான் நம்பப்போவதில்லை. திடீரென அவர் ஞானோதயம் பெற்றவராக "கருணையே கடவுள். ஆகவே மறப்போம் மன்னிப் போம்" என்று உங்களைத் திசை திருப்பி விடுவார்! எனக்கு நேர்ந்த அவமானம் களையப்பட்டு என் கூந்தலை முடியும் வரை உங்கள் ஐவர் மத்தியிலும் தர்மத்தின் வரம்பாக நான் இங்கேயே தரித்து நிற்கப்போகிறேன்.

**பின்னணிப்பாடல்:**

தீயினிலே உதித்து வந்த
தூயவளாம் திரௌபதியாள்
தீயவரின் செயலாலே
தீப்பிளம்பதாகிவிட்டாள்!
அன்றந்த அவை நடுவே
அவிழ்ந்துவிட்ட அவள் கூந்தல்
முடிபடு நாளன்றே தான்
அவளமைதி யடையும் நாள்!

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அருள் ஜுவலர்ஸ்

வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# போராளியின் பெயரில் ஒரு பூங்கா!



Kala

JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11
433686

'கிட்டு' உயிருடன் இருந்தபோது யாழ் மாவட்ட புலிப் பொறுப்பாளராக) ஒரு பூங்காவை நல்லூரில் உருவாக்கியிருந்தார். அவரது நினைவாக புலிகள் உருவாக்கியுள்ள பூங்காவும் நல்லூரில் முத்திரைச் சந்தையில் இருக்கிறது.

போரின் மத்தியில் பொழுதுபோக்குகளை அரிதாகிவிட்ட யாழ் குடாநாட்டு சிறுவர்களுக்கு கிட்டு பூங்கா ஆச்சரியம் தருகிறது. பொழுதுபோக்கோடு கூடவே அங்குள்ள கிட்டுவின் சிலையில், அவரோடு பலியான உறுப்பினர்களது படங்களும் புலிகளைப் பற்றியும் நினைவூட்டுகின்றன. இராணுவத்திடம் கைப்பற்றிய டாங்கி ஒன்றையும் பூங்காவில் நிறுத்திவைத்திருக்கிறார்கள்.

எதனைச் செய்தாலும் தங்களது முத்திரையைப் பதிக்கும் புலிகளது நோக்கம் பொழுதுபோக்கு பூங்காவிலும் பிரதிபலிக்கிறது. இலங்கையின் மிகச் சிறந்த பூங்காக்களில் கிட்டு நினைவுப் பூங்காவும் ஒன்று.



# மனைவி வந்த நேரம்



இந்தியாவில் தெலுங்கு மாநில முதல்வர் என்.டி.ராமாராவ் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் அவரது வாரிசு இளம் மனைவி பார்வதிதான். தமிழக முதல்வர் ஜெயலலிதாவைப் போலவே பார்வதியும் புகழ் மழையில் நனைகிறார். 'தெலுங்கு மாநிலத்தின் சிறந்த பெண்மணி' என்று கட்சிக்காரர்கள் போற்றுகிறார்கள். போற்றுமளவுக்கு அவர் அப்படி ஒரு சாதனையும் செய்யவில்லை. ஆனாலும் காரியமாக வேண்டுமானால் முகஸ்துதி செய்வதுதான் அரசியல் வாதிகளுக்கு பிடிக்கும் என்பதை அவர்களது கில்லாடி ஆதரவாளர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.



பொலிஸ் கமிஷனராக இருந்தபோது ராஜீவ்காந்தியின் கிரண்பேடி. துணிச்சலுக்கு பெயர் போன கிரண்பேடியை மனதில் வைத்துத்தான் 'வைஜெயந்தி ஐ.பி.எஸ்' திரைப் படமும் வந்தது. ஆசியாவில் மிகப்பெரிய சிறைச்சாலை டில்லியில் உள்ள திகார் சிறை. பயங்கரமான குற்றவாளிகள் உள்ள திகார் சிறையை பொறுப்பேற்றார் இந்த துணிச்சல்கார பெண் பொலிஸ் அதிகாரி. என்னே ஆச்சரியம். பயங்கர குற்றவாளிகள் பணிந்து மனம் மாறி

# துணிச்சலின் மறு பெயர்

விட்டார்கள். திலகன், பேரதுமைகள் என்று சிறையை சீர்திருத்தக் கூடமாக மாற்றிவிட்ட கிரண்பேடியை இந்தியப் பத்திரிகைகள் விருந்து பாராட்டுகின்றன. ஆற்ற மாட்டை ஆடிக் கறக்கணும், பாடிற மாட்டை பாடிக் கறக்கணும்' என்று தெரிந்து வியக்க முன்னை துணிச்சல் பெண் கிரண்பேடி. ஆனால் பெண்கள் குற்றவாளிகளை அடக்கவது சிலிர்ப்பில் கூடுதே சாத்தியம் என்று இனி எவரும் சொல்ல முடியாது.

# நீள......வாசிப்பு!



தரம் எப்படியோ ஆனால் அளவில் பெரிய பத்திரிகையின் பெயர் என்னவென்று கேட்டால் கின்னஸ் புத்தகத்தில் உடனே பதில் ரெடி. 1993 ஜனவரி 14ம் திகதி வெளிவந்த 'ஹெற் வோக்' என்னும் பத்திரிகைதான் அளவில் பெரியது. பெல்ஜியம் நாட்டில் இருந்து வெளியானது. அதன் அகலம் 55.9 அங்குலம். உயரம் 39.2 அங்குலம். வெளிவந்தவுடன் 50 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகின.

தென்னிலங்கையில் பேருவளையில் அலுத்கம பொலிஸ் நிலையம் எதிரே இருக்கிறது எனிமல் பார்க். தொழில் அதிபர் மஹாஹிம் மொஹமட் சாதித்துள்ளது நிறைய! அவர்தான் எனிமல் பூங்காவின் சிற்பி. இங்குள்ள புலிகள்-சிங்கங்கள் பழக்கப்பட்ட சாதுக்கள். சிறுவர்கள் அருகே சென்று தொட்டுப் பார்த்து மகிழுகிறார்கள். 4 சிங்கங்கள்,



# பேருவளையில் பேராச்சரியம்



மூன்று புலிகள், 25 முதலைகள், கரடி, மலைப்பாம்பு, மான்கள் மற்றும் பறவைகள் இங்கே உள்ளன. பெரிய உதவிகள் எதுவும் கிடைக்காத நிலையிலும் சிறப்பாக பராமரிக்கிறார்கள். போதிய விளம்பரம் இன்மையால் நாம் அறியாமல் தவறவிட்டுள்ள ஆனால் கட்டாயமாக சென்று பார்க்க வேண்டிய 'மிருகக்காட்சி சாலை' இது.